மின்னல் கீற்று

ஆசிரியர் :

A. முத்துசிவன், B.A., (Hons.)

விரிவுரையாளர் : ம. தி. தா.
இந்து கலாசாலை, திருநெல்வேலி.

நவயுகப் பிரசுராலயம்

காரைக்குடி : : சென்னை.

முதற் பதிப்பு : ஏப்ரல், 1947

விலை ரூ. 1-8-0

24388

உரிமை பதிவு

Printed at Ganesan Press, Tirunelvely
for Navayuga Prachuralayam
P.I.C. M. S. 68-A

பொருளடக்கம்

ஆசிரியர் முகவுரை	
நம்பமுடியுமா ?	1
மின்னல் ஒளி	19
இலக்ஷிய முரண்	28
மகத்தரிசனம்	31
பைத்தியமா இலக்ஷிய வெறியா ?	37
புலி புல்லைத் தின்னுமா ?	44
பாசவலை	48
ஞானியர் கற்பகம்	52
இகமும் பரமும்	54
ஸ்தல யாத்திரை	68
இனம் இனத்தோடே	86
உதிரி நிகழ்ச்சிகள்	90
இசைத்திருப்பணி	97
மகதேவஜய, மகாதேவஜய	105
குறிப்பு	118

இவ்வாசிரியரின் நூல்கள் :—

அசோக வனம்

அசலும் நகலும்

கலிங்கத்துப் பரணி விமர்சனம்

காவ்ய ரசனை

ஆசிரியர் முகவுரை.

பிரும்மாண்டமான யுத்தக்கப்பல் ஒன்று காணப்படு கிறது. மிதக்கும் நகரம் என்று சொல்லலாம். வாய் தவறி மிதக்கும் நரகம் என்றாலும் குற்றமில்லை. ராக்ஷஸ யுத்தத்தின் வெற்றி மந்திரங்களை ஜெபிக்கும் குகைவாய்ப் பீரங்கிகள் அங்கங்கே தரிசனம் வழங்குகின்றன. ஒரு பீரங்கியின் அருள் நிழலிலே வணங்கிய தலையினராக இரு வர் நிற்கின்றனர். அவர்களுடைய கோரிக்கை சித்தியாக வேண்டுமென்றால் பீரங்கிகளைத் துதிப்பது மட்டிலுமே போதும். ஆனாலும் நம்பிக்கை இல்லை. கடவுள் சகாயத்தை நாடி வழிபாடு செய்யவேண்டுமாம். அதற்காகத்தான் நிற் கின்றார்கள். வேறு யாரும் இல்லை. சர்ச்சிலும் ரூஸ்வெல்ட் டுந்தான். பத்திரிகையில் இந்தப்படத்தை அநேகர் பார்த் திருக்கலாம்.

எமன் அவதாரம் போன்ற கருவிகள் எண்ணிறந்தன படைத்தும், வெற்றிக்கு வித்து விமலன் துணையேஎன்பதை நம்பித்தான் இருவரும் நிற்கின்றனர். இத்தனை விஞ்ஞான முதிர்ச்சி நாளிலுங்கூட கடவுள் நம்பிக்கைக்கு இடம் இருக் கிறது! மனத்தை நாகரிகப்படுத்தாது மிருகத்தனத்தையே நாகரிகப்படுத்தும் இந்தக்காலத்திலும் கடவுள் நம்பிக் கைக்கு இடம் உண்டு என்றால், அதனைப்பற்றிய செய்தி எதுவாக இருந்தாலும், தைரியமாக வெளிப்படுத்தலாம். அப்படிக்கு வெளிப்படுத்தும்படியான தெம்பு தாராளமாக ஏற்படத்தான் செய்கின்றது.

இன்று நாம் அறிந்து பாராட்டி வரும் அநேக உண்மைகளின் சொந்தக்காரர் நாமில்லை. பூமி சுற்றுவே செய்கிறது, நிலையாக நிற்கவில்லை என்ற உண்மையை நாம் தெரிந்து கொண்டது ஒரு விஞ்ஞானியின் மூலமே. பூமிக்கு ஆகர்ஷண சக்தி உண்டு என்பதைத் தெரிந்துகொண்டதும் மற்றொரு விஞ்ஞானியின் மூலமே. அம்மாதிரியே கடவுள் உண்மையைத் தெரிந்துகொண்டதும் ஒருசில ஞானிகளின் மூலந்தான். கடவுள் பல காலங்களில், பலர்மூலம், பலமுறையில் தம்முடைய உண்மையை வெளிப்படுத்துகின்றார். "God has spoken by the prophets at Sundry times in diverse manners" என்பது அறிஞர் கொள்கை. உண்மையும் அதுதான்.

இவ்வாறு கடவுளால் தேர்ந்தெடுக்கப்படும் பெரியோர்களே நாயன்மார்கள், அவர்களே தீர்க்கதரிசிகள், அவர்களே ஆழ்வாராதிகள். இன்னும் அவர்களே மஹாத்மாக்கள். மனித ஜாதிக்குள் அவர்களுடைய திருக் கூட்டமே தனி. அத்தகைய திருக்கூட்டத்திலுள்ள ஒருவரைப்பற்றிச் சொன்னால் தற்கால உலகம் விரும்பாது. ஏனென்றால் அது காலஇயற்கை. எனினும் விரும்புவதற்குரிய அந்தஸ்து இருக்குமானால் அதனால் தோஷமா?

தனவைசிய மக்கள் வாழும் பதிகளுள் ஒன்று காரைக்குடி ... காத்தான் என்பது. ஏறக்குறைய ஐம்பது வருஷங்களுக்கு முன்னால் ஒரு சம்பவம் நிகழ்ந்தது. மிகுந்த தனம் படைத்த செட்டியார் தம்பதிகள் இருவர். ஊரைச் சொன்னாலும் பெயரைச் சொல்லக்கூடாது என்பார்கள்.

ஆகவே பெயரைச்சொல்லாது விடுகின்றேன். அவர்களுக்கு ஒரே பெண்குழந்தைதான் உண்டு. மங்கைப்பருவம் எய்தியும் சுகபோகங்களை அனுபவிக்கும் உரிமைக்கு இடமில்லாதபடி கடுத்து வந்தது ஒரு வியாதி. காக்கை வலிப்பால் பெண்ணும், பெண்காரணமாகப் பெற்றோர்களும் பட்ட உடல் துன்பத்திற்கும் மனத்துன்பத்திற்கும் அளவே கிடையாது. விதியை எளிதில் வென்றுவிட முடியுமா?

ஒருநாள் பெண்ணின் தகப்பனாருக்கு ஒருசெய்தி எட்டுகிறது. பக்கத்திலுள்ள புதுக்கோட்டைக்கு ஏதோ ஒரு சிவபக்தர் வந்திருப்பதான செய்திதான் அது. ஓடோடிப்போனார். தமது மனவருத்தத்தையெல்லாம் பக்தரிடம் கொட்டி, எந்தவிதத்திலாவது அருள் செய்யவேண்டும் என்று வணங்கி வேண்டினார். என்ன எண்ணினாரோ தெரியவில்லை பக்தரும் உடனே புறப்பட்டுவிட்டார்.

எப்பொழுதும் வந்து சிறிதுகாலமே நீடித்திருக்கும் வியாதி, பக்தர் வரும் சமயம் மூன்று தினங்கள்வரை நீடித்துவிட்டது. தன்னறிவு அற்றவளாய், ஒருவேளை இறந்துதான் விட்டாளோ என்று சந்தேகிக்கும்படியான நிலையில் கிடந்த பெண், பக்தருடைய அருள்வலியால் அன்றோடு வியாதி நீங்கப்பெற்றவளாய்க் கண்விழித்துவிட்டாள். போதாக்குறைக்கு அவருடைய அருளால் அவளுடைய வாழ்க்கையும் சிறந்துவிட்டது. அதிசயந்தான். ஏனென்றால் எல்லோராலும் செய்யக்கூடிய காரியம் இல்லை. இப்படியான காரியங்கள் ஒன்றில்லை, இரண்டில்லை; பல செய்து பக்தி வீரியத்தைக் காட்டியதோடு, ஆன்மத் தெளிவைக் கூட்டிவைக்கும் எத்தனையோ பல உண்மை

களையும் பண்கலந்த பதிகச் செஞ்சொற்களின் மூலம் அந்த மகான் விளக்கித் தந்திருக்கின்றார்.

லௌகிக மேகங்கள் மண்டிச் செறிந்த வானவெளியிலே இப்படியான தெய்வீக மின்னல்கீற்று ஒன்று பத்தொன்பதாம் நூற்றாண்டில் வெளிப்படுவதென்றால், இன்னும் வெளிப்படுவதோடு நில்லாது, நாம் வாழும் இருபதாம் நூற்றாண்டின் நுனியையும் தொட்டு மறைவதென்றால், அது அதிசயந்தான். அந்த அதிசயத்தின் விளக்கத்தை நூலின் உள்ளே பார்ப்போமா?

ஆ. முத்துசிவன்

I. நம்பமுடியுமா ?

சாதாரணமான ஒரு பொருளினிடத்து ஏதாவது ஓர் அசாதாரணமான தன்மையைக் கண்டுவிட்டால், ஆச்சர்ய உணர்ச்சி ஏற்பட்டுவிடும். அப்படி ஏற்படுவது இயற்கை தான். "அம்பி, கோயிலுக்குப் போவோமா?" என்று தாயார் கேட்கும்போது, கூப்பிடாமலே தாயார் போகும் இடமெல்லாம் தானும் போகவேண்டுமென்று வாதாடுகிற குழந்தை, 'போவோமா' என்று கேட்டால் சும்மாவா இருக்கும்? புறப்படத்தான் செய்யும். செல்லக் கைகளைப் பற்றிக்கொண்டு, கரம் கூப்பித் தொழும் வித்தையை ஒரு முறைக்கு ஏழு முறை தாயார் கற்பிப்பாள். அத்தனை பயிற்சிக்குப் பிறகு குழந்தை கைகூப்பித் தொழுவதைக் கண்டுவிட்டால், தாயாருடைய மகிழ்ச்சிக்கு அளவு கிடையாது. பக்கத்திலுள்ளவர்களும் பார்த்துவிட்டு, "என்ன! இந்தக்குழந்தை இத்தனூண்டு கையை உசத்தி என்னமா தரிசனம் செய்யுது" என்று வியந்துகொள்வார்கள் ஆனால் தாயாரும் சொல்லிக்கொடுக்கவில்லை, வேறுயாரும் சொல்லிக்கொடுக்கவில்லை, தானாகவே கைகூப்பித் தொழ ஆரம்பித்துவிடுகிறது என்றிருக்குமானால், சற்றுகவனிக்கக்கூடிய காரியந்தான் அது. தொழுவதோடு நின்றுவிடவில்லை. இன்னும கன்னு பின்னு என்று வாய்க்கு வந்த மழலைத் துணுக்குகளையெல்லாம் உதிர்த்து, கரதாளமிட்டு பாட்டுப் பாடி பக்தி செலுத்த ஆரம்பித்துவிட்டால், அதிசயப் படுவதைத் தவிர வேறு என்ன உண்டு?

பாலகனாக இருக்கின்றான் மகன். பொறுக்க முடியாத குறும்பு செய்கின்றான். வேதனை தீருவதற்காகவேண்டி

பையினில் சில பக்கங்களைக் குறிப்பிட்டு மனப்பாடம் செய்யச் சொல்லுகிறாள் தாயார். பையனும் சம்மதித்து விடுகிறான். சொல்லி வாய்மூடிய தாயார் மாடிப்படி ஏறும் போது பையன் குறிப்பிட்ட பகுதிகளைப் பாராமலே சொல்லிக்கொண்டு தாயார் பின் மாடிப்படி ஏறுகின்றான். இந்த அதிசயத்தைச் செய்தவர் பிரபல ஆங்கில எழுத்தாளரான டாக்டர் ஜான்சன்என்பவர். பதினொரு வயதுள்ள பாரதியைப் பார்த்து "ஏண்டா அம்பி, என்னவோ, ஆ, உர், அல்லேமாக் என்றெல்லாம் புலம்புகிறாய். அண்ணாமலை ரெட்டியார் காவடிச்சிந்தைப் போல உன்னால் பாட முடியுமாடா?" என்று சில பெரியோர்கள் கேட்கிறார்கள். துளி நேரத்தில் பாரதியார் தாம் எழுதிய காவடிச்சிந்தைப் பாடிக் காட்டுகிறார். அண்ணாமலை ரெட்டியாருடைய காவடிச் சிந்தை முதுகுமண் காட்டும்படி அமைந்துவிடுகிறது பாரதியாரின் சிந்து. இப்படி இன்னும் அடுக்கிக்கொண்டே போகலாம். மகானுக்குரிய அறிகுறி நாளும் கிழமையும் நல் ஓரையும் பார்த்து, தபால் பார்ஸல் வந்தமாதிரி வந்துவிடப் போகிறதில்லை. விளையும் பயிர்தான் முளையிலே தெரியுமே

பெரியவர்களுடைய பால்ய வாழ்க்கையை அலசிப் பார்த்தால், யானையின் வருகையை அறிவிக்கும் மணியோசை போன்று, பின்னீடு மகத்தான உருவெடுத்து நிற்கும் பெருமைக்குக் கட்டியங் கூறும் சம்பவங்கள், குணபாவங்கள், சூழ்நிலைகள் ஆகிய இவைகள் அமைந்து கிடப்பதைக் காணலாம்.

ஒரு பையன். ஐந்து வயதுடைய பையன். பெற்றோரும் உற்றாரும் வியக்கும்படி அதிசய மணம் கமழும் செயல்

களைச் செய்தவன். இப்பொழுது அவர்களுடைய வியப்பு. எல்லையைத் தாண்டி உலகத்தையே தான் நிகழ்த்தும் அதிசயத்திற்கு எல்லையாக மாற்றுகிறான். அந்த வைபவத்தைப் பார்ப்போம்.

சுமார் இரண்டரை வருஷங்களுக்கு முன்னால் ஒரு நாள் ஆழ்வார்திருநகரி ரயில்வேஸ்டேஷனில் ஒரு பெண்மணி நிற்கின்றார். ரயில் வந்துகொண்டிருக்கிறது. கிட்டத்தட்ட 80 வயதுக்கும் மேற்பட்ட ஒரு அந்தண குலக் கிழவி, கோலூன்றிக்கொண்டு அப் பெண்மணியின் அருகே வந்தாள். "அம்மா, நீங்க பெரியவா பேத்தியாமே. உங்களை சேவிக்கிறேன்" என்று சொல்லி வயதின் எல்லையையும் கவனியாது குழைந்து வணக்கம் செலுத்தினாள். "ஐயோ பாட்டி, நீர் எத்தனை பெரியவர். நான் எத்தனை சிறியவள். இப்படிக் கும்பிடலாமா?" என்றார் அந்தப் பெண்மணி. பார்த்துக் கொண்டிருந்த எங்களுக்குத் தூக்கிவாரிப் போட்டுவிட்டது. விஷயம் என்ன? இதோ பார்ப்போம்.

திருநெல்வேலிக்குக் கிழக்கே 7 மைல் தூரத்தில் கருங்குளம் என்ற ஊர் இருக்கிறது. அங்கே ஒரு குன்று உண்டு அதன்மீது ஒரு கோயிலும் உண்டு. சிறந்த ஸ்தலம். சுவாமி பெயர் மார்த்தாண்டேச்வரர். சில வருஷங்களாக அங்கே மழை கிடையாது. குடிஜனங்களுடைய உள்ளத்திலெல்லாம் ஒரே வருத்தந்தான் குடி கொண்டிருந்தது. அறப்பணிகள் நின்றுவிட்டன. அறப்பணி செய்யும் உள்ளமும் சாம்பிவிட்டது. குழந்தை பக்தனுக ஐந்து வயதிலேயே காதாளம் இட்டுக் கனிந்த மழலையில் கவி

தொடுத்த சிலர், இப்பொழுது தக்கவயது வந்தவராக அங்கே விஜயம் செய்திருந்தார். ஈச்வரபக்தியோ கனிந்து நிற்கிறது. பக்தி வடிவமாகவே காட்சி அளிக்கின்றார். சிலருக்கு மட்டிலும் அவருடைய தோற்றத்திலும் இயல்பிலும் நம்பிக்கை உண்டு. பலருக்கும் 'இதெல்லாம் வெறும் வேஷம்' என்ற தெளிவான எண்ணம். ஆனாலுங்கூட அவருடைய தோற்றம் 'இவரைக் கொஞ்சம் சோதனை செய்துதான் பார்ப்போமே' என்ற ஆசையைத் தூண்டக் கூடியதாகக் காணப்பட்டது. ஆகவே எல்லோருங் கூடி பக்தரை அண்டி, "சுவாமி மழை இல்லை ஐந்தாறு வருஷங்களாகப் பயிர்களெல்லாம் தீய்ந்துபோய்விட்டன. ஈச்வர கிருபை இல்லை. தங்களுடைய அருள் கிட்டினால், நாங்கள் எல்லோரும் தங்கள் அடியவர்களாக அமர்ந்து ஈச்வர கைங்கர்யத்தை விடாது செய்வோம்" என்றார்கள்.

பருவ காலங்களில் மழை தட்டினால் அந்த ஊர்வாசிகள் வர்ணஜெபம் செய்வார்கள். ஏதோ அப்படியான செயலின் காரணமாக மழையும் பெய்திருக்கிறது. ஆனால் தற்போது ஒன்றும் பலிக்கவில்லை. ஒருவேளை பக்தருடைய பெருமையை உலகத்திற்கு எடுத்துக் காட்ட வேண்டுமென்று இயற்கையே சூழ்ச்சி செய்ததுபோலும்! மக்களுடைய முறையீட்டின் உண்மையை உணர்ந்து, ஆலயத்தில் எந்த இடத்தில் அமர்ந்திருந்தாரோ, அந்த இடத்தில் இருந்துகொண்டே ஆண்டவன் மீது பாடல் தொடுக்க ஆரம்பித்து விட்டார். ஆனந்தமாக ஒரு பதிக அளவில் முடிந்தது அவருடைய பிரார்த்தனை.

அன்று அபூர்வமான மழை. அதிலுங்கூட ஒரு அதி

சயம் அந்தக் கருங்குள எல்லேக்குள் மட்டிலுந்தான் மழை. "என்று மழையின்றி உங்கள் பயிர்கள் வாடத் தொடங்குகின்றனவோ அன்று, நீங்கள் அனைவரும்கூடி சுவாமிக்கு அபிஷேகம் செய்யவேண்டும். நீங்கள் கொட்டும் திருமஞ்சனநீர் வழிந்துசென்று பக்கத்திலுள்ள தாமிர வர்ணித் தீர்த்தத்தோடு கலக்க வேண்டும். அப்போது கண்டிப்பாக மழை பெய்யும்" என்று, தற்சமயம் செய்த உதவியோடு, நிலேயான ஒரு வரத்தையும் அந்த ஊர்வாசிகளுக்கு அருளி மகிழ்ந்தார். பக்தருடைய பக்தி மகிமையில் நம்பிக்கை கொள்ளத் தயங்கினவர்களும் உள்ளூற மறுத்தவர்களும், பெரிய அபசாரம் செய்தவர்களாக எண்ணி, அதற்கு மறைமுகமாகப் பிராயச்சித்தம் செய்கிற ரீதியில், விழுந்து விழுந்து நமஸ்காரம் செய்தார்கள். ஊரார் அனைவருமே சிஷ்ய கோடிகளாகத் திரண்டு விட்டனர். இன்றும் அந்தஊரார் பக்தர்மீது பக்தி செலுத்தும் உரிமையை அரியதொரு பொக்கிஷமாகவே பாராட்டி வருகின்றனர்

மேலே குறிப்பிட்ட சம்பவம் உண்மையிலேயே ஒரு அதிசயமான சம்பவம் காலநிலேயை உத்தேசித்தால் அதிசயஉணர்ச்சி இன்னும் அதிகப்படியான அழுத்தத்தையே பெறுகின்றது. கடவுளே முறையாகத்தர்க்க வலேக்குள் பிடித்துவிடலாமா, ரஸாயனத் துலாக் கோலில் இட்டு எடைகட்டிவிடலாமா, அல்லது கண்ணுடிச் சிமிளுக்குள் அடைத்துத்தான் விடலாமா என்றெல்லாம் ஆராய்ச்சி செய்கிற காலமல்லவா இது? இம்மாதிரியான விஷயங்களேக் கேட்கும்போது கடிகார ரக்கு (Pendulum) மாதிரி நம்பிக்கை அவநம்பிக்கை ஆகிய இருமுனைகளையும் தொட்டு

மனது ஊசலாடத்தான் செய்கின்றது. "ஏதோ குருட்டுப் பூனை விட்டத்தில் பாய்ந்த மாதிரி ஒரே ஒரு அதிசயத்தை அகஸ்மாத்தாகச் செய்துவிட்டார். இதை நம்புவது எப்படி? குருவியும் ஏறிற்று, பனம்பழமும் விழுந்தது என்ற மாதிரி பக்தரும் ஏதோ பாடினார், தற்செயலாக மழையும பெய்தது" என்பதாக எண்ணியும் சொல்லியும் அலட்சியம் செய்யத்தான் மனது முனையும். காலப்போக்கும் அப்படித் தான். அதனையும் அவமதிக்க முடியாது. இயேசு கிறிஸ்து நாதர் தம்முடைய அருட் கரத்தால் வியாதியஸ் தர்களைத் தொட்ட அளவிலேயே வியாதி மறைந்து விட்டது என்ற கதையை நம்புவாரும் உண்டு, நம்ப மறுப் பாரும் உண்டு. நம்புவது கஷ்டம் என்றே வைத்துக் கொள்வோம் அபூர்வமாக ஒரே ஒரு சம்பவத்தைக் கொண்டு நம்ப மறுத்தாலும், யாரும் அதிசயிக்கும்படி பல சம்பவங்கள் நிகழ்ந்தால், அவற்றை ஒருவருடைய அபார அல்லது அமானுஷ்ய சக்தியின் விளைவு என்று கொள்ளவேண்டுமே யொழிய வேறு எவ்விதமாகக் கொள் வது? சில அதிசய சம்பவங்களைப் பார்ப்போம்.

திருவனந்தபுரத்தில் கரமனை என்ற இடத்தில் சமீப காலம்வரை உயிர்வாழ்ந்து பிரிந்த ஒருவர் உண்டு. அவருடைய பிள்ளைத் திருநாமத்தைச் சொன்னால் யாருக்கும் தெரியாது. ஆனால் ஸ்ரீமான் 'மொட்டைமாமா' என்றால் அநேகருக்குத் தெரிந்துவிடும். அவருடைய பால்யப் பருவத்தில் ஒரு சம்பவம் நிகழ்ந்தது. ஒரு நாள் ஊரில் நடமாடி வந்த காலரா நோய்க்கு இரையாகி, ஒரு குலத்துக்கு ஒரு மைந்தனாக இருந்த அவர், சிவலோக யாத்திரைக்குச் சித்தமாகிவிட்டார். தாயும் தகப்பனும்

முட்டி மோதி அலறிப்புடைக்கின்றார்கள். போகின்ற பிள்ளையின் உயிரைத் தடுப்பதற்காக இல்லை, அதோடு தங்களுடைய உயிரையும் கொண்டு போய்விடவேண்டும் என்றுதான். எமனிடம் அவர்கள் கேட்டவரம் அதுதான். எட்டுத்திசையும் முட்டி எழுகின்றது ஏங்கி அழுங்குரல். கருங்குள அதிசயகர்த்தாவாகிய பக்தருக்கு இதுவிஷயம் எட்டிற்று. உடனே ஸ்தலத்திற்கு வந்தார். வந்து சட்டென்று பையனைத் தூக்கிக்கொண்டு ஒரு தனி அறைக்குச் சென்றார். கொஞ்சநேரம் கழிந்ததும், "அம்மா குடிக்கக் கஞ்சி" என்று கேட்டுக்கொண்டு சீராளன் மாதிரி வந்துவிட்டார் ஸ்ரீமான் 'மொட்டை மாமா'. தாம் சாகும் வரை தமக்கு உயிர்வரம் கொடுத்த பக்தரை மறந்தாரில்லை. மறக்கத்தான் முடியுமா?

சுவாமி விவேகானந்தர் வாழ்க்கையில் நிகழ்ந்த ஒரு அதிசய சம்பவத்தைப் பற்றிக் கேள்விப்படுகிறோம். ஒரு நாள் நீராடியபின்னர் தாம் அணிந்திருந்த ஈர ஆடைகள் அனைத்தையும் காட்டுப்பக்கமாகச் சென்று மனித சஞ்சாரம் அற்ற இடத்தில் உலர்த்திக்கொண்டிருந்தாராம். திடீரென்று அங்கே சில குரங்குகள் வந்து அத்தனை ஆடைகளையும் பறித்து இழுத்துக்கொண்டு ஓடிவிட்டன வாம். இதை அறிந்த விவேகானந்தர் தமக்கு ஏற்பட்ட ஈன நிலையை எண்ணி மனம் வருந்தினார். போதாக் குறைக்கு தாங்கமுடியாத பசித்துன்பமும் அவரை வாட்டத் தொடங்கிவிட்டது. வெறும் நிர்வாண நிலையில் காட்டைத் தாண்டி ஊருக்குள்ளே வரவும் வழி இல்லை. பாவம், தவிக்கிற வேளை. அப்போது வழிப்போக்கன் ஒருவன் தற்செயலாக அங்கே வந்து அவருக்கு உணவும்

உடையும் கொடுத்து உதவினும். சுந்தரமூர்த்திநாயனார் வாழ்க்கையிலும் இவ்வாறான உணவு நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றது. சுவாமி விவேகானந்தர் தாம்பெற்ற அரிய உதவியை ஆண்டவனுடைய அருள் லீலையாகவே மதிக்கின்றார். வடநாட்டில் நிகழ்ந்த அதிசயம்போல் தென்னாட்டிலும் ஒன்று நிகழ்ந்தது.

கருங்குள அதிசயகர்த்தாவாகிய பக்தர் ஒரு நாள் திருவனந்தபுரத்திலிருந்து சிலருடன் வள்ளியூர் நாடி வந்துகொண்டிருந்தார். இடையே நாகர்கோவிலைத் தாண்டி தோவாளை என்ற ஊர்ப்பக்கமாக வரும்போது நல்ல காலை வேளை.

"புல்லை நகையுறுத்தி, பூவை வியப்பாக்கி,
மண்ணைத் தெளிவாக்கி, நீரில் மலர்ச்சிதந்து
விண்ணை வெளியாக்கி விந்தை செயும்"

ஜோதி சொரூபனுடைய தோற்றத்தையும், அவன் விரிகதிர் பரப்பி எங்கும் வெண்ணமுதப் பிரவாகத்தைப் பெருக்கும் விந்தையையும், இயற்கை அன்னை களிகூர்ந்து காட்டி மகிழும் வர்ண லீலைகளையும் பக்தர் கண்டார். பரமானந்தம் கொண்டுவிட்டார். பலதிறப்பட்ட அற்புதத் தோற்றங்களிலும் விசேஷமாக அவருடைய மனதைக் கவர்ந்த தோற்றங்கள் சில. எங்கு பார்த்தாலும் ஒரே அரளிக்காடு. பார்வை எட்டிய தூரமெல்லாம் அரளி விருந்து. அவர் நின்ற இடத்தின் அருகிலோ ஆனந்தமான புல்மேடு. அதன் பக்கத்தில் தெளிந்த நீரோட்டம். கேட்கவா வேண்டும்? மகிழ்ச்சிப் பிரளயந்தான் பக்தர் மனதுக்குள்ளே. வான் தவந்தான்.

திவ்யமான மலர்களைக் கண்டதும் அத்தனையும் சிவனுக்கு என்று இராவணன் அர்ப்பணிக்கவில்லையா? இலக்ஷிய வடிவான காதலன் தான் காணும் பொருள் மீதெல்லாம் காதலியின் சாயலையே காணபதில்லையா?

"கோடும் குளமும் குளத்தருகே
நிற்கின்ற குன்றுகளும்
காடும் செடியும் அவளாகத் தோன்றும்
என் கண்களுக்கே"

என்று ஒருவன் புலம்புகின்றானே.

"செறித்த திரைக்கடலில் நின்முகங் கண்டேன்;
நீல விசும்பினிடை நின்முகங் கண்டேன்;
திரித்த நுரையினிடை நின்முகங் கண்டேன்;
சின்னக் குமிழிகளில் நின்முகங் கண்டேன்;
பிரித்துப் பிரித்து நிதம் மேகம் அளந்தே
பெற்றதுன் முகமல்லால் பிறிதொன்றில்லை"

என்று இன்னுமொரு காதலன் இசைக்கின்றானே. காட்டிலே இருக்கும் இராமனும் சீதையும் தங்கள் முன்னே தோற்றமளித்த அன்னத்தையும் யானையையும் கண்டு என்ன எண்ணுகின்றார்கள்? அன்னத்தின் நடையில் இராமன் காணுவதெல்லாம் சீதையின் நடையைத்தான். யானையின் நடையில் சீதை காணுவதெல்லாம் இராம னுடைய நடையைத்தான். அப்படியல்லவா இருவர் உள்ளத்திலும் காதல் செறிந்திருக்கிறது! ஒருவர் கண்ணைக்கொண்டு ஒருவர் பார்க்கும்படியான உள்ளன்பல் லவா நிறைந்திருக்கிறது!

"ஒதிமப் ஒதுங்கக்கண்ட உத்தமன் உழையளான
சீதைதன் நடையை நோக்கிச் சிறியதோர் முறுவல்செய்தான்;
மாதவள் தானும் ஆண்டு வந்து நீர் உண்டுபோகும்
போதகம் நடப்ப நோக்கிப் புதியதோர் முறுவல் பூத்தாள்."

இதோ மேட்டு நிலத்திலே, தினைப்பயிர் விம்மி விளையும் காட்டிடத்தே நிற்கின்ற குறமகள் கானமயில் வரக் காண்கின்றாள்.

"மேட்டு நிலத்தினிலே தினைப்பயிர் விம்மி விளைகையிலே
காட்டுமயில் வரவே குகனும் என் காதல்விளைத்தானடி"

என்றுதானே அவள் புலம்புகின்றாள். வைஷ்ணவ பக்தையாகிய ஆண்டாள் மேகங்களைப் பார்த்து எவ்விதமான பாவனை கொள்கின்றாள்? என்னவிதம் வேண்டுகின்றாள்?

இதோ அவளே தெரிவிக்கின்றாள்.

"ஆழி மழைக்கண்ணா, ஒன்று நீ கைகரவேல்;
ஆழியுள் புக்கு முகந்துகொடு, ஆர்த்தேறி,
ஊழிமுதல்வன் உருவம்போல் மெய்கறுத்து,
பாழியந் தோளுடைப் பற்பநாபன் கையில்
ஆழிபோல் மின்னி வலம்புரிபோல் நின்றதிர்ந்து,
தாழாதே சார்ங்கம் உதைத்த சரமழைபோல்
வாழ உலகினில் பெய்திடாய்; நாங்களும்
மார்கழி நீராட மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்"

மழையே வா. எங்கள் கண்ணனைப்போல் வா.
அவன் கைச்சக்கரம்போல் மின்னிட்டு வா.
அவனுடைய இடங்கைச் சங்குபோல இடியெதிர்ந்து
முழங்கிவா. அவனுடைய கையில் தெறிக்கும்
கணைமழைபோல் பொழியவா என்று அழைக்கும்
அழைப்பிலும் இதயம் எவரிடத்திலே பதிந்திருக்கிறது?

ஆகவே பாவனை முதிர்ந்துவிட்டால், எந்தப் பொருளால் பாவனை முதிர்ச்சி அடைகிறதோ, அந்தப் பொருளின் தோற்றமே பாவிக்கின்றவர்களுக்கு எவ்விடத்திலும் தோன்றும். இலைகளோடும் கிளைகளோடும் தோன்றும் பலாமரம் நமக்கு வெறும் பலாமரமாகவே தோன்றும். கூசாமல் வெட்டி, அறுத்து, பலகையாக்கி, விற்பனையும் செய்துவிடுவோம். ஆனால் பக்திப்பாவனை முதிர்ந்த ஒருவனுக்கு அதே பலாமரம் வேதங்களாய்த் தோன்றும். சிவலிங்க சொரூபங்களாய்த் தோன்றும்.

"இலைகளாய்க் கிளைத்தபலகொப்பெல்லாம்
சதுர்வேதம்; கிளைகளீன்ற
கலையெலாம் சிவலிங்கம்; கனியெலாம்
சிவலிங்கம்; கனிகளீன்ற
சுளையெலாம் சிவலிங்கம்; வித்தெல்லாம்
சிவலிங்க சொரூபமாக
விளையுமொரு குறும்பலவின் முளைத்தெழுந்த
சிவக்கொழுந்தை வேண்டுவோமே."

இப்படியான அனுபவங்களெல்லாம் பாவனை முதிர்ச்சி நிறைந்த உள்ளங்களின் அனுபவங்கள்.

இனி தோவாளையில் தங்கிய பக்தருடைய அனுபவத்தையும் அவருடைய பெருமையின் பயனாக நிகழ்ந்த அதிசய சம்பவத்தையும் கவனிப்போம். அரளிப் பூக்களையும் புல்மேட்டையும் நீரோட்டத்தையும் கண்டவுடன் "ஆஹா, பூஜைக்கு எவ்வளவு பக்குவமான இடமடா இது" என்று வியந்தவராக உடனே பூஜைக்கு ஏற்பாடு செய்ய ஆரம்பித்துவிட்டார். கூட வந்தவர்கள் ஒருவரை ஒருவர்

பார்க்க ஆரம்பித்தனர். 'இரண்டுங் கெட்டாற்போல இவர் இப்போ பூஜைக்கு உட்கார்ந்தால் எழுந்திருக்கிறது எப்போ? நமக்குச் சாப்பாடு எப்போ? ஒருவழியுந் தெரிய வில்லையே' என்று தயங்கினார்கள். பாவம் மண்ணுலகப் புழுக்களுக்கு வயிற்றுக் கவலைதான் பெரிது. இலக்ஷியம், இலக்ஷியவெறி, கர்மவீரம் எல்லாம் ஒரு சிலருக்குத்தான். அவர்களுக்கு மெய்வருத்தம் தெரியுமா? பசி தெரியுமா? கண்தான் தூஞ்சுமா? கொள்கை, கர்மம். கர்மம், கொள்கை. இவைதாம் அவர்களுக்கு. பக்தர் பூஜைவெறியிலே முனைந்துவிட்டார். ஒருவர் மெள்ளவந்து "நாழிகை ஆயுடுமே. சாப்பாட்டுக்கு ஏற்பாடு செய்யவேண்டாமா" என்றார். "அதெல்லாம் ஒரு குறையும் வாராதடா" என்று உறுதிசொல்லிவிட்டு பூஜையில் ஆழ்ந்துவிட்டார். பக்திவெள்ளத்தில் அவருடைய மனம் மிதக்க ஆரம்பித்து விட்டது. கொஞ்சநேரம் கழிந்ததும் விவேகானந்தருக்கு நேர்ந்த அனுபவமே இங்கேயும் நிகழ்ந்தது. ஏதோ ஒரு வழிப்போக்கன். காவடி கட்டி இரண்டு பாத்திரங் களும் ததும்ப அருமையான பால் கொண்டுவந்தான். வந்தவன் பக்தர் பூஜை செய்யும் பெருமையை இமைகொட் டாமல் பார்த்துக்கொண்டே நின்றான். பாலை எங்கே எடுத்துச்செல்ல முற்பட்டானோ தெரியாது. மனத்தில் என்ன எண்ணினானோ அதுவும் தெரியாது. "உங்களுக் குத்தான் பால்" என்று சொல்லி அப்படியே பால் அனைத் தையும் அவர்களுக்குக் கொடுத்துவிட்டு, பக்தரைப் பார்த்து வணக்கமும் செலுத்திவிட்டு அப்பாலே போய் விட்டான். "என்னடா இது! காமதேனு வழி நடந்த மாதிரி வந்து பாலைக் கொட்டிவிட்டுப் போகின்றானே! எங்குள்ளவன்? யார்? எல்லாம் அவன் அருள்" என்ப

தாக எண்ணி, அகங்குழைய வாழ்த்தி, தங்களுடைய சிறுமையையும் பாராட்டிவிட்டு வேண்டுமட்டும் பாலைக் குடித்தார்கள்.

இதுகூட அவ்வளவு பெரிதில்லை. ஒருநாள். வியாழக் கிழமை. சுமார் 10 மணி இருக்கும். நல்ல இருட்டு. எங்கும் கருங்கம் என்றிருக்கிறது. மறுநாள் சுக்கிரவாரம். எது எக்கேடானாலும் சரி முருகனை தரிசித்தே தீரவேண்டும். ஆகவே பக்தர் புறப்படத் துணிந்துவிட்டார். அவரோடு உடன் செல்பவர்கள் அவருடைய இரண்டு குமாரர்களும் மைத்துனர் ராமசுவாமி ஐயருந்தான்.

திருநெல்வேலிக்குக் கிழக்கே உள்ளது ஆத்தூர். பண்ணையார் ராமசுவாமி ஐயர் என்றால் அந்த வட்டாரங்களிலே அழுதபிள்ளையும் குரலொடுங்கும். அவ்வளவு கெடுபிடி. அவர் வீட்டிலிருந்து புறப்படுகிறார் பக்தர். ராமசுவாமி ஐயர் எவ்வளவோ தடைசெய்தும் விட்டாரில்லை. பிறவித் தளைகளையே உடைத்தெறிய வந்தவர், கேவலம், உண்பது நாழி உடுப்பது நான்கு முழமாகிய நியதியைத் தழுவும் மனிதன் தடைக்கா மலைந்துவிடப் போகிறார்! பக்தர் புறப்பட்டுவிட்டார். பாதையோ காட்டுப்பாதை. இருளோ, தொட்டால் கைகறுத்துவிடும். குத்திக்கொண்டு முன்னே நின்றாலும் ஆள் தெரியாது. வண்டி போகிறது. ஆபத்தான இடமும் அணுகிவிட்டது. கள்ளர்கள் வண்டியை மறித்து நிறுத்திவிட்டார்கள். உள்ளே இருப்பவர்கள் இறங்கவேண்டும் என்ற ஆணையும் பிறந்தது. பக்தர் இறங்கினார். துளிகூட மனம் கலங்கவில்லை. "அப்பா உங்களுக்கு என்ன வேண்டும்? நாங்கள்

வைத்திருக்கும் பொருள்கள்தானே? இதோ எடுத்துக் கொள்ளுங்கள்" என்று சொல்லி, மேலே அணிந்திருந்த பட்டை வாங்கி இரண்டாக மடித்து விரித்தார். தாம் அணிந்திருந்த கௌரி சங்கரம், பவித்திரம் முதலியவை களைக் கழற்றிவைத்தார். குமாரர்கள் அணிந்திருந்த விலை உயர்ந்த நகைகளையும் கழற்றிவைக்கச் சொன்னார். குமாரர் களுக்கு நகை போயிற்றே என்ற கவலை, பண்ணையார் ராமசுவாமி ஐயருக்கு நகையோடு பண்ணையார் பறிகொடுத் தார் என்ற அவச்சொல்லால் மரியாதையும் போயிற்றே என்ற கவலை. ஆனால் யாரும் எந்த வார்த்தையும் பேச வில்லை. பக்தர் அத்தனை நகைகளையும் திரட்டி, பக்குவ மாக முடிந்து கள்ளர் கையில் கொடுத்துவிட்டு, "அப்பா, இனிப் போகலாமா? எங்களுக்கு ஸ்வாமிதரிசனம்தான் முக்யமானது. அது தடையாகாதே?" என்று கேட்டுக் கொண்டே மீண்டும் வண்டியில் ஏறினார், "வேண்டுமானால் இன்னும் தப்பூர் இருக்கிறது. ஜாலராவும் உண்டு. சுவாமி சந்நிதியில் பாடுவதற்கு எடுத்துக்கொண்டு போகிறோம். வேணுமா?" என்றார். அவைகளைப்பற்றி அந்தக் கள்ளர்கள் அக்கறை கொள்ளவில்லை. ஆகவே வண்டி நகர்ந்தது. கொஞ்சதூரம் வண்டி சென்றிருக்கும். "ஓ, வண்டியை நெறுத்துங்க. ஓ சாமி, உங்களைத்தான்" என்ற சப்தம் கேட்டது. பக்தருடைய குமாரர்கள் இன்னும் தொந்தரவு செய்யத்தான் இந்தப் பாவிகள் கத்துகிறார்கள் என்று பயந்து, வேகமாக வண்டியை ஓட்டச் செய்தார்கள். வண்டி ஓட, கள்ளர் ஓட, ஆகக் கடைசியில் ஒருமட்டும் கள்ளர்கள் மீண்டும் வண்டியை மறித்து நிறுத்தி, "சாமி, எங்களைக் காப்பாத்தணும். எங்களால் ஒரு அடிகூட எடுத்துவைக்க முடியல. என்னமோ செய்யுது. இந்தாருங்க உங்க உருப்

படி" என்று அவ்வளவையும் திரும்பக் கொடுத்துவிட்டு மீண்டும் சொன்னார்கள். "சாமி, இன்னும் அஞ்சு மைல் போனா அங்கேயும் எங்க கூட்டத்தாங்க இருப்பாங்க, அவங்களும் உங்களைக் கஷ்டப்படுத்துவாங்க. நாங்க ரெண்டு பேர் உங்களை அங்கவரைக்கும் வந்து கடத்திவிடுறோம்" என்று ஐந்து மைலுக்கு அப்பாலுள்ள ஆபத்துக் கட்டத்தையும் கடத்தி, பக்தரை வழி அனுப்பினார்கள். உண்மையிலேயே இது அதிசயந்தான். இதோடு நின்றுவிடுகிறதா? இன்னும் எத்தனையோ உண்டு.

சிவனுக்கு எமன்மீது ஆதிக்கம் செலுத்த முடியும் என்பது புராண வரலாறு. நமக்கு அதில் அதிசயம் ஒன்றுமே கிடையாது. ஆனால் அவனுடைய அடியார்களும் அப்படி ஆதிக்கம்செலுத்தமுடியும் என்றால் அது அதிசயந்தான். அதிலும் விஞ்ஞான ஆராய்ச்சி மிகுந்த நவீனகாலத்தில், பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில், ஒருவர் அப்படி ஆதிக்கம் செலுத்தினார் என்றால், அது அவருடைய அமானுஷ்ய சக்தியைத்தான் குறிக்கின்றது.

சிலர் பிறந்த விசேஷத்தாலோ கால் மிதிபட்ட விசேஷத்தாலோ அல்லது சிறந்த செயல்களை முன்னிட்டோ சின்ன ஊர்களுக்கும் பெரிய ஒரு ஸ்தானம் கிடைத்து விடுகிறது. திருநெல்வேலிக்குக் கிழக்கேயுள்ள கருங்குளத்திற்கும் நமது பக்தருடைய பெருஞ்செயல்களால் சிறந்த ஸ்தானம் கிடைத்திருக்கிறது. பக்தர் எப்பொழுதெல்லாம் கருங்குளத்திற்கு வருகிறாரோ அப்பொழுதெல்லாம் பிரும்மஸ்ரீ சதாசிவஐயர் அவர்கள் அகத்தில்தான் தங்குவார். அது தவறினால் மார்த்தாண்டேச்வரர் ஆலயம். ஒரு

சமயம் அந்த ஊரிலுள்ள சிறந்த தனவந்தர் ஒருவர் தமது அருமைப் பெண்ணுக்கு சகலவைபவங்களோடும் திருமணம் நடத்த ஏற்பாடு செய்திருந்தார். எங்கும் திருமுகம் அனுப்பியதன் பயனாக உற்றாரும் உறவினரும் திருநாள் - கூட்டமாகத் திரண்டுவிட்டனர். மறுதினம் காலையில் விவாஹம் நடைபெறவேண்டும். முந்தின இரவு பெண்ணின் பாட்டி சிவலோக யாத்திரைக்கு வேண்டிய ஆயத்தம் செய்வதில் முனைந்துவிட்டாள். இப்போதோ இன்னும் சற்று நேரத்திலா என்ற பரபரப்பான கால எல்லையின் வரம்பைத் தாண்ட முற்பட்டுவிட்டாள். கண்கலங்கினார் தனவந்தர். எத்தனை பணமிருந்தும் எமன் படையெடுப்பதை எப்படி எதிர்ப்பது? ஒருவேளை கருங்குளத்திற்கு வந்திருக்கிற பக்தரை வேண்டிக்கொண்டாலாவது கவிழ்க்காதா என்ற எண்ணத்தோடு, பக்தரிடம் சென்று வணங்கி, மிக்க பரிவுடன் தமது மனக்கருத்தை வெளியிட்டார். ஆண்டவனுடைய நிலையான அருள் வெள்ளத்தைக்கொண்டுசெலுத்தும் வழிமடையாக அமைந்த பக்தர் மிகுந்த கருணை கொண்டு, தனவந்தருடைய மனக்கவலையை நீக்க முற்பட்டார்.

கையில் அகப்பட்ட ஒரு மாமுளையை எடுத்து, கிழவியின்கால்-பக்கம் அறைந்து, ஒரு சிறுகயிற்றால் அவளுடைய காலை முளையோடு இணைத்துக் கட்டிவிட்டார். "இனிமேல் நீங்கள் பயமில்லாமல் கல்யாணம் நடத்தலாம்" என்ற அருள்மொழியும் பிறந்தது. அடியார் அருள் வாக்கு ஆண்டவன் திருவாக்கே என்னக்கொண்டு, தனவந்தரும் கல்யாண வைபவத்தை முறையாக நடத்தினார். குறிப்பிட்ட தினங்கள்அளவும் ஒவ்வொரு சடங்கும் இனி

தாகவே நிறைவேறிவந்தது. இனி மாப்பிள்ளை வீட்டார் பெண் வீட்டாரிடம் விடைபெற்றுப் போகவேண்டிய நாள். சூரியஉதயத்திற்கு முன்னதாகவே அவர்கள் விடைபெற்றுப் போய்விடவேண்டும் என்று பக்தர் உத்தரவு இட்டுவிட்டார். அவர்களும் வண்டியில் ஏறி வீதிமுக்குத் திரும்பவில்லை. பக்தர் கிழவியின் காலில் கட்டியிருந்த கயிற்றை அறுத்துவிட்டார். அவளும் தனது உடலோடு பிணிக்கப்பட்டிருந்த உயிரின் பிணிப்பையும் அறுத்துவிட்டாள். இப்படியும் முடியுமா என்று எண்ணத் தோன்றுகிறது. இல்லையா? உண்மைதான். ஆனால் அடியார்களுக்கு அதுவும் ஆகும். அதற்கு மேலும் ஏதேனும் உண்டானால் அந்தக் காரியமும் ஆகிவிடும்.

இன்னும் ஒருநாள். பத்மநாபபுரத்தில் பக்தர் பஜனை செய்துகொண்டு வருகிறார். திருவனந்தபுர சமஸ்தான அதிகாரிகள் எத்தனையோபேர் பஜனையில் கலந்துவருகின்றார்கள். திவான் நாணுபிள்ளையும் உடன் வருகிறார். பக்தருடைய உள்ளம் என்ன நிலையில் இருந்ததோ யாருக்கும் தெரியாது. அது சகல தளைகளையும் கடந்து, மஹாசக்தியோடு ஐக்கியமாகி, மஹாசக்தி மயமாகவே ஆகியிருக்க வேண்டும். பஜனை நடக்கும் நேரம் இரவு நேரம். இடம் கோயில் பிராகாரத்துள்ளேதான். தீவட்டிகள் எங்கும் பொங்கொளி பரப்பி உடன் செல்வோராது அகமும் புறமும் ஒளிபெறச் செய்கின்றன. ஆண்டவன் பெருமை, அவனுடைய எண்ணரிய திருநாமங்களின் சிறப்பு, ஆகிய இவைகளை மதுரிய தேனினும் இனிய செந்தமிழ்ச் சொற்களில் குழைத்துக் குழைத்து எத்தனையோ கானச்சித்திரங்களைத் தீட்டிக்கொண்டு செல்கின்றார் பக்தர். பக்தியில்

உருகி உருகி சிவமயமாக இருக்கும் நிலையில், "சாமி தீவட்டிக்கு எண்ணெயில்லை" என்ற தொனி பக்தர் காதில் விழுந்தது. போதாக்குறைக்கு பேஷ்காரும் "என்ன ஓய், இன்னும் பாட்டு? எண்ணெய் தீந்தாச்சே" என்றார். அவ்வளவுதான். எண்ணெய் வைத்திருந்த மண்குடங்கள் இரண்டை எடுத்தார். வெறுங்குடங்கள். மடமட என்று கோயிலின் வடபுறமிருந்த தடாகத்திலுள் இறங்கி ஜலத்தை மொண்டுவந்து 'ஊற்றடா' என்று உத்திரவிட்டார். தீவட்டிக்காரனும் ஊற்றினான். தீவட்டியும் எரிந்தது. என்னத்தைச் சொல்வது! பக்கத்திலுள்ளவர்கள் அப்படியே சாஷ்டாங்கமாக விழ்ந்து நமஸ்கரித்தனர். வேறு இந்தப் புழுக்கள் என்ன செய்யமுடியும்?



II. மின்னல் ஒளி.

இத்தனை அதிசயங்களையும் செய்த பக்தர் ஐந்து வயதி லேயே காதாளமிட்டுப் பாடியதில் அதிசயமில்லை. கீர்த்தன ரீதியாக ஆண்டவன்மீது பாடல்கள் தொடுத்ததிலும் அதிசயமில்லை. அருந்தவத்தின் பயனாகப் பிறந்த பிறப்பி லுங்கூட அதிசயமில்லை. ஆனால் அவநம்பிக்கை படிந்த 19-ம் நூற்றாண்டில் அவதரித்ததுதான் அதிசயம். இவருடைய பெற்றோர்கள் இவருக்கு இட்ட பெயர் சுப்பிர மணியன். ஏனென்றால் அது பரம்பரைப் பெயர். இவர் பிற்காலத்தில் தமக்கு இட்டுக்கொண்ட திருநாமம் நீல கண்டதாசன். பிறந்த வருஷம் 1839. மகான் இராம லிங்கர் பிறந்த வருஷம் 1823. இராமகிருஷ்ணர் பிறந்த வருஷம் 1836. விவேகானந்தர் பிறந்த வருஷம் 1863. இன்னும் சுவாமி தயானந்த சரஸ்வதி பிறந்த வருஷமும் 1840க்கு முன்னரே. 19-ம் நூற்றாண்டே ஒரு புனித நூற்றாண்டு. பக்த நூற்றாண்டு.

பக்தருடைய பாட்டனார் பிரும்மஸ்ரீ சுப்பிரமணிய அவதானிகள் என்பவர். வைத்தீச்வரன் கோயில் வாசி. மகா கலைஞானம் பெற்றவர். தாதுவருஷப் பஞ்சத்தினால் தமது சொந்த ஊரைவிட்டு இயற்கைதேவியின் தனியருள் பெற்று விளங்கிய பத்மநாபபுரம் வந்துசேர்ந்தார். அவ ருடைய புதல்வர்கள் இருவர். ஒருவர் ஸ்ரீமான் நீலகண்ட ஐயர். திருவாங்கூரின் அப்போதைய தலைநகர் பத்மநாப புரந்தான். தென்குளந்தை என்றும் அதைக் கூறுவார்கள். அங்கேயே பிரும்மஸ்ரீ சுப்பிரமணிய அவ்தானிகள் வாழ்ந்து வந்தனர். கலைப்பெருமையினால் அரசருடைய

பாராட்டிற்கு உரியவராகி அநேக வரிசைகளை யெல்லாம் பெற்று வாழ்ந்து வந்தார். ஆனாலும் நெடுநாள் இந்த உலகவாழ்வில் ஈடுபடும் உரிமை அவருக்குக் கிட்டவில்லை.

அவதானிகளுடைய இரண்டாவது புதல்வர் ஸ்ரீ சுப்பிரமணிய ஐயர். சமஸ்கிருதம், ஜோதிஷம், மாந்திரிகம் ஆகிய கலைகளில் சிறந்த நிபுணத்வம் வாய்ந்தவராக விளங்கினார். சங்கீதத்திலும் இவருக்கு அபார ஞானம் உண்டு. இத்தனை கலைச்செல்வத்தோடு ஈசன்பால் வழுவிகந்த பக்தி செலுத்தும் அன்புள்ளமும் பெற்றிருந்தார். முருகனுடைய சக்தி ஆயுதமாகிய * வேலினிடத்து அவருக்கிருந்த ஈடுபாடு கங்குகரை அற்றது. உண்மைதானே.

"வீரவேல், தாரைவேல், விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல், செவ்வேள் திருக்கைவேல்,—வாரி
குளித்தவேல், கொற்றவேல், சூர்மார்புக் குன்றும்
துளைத்தவேல், உண்டே துணை" என்றெல்லாம்

பக்தர்களால் பாராட்டப்படும் சக்தி ஆயுதமல்லவா?

கேட்போர் கன்னங்கள் அமுதூறப் பாட்டிசைப்பார். இராமநாடகக் கீர்த்தனங்கள், முத்துத்தாண்டவர் பாடல்கள்போன்ற இசைநலம் செறிந்த பாடல்களையும், தேசிங்கு ராஜன் கதை, சாலிவாகனன் சரிதைபோன்ற நாட்டுப் பாடல்களையும் இனிதாகப்பாடி, யாவர் இதயத்திலும் இன்

---

* இப்போது அவர் பூஜித்துவந்த வேலாயுதம் திருவனந்தபுரத்தைச்சார்ந்த கரமனையிலுள்ள சிவன்கோயிலில் வீற்றிருக்கும் சுப்பிரமணிய ஸ்வாமியின் திருக்கரத்தைத் தழுவிக்கிடக்கின்றது.

பத்தைக் கூட்டிவைப்பார். இத்தனை நலமும் செறிந்த இவருடைய வாழ்க்கை இன்னமும் மிக்க அழகினைப் பெறுவதற்கு உகந்த சாதனமாக, நாகர்கோவிலைச் சார்ந்த வடிவீச்வரம் என்னும் ஊர்வாசியான ஸ்ரீமான் கணபதி சாஸ்திரிகளின் செல்வப்புதல்வி ஸ்ரீமதி அழகு அம்மாளைத் தமது வாழ்க்கைத் துணையாக ஏற்றுக்கொண்டார். தோற்ற அழகு, குண அழகு, கொள்கை அழகு ஆகிய அத்தனையும் ஒருசேரக் குழைந்து திரண்டுள்ள கோலவடிவமே ஸ்ரீமதி அழகு அம்மாள்.

விவாஹம் நடந்தது. வருஷங்கள் பல உருண்டோடின. சந்ததி இல்லாத கவலை தம்பதிகளிடையே பெருங்கவலையாகப் படிந்துவிட்டது. தமது குலதெய்வமாகிய வைத்தீச்வரன்கோயில் மூர்த்தியை இருவரும் குழந்தை வரம் நாடி அன்போடு வழிபடலாயினர். இருவரும் சங்குப்பால் குடித்தனர். ஷஷ்டிவிரதமிருந்தனர். சோழநாட்டுக் குலதெய்வத்திடமும் சேர நாட்டு இஷ்டதேவதையிடமும் மறுகி மறுகி வரங்கேட்டு நின்றனர். எத்தனை வருஷங்கள்! எத்தனை விதமான வழிபாடுகள்! ஆனாலும் ஆண்டவன் சோதனையைத் தளர்த்தவேயில்லை.

கிரேக்க மகாகவியான ஹோமரைப்பற்றி அறிஞர் ஒன்று கூறுவர். அது பின்வருமாறு. இயற்கைதேவி நெடுங்காலம் கருவுற்று ஒரு ஹோமரைப் பெற்றெடுத்தாள். அதன்பின்னர் கருவுறவே இல்லையாம். உண்மைதான். மஹான்களுடைய அவதார விசேஷங்களை அப்படித்தான் பாராட்டவேண்டும். எல்லா ஜீவராசிகளினுடைய தோற்றத்திலும் இயற்கை தேவிக்குப் பங்குண்டு என்

ரூலும் மகான்களுடைய தோற்றத்தில் அந்த தேவிக்குள்ள பங்கு இன்னும் விசேஷமானது.

நமது பக்தரும் சிறந்த மகான்.

சிவஞான அமுதளித்த தேசிகர்.

(1) "கறையணைய பாவம் உற்றார் சிவனுக்காகார்
கழறுகின்ற மொழிதடுக்கவும்"

(2) "சிவத்துவேஷச் சிந்தையுள்ளார் செய்வினையைக்
கொய்வதற்கும்" "வந்துற்றேம் வந்துற்றேம்"

என்று பல இடங்களில் பறைசாற்றிப் பறைசாற்றித் தமது அவதார விசேஷத்தை வெளிப்படுத்தியுள்ளார். மஹாகவி பாரதியாரும் தமது தோற்றத்தையும் இலக்ஷியத்தையும் இப்படித்தானே எடுத்துக் கூறுகின்றார். எட்டப்பூபதிக்கு அவர் விடுத்த சீட்டுக் கவியின் மூலம் நாம் தெரிந்துகொள்ளலாம்.

"புவியனைத்தும் போற்றிட வான்புகழ் படைத்துத்
தமிழ்மொழியைப் புகழில் ஏற்றும்
கவியரசர் தமிழ்நாட்டுக் கில்லையெனும்
வசை என்னால் கழிந்ததன்றே!

"சுவைபுதிது, பொருள்புதிது, வளம்புதிது,
சொல்புதிது, ஜோதிமிக்க
நவகவிதை, எந்நாளும் அழியாத
மகாகவிதை.............."

இதுவே பாரதியார் விடுத்த சீட்டுக்கவி.

அம்மாதிரியே நமது பக்தரும் வெளியிடுகின்றார். இம் மாதிரியான அவதார விசேஷம் வாய்க்கப்பெற்ற ஒரு மனிதகுல திலகத்தைப் பெற்றெடுப்பது என்றால் சாமான்ய மான காரியமா? பெற்றோர்கள் பெருந்தவம் செய்தார்கள் என்றால் அதில் வியப்பு ஒன்றுமே கிடையாது. அவர்கள் நெடுங்காலம் நோன்பு செய்தார்கள் என்றால் இயற்கை தேவிக்கே இத்தகைய பக்தரை உருவாக்க அத்தனைகாலம் ஆயிற்று என்றுதான் சொல்லவேண்டும். பக்தி பழுத்த பழச்சுவையாகிப் பரமுக்தி அடைந்த நாயன்மார்கள், ஆழ்வாராதிகள், தாயுமானவர், இராமலிங்கர், இன்னும் வடநாட்டை எடுத்துக்கொண்டால், கபீர்தாஸர், சைதன்யர், துளசிதாஸர், மீராபாய், இராமகிருஷ்ண பரமஹம்சர், விவேகானந்தர் ஆகிய இவர்களுடைய அருள்மொழிகளை எவ்வாறு சிந்தையிலும் சென்னியிலும் வைத்துப் பூஜிக்கின்றோமோ, அவ்வாறு பாராட்டிடவும் பூஜிக்கவும் அமைந்த ஒரு பக்த மகானை, ஜீவன்முக்தனை, தமிழ் உலகத்திற்கு ஆக்கித்தரவேண்டும் என்றால், எத்தனை வருஷம் காத்திருக்கவேண்டும்! எத்தனை தவங்கள் செய்திருக்க வேண்டும்! 1839-ம் வருஷம், வைகாசிமாதம் புனர்வஸு நட்சத்திரத்தில், மேலோர் மனம் மகிழ, மிகு சைவப்பலன் கொழிக்க, அருள்மழை பொழியும் கருணைமாமுகில் உதய மாயிற்று. ஆள் எப்படி? தீர்க்க சரீரம். விசாலநெற்றி. ஸ்புரிக்கும் கண்கள். குழந்தைப் பருவத்திலேயே ஆலயப் போக்கு, ஆண்டவ தரிசனம், பக்திப்பரவசம், பரமானந்தப் பாட்டு மயம். எல்லா அருமைகளும் ஐந்து வயதிலேயே.

காலந்தவறாமல் தாயாருடன் கோயிலுக்குச் செல்வார். நடராஜனுடைய சந்நிதியில் நின்று, கரதாளமிட்டு, கன்ன

பின்னு என்று தாம் கேட்டதையும் வாய்க்கு வந்ததையும் 'செவ்வாய்க்குதலை மெய்பெறு மழலையொடு' குழைத்துப் பாடி, கோலவெறி காட்டுவார். ஆலயத்திற்கு இட்டுச் செல்வது மிக எளிது. ஆனால் அழைத்துவருவதோ அரிதினும் அரிது. அநேக பக்தர்களுடைய வாழ்க்கையைப் பற்றிக் கதையாகக் கேட்டதெல்லாம் கதையில்லை, அத்தனையும் உண்மை என்று நம்பும்படி தூண்டும் வாழ்க்கை மகான் நீலகண்டதாஸருடைய வாழ்க்கை. சுமார் 2000க்கு மேற்பட்ட நெஞ்சுருக்கும் பக்திப்பாடல்கள், 1000க்கு மேற்பட்ட பண்ணிறைந்த கீதங்கள் ஆகிய இவைகள் அவரால் அருளப்பெற்ற பிதுரார்ஜிதம். பாடல்கள் ஒவ்வொன்றிலும் கீதங்கள் ஒவ்வொன்றிலும் இறைவனது திருச்சிலம்பொலி இசைப்பதைக் கேட்கலாம்.

இவ்வளவு பெருமையும் படைத்த இவருடைய கல்வி மிகவும் விந்தையானது. பலபெரிய மனிதர்களுடைய வாழ்க்கையையும் அலசிப் பார்க்கும்போது, கல்வி சம்பந்தமான காரியமெல்லாம் ஏதோ ஒரு பொதுப்படையான நியதிபோன்றே காணப்படுகிறது. பள்ளிக்கு வைத்தலாகிய சடங்கு. அம்மட்டோடு சரி. எல்லாம் சுயம்பிரகாச ஜீவன்கள். ஊற்றிலிருந்து நீர் பொங்குவதுபோன்று ஞானம் பொங்குகிறது. அவ்வளவுதான்.

பக்தருக்கு ஐந்துவயதும் வந்தது. அக்ஷராப்பியாசமும் ஆயிற்று. பிள்ளை பள்ளிக்கூடம் போகின்றான். பாதை நடுவிலே ஒரு பாசவலை. பெரிய தடாகம் ஒன்று. அதன் கரையில் ஒரு அரசமரம். மரத்தடியிலே ஒரு பிள்ளையார். போதாக்குறைக்கு இன்னொரு கோயில்.

அதை அடுத்து ஓர் நந்தவனம். இம்மாதிரிக் கிடக்கும் பாசவலையை எப்படித் தப்பமுடியும்? கையிலுள்ள அணைச மரத்தை அழகு செய்யும். சில நண்பர்கள் சுப்பிரமணியனுடன் சேர்வார்கள். அத்தனைபேரும் குளத்தில் இறங்கி நீராடவேண்டியது. நந்தவனத்தில் மலர் கொய்யவேண்டியது. அப்பாலே பூஜையை ஆரம்பித்துவிட வேண்டியது. வேறு என்ன ஜோலி? சரஸ்வதி தேவியே அந்தர்யாமியாக அவர்களோடு விளையாடும்போது ஏடும் எழுத்தாணியும் அத்தனை அவசியமா?

“கணபதி கணபதி பாலயமாம்
கௌரீ தனயா பாலயமாம்”

என்ற பஜனை முழக்கம் எட்டுத் திக்கிலும் எட்டிவிடும். இதுதான் படிப்பு.

அகஸ்தியருக்கு மாணாக்கர் பன்னிருவர். இயேசுநாதருக்கு சிஷ்யர்கள் பன்னிருவர். ஸ்ரீ சுப்பிரமணியனுக்கும் தோழர்கள் பன்னிருவர். எப்போதும் அவர்களோடு சேர்ந்துதான் பஜனை பாடுவார். இராமநாடகக் கீர்த்தனைகள், முத்துத்தாண்டவர் பதங்கள், ஒரு சில தேவாரப் பாடல்கள் இவைகளைத் தம் பஜனை கோஷ்டியாருக்கும் சொல்லிவைத்துத் தாமும் பாடுவார், அவர்களையும் பாடச் செய்வார். மெட்டுத் தெரியாத பாடல்களுக்கெல்லாம் தாமாகவே மெட்டமைத்து விடுவார். பாடல்களில் ஏதாவது வார்த்தைகள் தெரியாதிருந்தால் தாமாகவே வார்த்தைகளைச் சேர்த்துவிடுவார். தினந்தோறும் தமது பஜனை கோஷ்டியாருடன் பத்மநாபபுரத்திலுள்ள நீலகண்டேச்

வார் ஆலயத்திற்குச் சென்று பஜனை செய்வார். சில தினங்களில் நண்பர்கள் பின்தொடர்ந்துவர சுப்பிரமண்யன் பக்திப்பரவசராக அங்கப்பிரதட்சிணம் செய்யவும் ஆரம்பித்துவிடுவார்.

இத்தனை காரியங்களும் பதினாறு பிராயம் நிரம்புவதற்கு முன்னமேதான். இத்தனைதூரம் மனப்பக்குவம் வாய்க்கிறது, ஒருவழிப்படுகிறது என்றால், மட்டற்ற ஈச்வர அருளால் முடியுமேஅன்றி மற்றும் வகையால் முடியவே முடியாது. பூஜை யென்றால் வயிற்றுப்பூஜைதான் தெரியும். மற்றும் எவ்விதமான பூஜையும் தெரியாது. அப்படியாகப் பூஜை செய்கிறதானாலும் நா ஒன்று சொல்ல மனம் ஒன்றை நாடும் பூஜைதான். வெறும் பொழுதுபோக்குப் பூஜை. அப்படிப்பட்ட போலிரகபூஜை செய்யும் வேஷதாரிகளுக்கும் பொறுப்பற்றவர்களுக்கும் சுப்பிரமணியன் என்ற ஸ்ரீ நீலகண்டதாஸர் மேற்கொண்டொழுகிய வாழ்க்கை மகா அதிசயம் வாய்ந்த ஒன்றாகவே தெரியும்.

இன்னும் அவருடைய பால்ய நிலையிலுள்ள பக்தி அனுபவங்களைப் பார்த்துக்கொண்டே போனால் வியப்பின் மேல் வியப்பெய்த வேண்டியதுதான். சிவராத்திரி வந்துவிட்டதென்றால் ஸ்ரீ சுப்பிரமணியனுக்கு ஓரே கொண்டாட்டம். அன்று முழுவதும் அவரை வீட்டிலோ ஊரிலோ காணவே முடியாது. தமது பன்னிரண்டு தோழர்களையும் கூப்பிடுவார். காலையில் பெரியகுளத்தில் நீராடி, பத்மநாபபுரம் நீலகண்டேச்வரரை வழிபட்டு, கால்நடையாகவே பத்மநாபபுரத்தைச் சுற்றியுள்ள பன்னிரண்டு ஸ்வயம்பு சிவாலயங்களையும் தரிசித்துவிட்டுக் கடைசி யாமத்திற்கு

சுசீந்திரம் சென்றுவிடுவார் அங்கும் தரிசனம் செய்துவிட்டு மறுநாளே வீடு திரும்புவார்.

வயது ஆக ஆக அன்பருடைய உள்ளத்தில் பக்தி அபரிமிதமாக ஊறிக்கொண்டே வந்தது. 'வீடு திருவாலங்காடே' என்றார் ஒரு பக்தர். அன்பருக்கும் அப்படியே. ஆண்டவன் எழுந்தருளியிருக்கும் திருக்கோயில்தான் அவருக்கு வீடு. சர்வேச்வரனும் சக்திதேவியுந்தான் கண்கண்ட பெற்றோர்கள். இப்படியான சிவப்பித்து தலைக்கேறிவிட்டது.

III. இலக்ஷிய முரண்.

எப்போதும் பெற்றோர்களுக்குத் தங்களுடைய இச்சை வெறுப்பாகிய அளவுகோல் கொண்டே தங்களுடைய பிள்ளைகளை அளப்பது இயற்கை. மிகவும் சொற்பம் பிள்ளைகளின் நீக்குப்போக்கை உணர்ந்து ஒழுகும் பெற்றோர்கள். அன்பருடைய பெற்றோர்களுக்கு மிகுந்த வியாகூலம் உண்டாகிவிட்டது எங்கே பிள்ளை துறவியாகப் போய்விடுவாரோ என்று. ஆகவே உலகபந்தமாகிய பாச வலையில் அவரை வீழ்த்துவதற்குச் சதிசெய்ய முற்பட்டனர். பிள்ளையின்பால் விளங்கும் அழுத்தமான சிவப்பித்தை அவர்கள் உணர்ந்தார்களில்லை. ஒருவேளை உணர்ந்தாலும் பிள்ளைப்பாசத்தால் மதிக்க முற்பட்டார்களில்லை. ஏதோ ஒரு கல்யாணத்தைச் செய்துவைத்தால் மூக்குச் சரடுக்கு அடங்கின காளைபோன்று பையனும் அடங்கிவிடுவான் என்று எண்ணினார்கள். ஸ்ரீ முத்துசுவாமி தீட்சதருடைய வாழ்க்கையிலும் இப்படித்தான். அவரோ உலக விஷயங்களில் ஆசை அற்றவராய் ஸ்ரீ பரதேவதையின் தியானத்திலேயே சதாகாலமும் லயித்திருந்தார். அவருடைய மனநிலையை உணராத பெற்றோர்கள் வேறுவிதமாக எண்ணிவிட்டார்கள். ஒருவேளை மனைவி கருப்பாக இருப்பதனால்தான் இவன் இப்படியிருக்கிறான்போலும் என்று நினைத்து, மதயானையை அடக்குவதற்கு இருபக்கமும் இரண்டு பிடிகளை நிறுத்துவதுபோன்று, ஸ்ரீ தீட்சதருடைய தெய்வப் பித்தைத் தணிப்பதற்கு இன்னொரு அதிரூபவதியான பெண்ணை மணம் முடித்து வைத்தார்கள். ஐயோ, பாவம், பிள்ளைப்பாசமல்லவா உண்மையை உணரவிடாது

மறைக்கின்றது! அம்மா திரியே நமது பக்தருடைய பெற்றோர்களும் கல்யாணம் ஒன்றே சுப்பிரமணியனுடைய மனநிலையை மாற்றும் மருந்து என எண்ணினர். பெற்றோர்கள் திருமணம் செய்ய எண்ணலாம். ஆனால் இப்படி தெய்வப் பித்துள்ள ஒருவனுக்கு உலகப்பித்துள்ளவர்கள் எப்படிப் பெண்ணைக் கொடுப்பார்கள்? அது ஒருபக்கம் தான். இன்னும் எப்படிப் பெண்ணைக் கொடுப்பார்கள் என்பது இருக்கட்டும். இத்தகைய மகானுக்கு மனைவியாக வாய்க்கும் புண்ணியமும் யாருக்காவது கிடைக்கவேண்டுமல்லவா? அது சாமான்யமாகக் கிடைக்கக்கூடியதா?

அந்த பாக்கியம் ஒரு பெண்ணுக்குக் கிட்டிற்று திருவனந்தபுரத்திலுள்ள புளிமூட்டு ஸ்தாணுநாத ஐயரின் பெண்ணை, "ஐயய்யோ, அங்காரக தோஷம் உள்ளவள், வீட்டிற்கே ஆகாது, குடும்பமே பாழாகிவிடும்" என்று சொல்லிச் சொல்லி, கேட்கவந்த அநேகர் ஒதுக்கிவிட்டனர். ஆனால் அந்தப் பெண்ணுக்குரிய அங்காரக தோஷம் பெரும் புண்ணியத்தைக் கூட்டிவைக்கும் வாயிலாக அமைந்திருக்கிறது என்பதை யார்தான் உணரமுடியும்? அவளுடைய அங்காரக தோஷமே அவளுடைய வாழ்க்கையின் ஆக்கத்திற்கு ஒரு அரிய சாதனமாக அமைந்தது.

"பதினொரு வயதாகிவிட்டது. ஐயோ, இன்னும் வரன் கிட்டவில்லையே நமது பெண்ணுக்கு" என்று ஏங்கினார் ஸ்ரீமான் ஸ்தாணுநாத ஐயர். "பதினாறு வயதாகி

---

*

விட்டதே நமது பையனுக்கு. இன்னும் தக்க வது அமைய வில்லையே" என்று ஏங்கினார்கள் அன்பருடைய பெற்றோர்கள். ஆனால் அன்பரோ இல்லறத்தையே வெறுத்துத்தள்ளிவிட்டார். துறவு நெறியிலேயே மனமெல்லாம் சுழன்றுகொண்டிருக்கின்றது. பெற்றோர் திருமணப் பேச்சை நெருக்க நெருக்க அவருடைய துறவுக் காதல் அழுத்தம் பெற்றதேயொழிய தளரவே இல்லை.

ஒருநாள் நல்ல இரவு வேளை. சுசீந்திரம் ஸ்தாணுநாதர் கோயிலில் நின்று அன்பர் பக்தி செலுத்திக்கொண்டிருக்கிறார். மனது கலங்கிநிற்கிறது. ஏனென்றால் உள்ளே பெரும்போர் நிகழ்ந்துகொண்டிருக்கின்றது. பெற்றோர்களோ இல்லற பந்தத்தில் ஆழ்த்துவதற்குச் சதிசெய்துகொண்டிருக்கின்றார்கள். தமக்கோ துறவறமே சுகமென்றிருக்கிறது. என்னசெய்வதென்று தெரியவில்லை. "எல்லாம் ஆண்டவனே முடிவு செய்யட்டும்" என்று எண்ணி அப்படியே அமர்ந்துவிட்டார். இந்த இடத்தில் சேரமான் பெருமாள் ஞாபகமே நமக்கு உதிக்கின்றது. அவரும் அரசர் பதவியை ஏற்க மனமில்லாதவராய் ஆண்டவனுடைய முடிவுக்கே விட்டுவிட்டாரல்லவா? "இல்லறமே இனிது" என்பதாக அசரீரி எழுந்தது போன்ற அனுபவம் பக்தருக்குக் கிடைத்தது. அதன்பின்னரே அவருக்கு மனச்சாந்தி ஏற்பட்டது. இத்தனை அனுபவமும் பதினாறு வயதிலேதான். ஒருமட்டும் விவாஹம் நடந்தேறியது.

IV. மகத்தரிசனம்

அப்படி நடந்துவிட்டால் என்ன? ஞானச்சுடர் முன்னே எதுதான் எதிர்த்து நிற்கமுடியும்?

> " எத்தொழிலைச் செய்தாலும்
> ஏதவஸ்தைப் பட்டாலும்
> முத்தர் மனம்" மோனத்தில்
> தானே இருக்கும்?

ஈச்வரனுடைய திருவுளம் நிறைவேற வேண்டாமா? மகத்தான கர்மங்களைச் செய்து உலக பரிபூரணத்தை உருவாக்கும் கடமையை அருளிய கடவுள் ஸ்ரீசிவம் அவர்களை வெறும் மாயையிலேயே புகுத்திவிடுவாரா?

எப்பொழுதும் பக்தருக்கு ஆலயப் போக்கும் ஆண்டவ தரிசனமுந்தான். தமது ஸ்தூல உடல் நிலையிலிருந்தே இறைவனுடைய ஜோதிவடிவைக் கண்டுவிட வேண்டும் என்ற ஆசை கங்குகரையின்றிக் கிடந்தது. ஊனக் கண்கொண்டு அத்தனை எளிதாக ஞானத் திருவடிவைக் கண்டுவிடமுடியுமா?

பக்தரோ யோசனை செய்து செய்து பார்க்கிறார். பகல்வேளையில் எவ்வளவு காலந்தான் ஆலயத்தில் நின்று பிரார்த்தனை செய்தாலும், எத்தனையோ பேர் வருவார்கள் போவார்கள். ஆண்டவன் தரிசனம் கிடைப்பது அரிதாகத்தான் இருக்கும். ஆகவே இரவு நேரந்தான் மிகவும் வாய்ந்த நேரம் என்பதாக எண்ணி இரவு நேரத்தில் ஆல

யத்தினுள் தங்குவதற்குப் பலமுயற்சிகள் செய்தார். பருவமும் இளமைப் பருவமானதினாலே இவ்வாறான யோசனை தோன்றியதில் விபரீதம் ஒன்றும் இல்லை. மற்றும் அவருடைய மன இயல்புக்கு அவ்வாறுதான் தோன்றும். தகப்பனார் கோயில் அதிகாரிதான். என்றாலும் பிள்ளை அந்த அதிகாரத்தைப் பாராட்டி இரவிலே அங்கே தங்கலாமா என்றால் முடியாது. ராஜா வீட்டுப்பிள்ளையானாலும் இரவிலே ஆலயத்தில் தங்குவதற்கு உரிமை கிடையாது. உரிமை கிடையாது என்றால் விட்டுவிடமுடியுமா? கண்ணப்பனுடைய வெறியும் துருவனுடைய பிடிவாதமும் பிரஹலாதனுடைய மனோதைரியமும் ஒருங்கே திரண்டு உருவெடுத்தாற்போன்ற பக்தருக்கு எப்படியாவது, என்ன பாடுபட்டாவது, கடவுள் தரிசனத்தைப் பெற்றுவிட வேண்டும் என்ற பெருங்காதல் நாளும் வீறிட்டே வளர்ந்து வருகிறது.

மனம் உண்டானால் ஏன் இடம் கிடையாது? ஆலயத்தின் ஒருபகுதி வாகன அறை. திருவிழாக் காலங்கள் தவிர மற்ற நாட்களில் அதை அடைத்தே வைத்திருப்பார்கள். ஒருவரும் அறியா வண்ணம் பக்தர் அந்த வாகன அறைக்குள் நுழைந்து விட்டார். கடவுள் வெறி போகிற போக்கு! பகல் முழுவதிலும் வாகன அறைக்குள்ளே இருப்பார். இரவிலே அர்த்தஜாமம் முடிந்து எல்லோரும் கோயிலைப் பூட்டிச் சென்றபிறகு, அம்பாள் சந்நிதியில் அமைத்திருக்கும் கண்ணாடிக்கல் திண்ணையில் வந்து படுத்துக்கொள்வார். என்ன வெறி! என்ன பித்து! அதுவும் எத்தனை வயதில்! பொழுது புலருமுன் மீண்டும் வாகன அறைக்குள் சென்றுவிடுவார். இப்படி மூன்று தினங்கள்

கழித்தார். ஒன்றும் பயனில்லை. ஏங்கினார். ஏங்கி அழு தார் இன்னும் சோதிக்க நீலகண்டேச்வரர் விரும்ப வில்லை. அம்பிகையின் மனமும் பொறுக்கவில்லை. மூன்றாம் நாள் இரவு கழிகின்றது. பொழுது புலரப்போகின்றது. ஆண்டவனுடைய மஹாதரிசனம் பக்தருக்குக் கிடைத்து விட்டது. பக்தருடைய திருவாயில் தாம்பூலத்தைஇட்டு வாணியும் அருள் செய்கின்றாள். பக்தியின் வெற்றியை என்னவென்று சொல்வது! 19-ம் நூற்றாண்டில் அல்லவா இந்த அதிசயம் நடைபெறுகின்றது! நான்காம் நாள். தற்செயலாகவே விசேஷ நாள். பத்மநாபபுரத்திலுள்ள ஜனங்கள் விச்வரூபதரிசனத்திற்காக ஆலயத்திற்கு வந் திருக்கின்றார்கள். ஆண்டவன் சந்நிதியில் பரமசாம்பவ ராக ஒருவர் நிற்கின்றார்.

"கண்ட கண்கள் புனல்பாய, களிப்பாய்
உள்ளம் கரை அழிய,
விண்ட மொழியும் நாக்குழற, விம்மி
மேனிமயிர் பொடிப்ப,
பண்டைவசம் போய், பரவசமாய்,
பரமானந்தத் தெளிநறவம்
உண்டு தெவிட்டாத" நிலையில் நிற்கின்றார்.

அவர்தான் ஸ்ரீ நீலகண்ட சிவம். கண்களிலிருந்து ஞான ஒளி வீசுகின்றது. ஏதோ ஒரு ஜோதி அவரைச் சூழ்ந்து நர்த்தனமாடுகின்றது. மெய் சலிக்க மனம் சலிக்க ஊர் ஊராய்த் தேடித் திரிந்தவர்கள் மனைவி இலக்ஷ்மியின் அங்காரக தோஷம் என்று சொல்லித் திரிந்தவர்கள் யாவரும் பார்க்கின்றனர். அழகு அம்மாள் பிள்ளையென்று சொல்ல வாயெழவில்லை. லக்ஷ்மி அம்மாள் கொழுநன்

என்றும் சொல்லத் துணியவில்லை. அப்படியே விளக்கொளி கண்டு மயங்கும் விட்டில்போன்று பக்தருடைய ஞானச்சுடர் வீசும் கண்களைப் பார்த்தவண்ணம் பிரமித்து நின்றுவிட்டார்கள். பக்தரோ மெய்மறந்த நிலையில்,

தனதன்ன-தன்ன தனதன்ன-தன்ன தனதன்ன-தன்ன ஞ

பண்டென்ன பூசையான் செய்த பயனோ அலது
 பரமநின் கருணை இயல்போ
பாவியெனை ஆட்கொள்ள வேணுமென என்மனப்
 பரிமீது தாவி நெஞ்சம்
கொண்ட அஞ்ஞானவன் கண்டகக் கானிடைக்
 கொடுந்தொழில் புரிந்துமேவும்
கோபலோபாதியாம் கொடிய மிருகாதியைக்
 குறைவற்ற அகண்ட ஞானச்
சண்ட கோதண்டக் குணத்தொனி செய்தோட்டியும்
 சைவ விருதைக் காட்டியும்
சடதிமிர மோடுற்ற காடெலாம் நீக்கியுந்
 தன்பெரும் வழிதுலக்கி
அண்டர் தொழுபாதம் என் இதயஅங் கோரமீ
 தமயவைத்(து) அங்குலாத்தி
அருள்லீலை புரிநீல கண்ட உன்போல்தயை
 அடைந்தோர்கள் கண்டிலேனே.''

என்று நீண்ட நெடிய பாசுரந்தொடுக்க ஆரம்பித்துவிட்டார். நவரத்ன காந்தியோடு வாயினின்றும் சொற்கள் உதிர்ந்து உதிர்ந்து மாலைவடிவில் உருப்பெற்றுத் திகழ்ந்தன. கேட்டவர்கள் அப்படியே ஸ்தம்பித்து நின்றுவிட்டனர். அன்பும் உருக்கமும் அளப்பரிய பக்திக் கனிவும் ஞானத் தெளிவும் நிறைந்தனவாக ஒரு பதிகம் பாடி அருளி, முடிவில்

"சாமி நீ கண்டுநின் வாமையாம் என்பெற்ற
தாய் கண்டு மனம் இரங்கித்
தமிழ்வாணி உதவியதனுல் பாடி அருளுறத்
தந்து மென்மேலும் அன்பாய்க்
கோமளத் தாமரைப் பூமலர்ப் பதகதி
கொடுத்தாள என்னுளத்தே
குடிகொண்ட திருநீலகண்ட உன்போற் கருணை
கொண்டோர்கள் கண்டிலேனே"

என்ற நன்றி அறிதல் உணர்ச்சியோடு முடித்துநின்ருர். அன்றுமுதல் ஸ்ரீ சுப்பிரமணியன் நீலகண்டதாஸர் என்ற கீர்த்தி நாமம் பெற்று விளங்கிஞர். பிற்காலத்தில் இவருடைய சிஷ்யர்கள், சிவனடியார் தோற்றம் சிவனுடைய தோற்றமே என மதித்து இவரை ஸ்ரீ நீலகண்டசிவம் என்றே வழங்கி வந்தார்கள். அவதார புருஷனுக்கல்லால் மற்று யாருக்கு இவ்வாறு பதினறு வயதுக்குள் தத்துவக் கனிவோடுகூடிய பாடல்களைப் பாடவும், பக்தி வெறிகாட்டவும் முடியும்?

ஸ்ரீ நீலகண்டசிவம் அவர்களின் பக்தசரிதை மிக விசித்திரமான சரிதை. சுவைகனிந்த பக்தி அனுபவங்கள் மலிந்த சரிதை. அன்பர்கள் பாராட்டும் அருமை வாய்ந்த சரிதை. இன்னும் இருட்கதவை உடைத்தெறிந்து ஞான ஒளி பரப்பும் எழில் வாய்ந்த சரிதை. இன்ப சரிதை.

ஆண்டவ தரிசனம் காண்பதற்கு முன்னமேயே சதா ஆலயப் போக்கும் அருள்கனியப் பாடுதலும் என்ருல் தரிசனம் கண்டபிறகு கேட்கவா வேண்டும்? ருசிகண்டால்

எங்ஙனம் விடுவது? சைவ குரவர்கள் கையாண்ட பாடல் முறையும் பணிசெய்யும் முறையுந்தான் இவருடையதுவும். எப்பொழுதும் விருத்தங்களையும் இசைநலம் செறிந்த கீர்த்தனங்களையும் ஏராளமாக இயற்றி இயற்றி ஸ்ரீ நீலகண்ட சுவாமிக்கு அர்ப்பணம் செய்துகொண்டே வந்தார். இப்படியெல்லாம் கன்னல்பாகிலும் கொம்புத்தேனிலும் கனிரஸத்திலும் கனிந்த கவிபாடும்படி ஆண்டவன் அருள் செய்தது தமிழ் செய்த தவந்தான். தெய்வத்தின்மீதே காதல்கொள்ளப் பழகிய மனம் வேறு எப்பொருளிலும் காதல்கொள்ள இசையவில்லை.

V. பைத்தியமா இலக்ஷிய வெறியா ?

ஸ்ரீ சிவம் அவர்களின் மாமனார், பாவம், அழுத்தமான லௌகிகப் பற்றுடையவர். அவருடைய மருமகன் இப்படி ஞானப்பைத்தியம் பிடித்து அலைந்தால், அதுவும் தங்கச் சிலைபோன்ற மனைவியை மறந்து அலைவதென்றால், எங்ஙனம் தாங்கும்? கொதித்துவிட்டது அவருடைய மனம்.

இந்த உலகம் பாவ உலகந்தான் ஒரு நிலையில் பார்க்கப்போனால். அசாதாரணமான மனநிலையை ஒருவனிடம் கண்டுவிட்டால், விளங்காமை காரணத்தாலோ, பொறாமை காரணத்தாலோ ஏளனம் செய்கிறது. பெரும்பாலும் பொறாமைதான் காரணம். இந்த ஏளனத்தையும் ஏளனம் செய்யும்படி அந்த அசாதாரண மனநிலை ஓங்க ஓங்க, வாயொடுங்கிப் பின்னர் மதிக்கத் தலைப்படுகிறது. மதிக்கத் தலைப்படுவதும் எதனால்? மதிப்பதன்மூலம் தனக்கும் மதிப்பு என்றுள்ள சுயநல காரணத்தால். இது உலக இயற்கை.

ஸ்ரீ நீலகண்டதாஸரைப்பற்றி ஆதியில் எழுந்த ஏளனப் பேச்சை, அதாவது ஞானப்பைத்தியம் பிடித்தவன் என்ற பேச்சை, ஸ்ரீ ஸ்தாணுநாத ஐயர் கேட்டு, மிகவும் மனம் வருந்தி, அவரை ஒருநாள் தமது வீட்டிற்கு அழைத்துவந்தார். மாமனார் வீட்டுக்குப் போனாலுந்தான் என்ன, வழிபாட்டை விட்டுவிட்டாரா? கிடையாது. எப்போதும் ஏடும் எழுத்தாணியுந்தான். உள்ளத்திலே எவ்விதமான சலிப்பும் இல்லாமல் பொங்கி அலைமோதிக்கொண்டிருக்கும் பக்தி அனுபவத்தை அருமையான பாடல்களிலே

தேக்கிக்கொண்டே யிருப்பார். முத்தும்பவளமும்போன்ற சொற்களால் பாமாலை தொடுத்துக்கொண்டே யிருப்பார். பரமன் பதத்தே சமர்ப்பித்து அர்ச்சனை செய்துகொண்டே யிருப்பார். இரவென்பதில்லை. பகலென்பதில்லை. பொதுவாக இரவு நேரத்தில் அதிகப்படியான ஈடுபாடேயொழிய எள்ளளவும் குறைந்தபாடில்லை. ஸ்தாணுவாகத ஐயருக்கு மனம் சலித்துவிட்டது. மாப்பிள்ளைமீது கடுமையான கசப்பே ஏற்பட்டுவிட்டது. இரவுநேரமானால் மனைவியுடன் காதல்கனிந்த இன்பமொழிகளைப் பேசி ஆனந்தமாகக் கொஞ்சி மகிழும் காட்சியையே எதிர்பார்த்த அவருக்கு, மாப்பிள்ளை கிரிச் கிரிச்சென்று எழுத்தாணி கொண்டெழுதும் சப்தம் கேட்டால், ஏன் கசப்பு ஏற்படாது? பொறுத்துப் பொறுத்துப் பார்த்தார். தாங்க முடியவில்லை. சீறி விழுந்தார் பக்தர்மேல். "அறைக்குள்ளே விளக்கு இருந்தால்தானே இந்தப்பயல் இப்படி கன்னு பின்னு என்று கிறுக்கிக்கொண்டிருப்பான். நாளை முதல் விளக்கு ஒன்றும் வையாதே. இந்த படவா என்ன செய்கிறான் பார்ப்போம்" என்று மனைவிக்குக் கட்டளை இட்டார். ஸ்வயம்பிரகாச ஆத்மாக்களுக்கு விளக்கு இல்லாது போனால் குடியா முழுகிவிடும்

"இவன் சமணமதத்தைப் புறக்கணித்தான். இவனை நீற்றறையில் போடு. விஷத்தைக் கொடு. கல்லுடன் கட்டிக் கடலில் ஆழ்த்து. யானையைக்கொண்டு கொல்லச் செய்" என்று திருநாவுக்கரசரை இம்சிக்க அரசன் கட்டளையிட்டானே, என்ன ஆயிற்று? "இவன் இருக்கிற இடத்திற்கு நெருப்புவை" என்றார்களே சம்பந்தரைப் பார்த்து. என்ன ஆயிற்று? தியாகய்யருடைய ஸ்ரீராம வெறியை

வெறுத்து அவர் பூஜை செய்து வந்த விக்ரகத்தை ஆற்றில் எறிந்தார் அவருடைய சகோதரர். காவிரியாறு உருட்டிக் கொண்டா போய்விட்டது? இல்லையே. பக்தர் நெக்கு விட்டு உருகிய உருக்கத்தினால் மீண்டும் அகப்பட்டுக்கொள்ளத்தானே செய்தது? பாவம், உள்ளத்தெளிவின் மேன்மையை உணராமல், பக்தியின் பிரதாபத்தை அறியாமல், மண்ணாசை மயக்கத்தில் கிடந்து உழலும் விட்டில் பூச்சிகள் இடையூறு செய்வது வழக்கந்தான். இந்த இடையூறுகளையும் இடையூறு செய்த கர்த்தாக்களையும் அன்பு உலகம் வெறுத்தல் கூடாது. பாராட்டவே வேண்டும். இந்த இடையூறுகள் பக்தியின் பெருமையை உணர எவ்வளவோ துணை செய்கின்றன. ஜானகியின் பெருமைக்குக் காரணம் ஜனகன் இல்லை, தசரதன் இல்லை, இராமனும் இல்லை. அசோகவனமே. எத்தனை துயருக்கெல்லாம் உள்ளாகிறாள்! எத்தனை முறைதான், எத்தனை விதந்தான் இராவணன் அவளைக் கவர்ந்து பாசவலைகளை எறிகின்றான்! எத்தனை முறைதான் அவளை நெஞ்சுபிளக்கும் இன்னல்களுக்கு இரையாக்குகின்றான்! அத்தனையையும் வென்று, முடிவில், வேதித்தெடுத்த சுவர்ண விக்ரகமாக அல்லவா அவள் வெளி வருகின்றாள்? அசோகவனமல்லவா இதமாக விரிந்து அவளுடைய பெருமையை எழுத இடங் கொடுக்கிறது! ஆகவே துன்பம் செய்த ஸ்ரீமான் ஸ்தாணுநாதஐயரை நாம் பாராட்டவேண்டும். அவரும் பக்தருடைய பக்தியைக் குலைத்து லௌகிகச் சாயத்தை அவருடைய மனதில் ஏற்றிவிட வேண்டுமென்று எத்தனையோ பாடுதான் படுகின்றார். அசைந்தாரில்லை ஸ்ரீசிவம். அறைக்குள்ளே விளக்கு இல்லாமல் போய்விட்டாலும், சொற்

24388

கோயில் சமைப்பதை ஸ்ரீசிவம் விட்டாரில்லை. கொடி தோறும் கோயில் கட்டிக்கொண்டும் கடவுளை அதில் பிரதிஷ்டை செய்துகொண்டுமே இரவைக் கழிப்பார். தூக்கம் உண்டா? சோர்வுதான் உண்டா? பொழுது விடிந்ததும் சுவடிகளையெல்லாம் திண்ணையில் பரத்திக்கொண்டு பார்வையிடுவார். பக்கத்து வீட்டுப் பையன்களெல்லாம், பித்தன் செய்கிற காரியத்தைப் பார்க்கலாமே என்ற எண்ணத்துடன், அங்கே வந்து கூடுவார்கள். "அடே, ஸ்தாணு ஐயர் மாப்பிள்ளை பாட்டுக் கட்டுறண்டா" என்பார்கள். பக்தர் அதையெல்லாம் கவனிப்பாரா என்றால் கிடையாது. அவருடைய மனம் மெய்ப்பொருளோடு உறவுகொண்டு இலைக்கும்போது இந்தப் பேச்செல்லாம் அவருடைய செவியை எட்டவா செய்யும்? அவர்களிடமும் தாம் எழுதிய பாடல்களை ஆனந்தமாகப் பாடி மகிழ்வார். மாமனாரோ மனம் புழுங்குவார், "நமக்கோ ஒரே பெண். எத்தனை செல்வம்! அவளுக்கு வாய்த்தவன் இப்படியா அறப்பைத்தியமாக இருக்கணும்" என்று மனைவியிடம் சொல்லிச் சொல்லி மனம் அழுங்குவார்.

ஒருநாள் வழக்கம்போல் ஸ்ரீசிவம் இரவில் இருட்டறைக்குள் உட்கார்ந்துகொண்டு எழுதிமுடித்த பாடல்களை, விடிந்ததும் பரிசோதனை செய்துகொண்டிருந்தார். வழக்கம்போல் பையன்களும் சூழ்ந்திருந்தார்கள். ஸ்ரீமான் ஸ்தாணுஐயர் ஆற்றங்கரையில் நீராடி, ஜபதபம் முதலிய காரியாதிகளை முறையே முடித்துக்கொண்டு, கமண்டல தாரியாக வீட்டினுள்ளே நுழைந்தார். மாப்பிள்ளை இருக்கிற கோலத்தைக் கண்டாரோ இல்லையோ, ருத்திரமூர்த்தியாகி, ஏடு எழுத்தாணி சம்காரத் திருப்பணியில்

இறங்கிவிட்டார். எல்லா ஏடுகளையும் காலால் தள்ளி, மிதிமிதி என்று மிதித்து, அத்தனையையும் வாரி வீதிவழியே செல்லும் குப்பை வண்டியில் கொட்டிவிடவே, குப்பை வண்டியும் அந்த ஏடுகளை வாரிக்கொண்டு போய்விட்டது.

அன்று திரௌபதியை அநியாயமாகச் சூதில் பணயம் வைப்பதற்கு யுதிஷ்டிரன் முனைந்ததை உன்னி பாரதியார் புலம்புகின்றார். "பாவி, தருமன், மதியிழந்தவனாக, வேள்விசெய்துபெற்ற அவிர்ப்பாகத்தை நாய்க்கு இடுவது போல், எல்லாப் பொருள்களையும் விற்று வாங்கின பொன்னால்செய்த ஆபரணத்தை ஆந்தைக்குப் பூட்டுவதுபோல், அரும்பொருளைச் செலவுசெய்து அரிய பாடுபட்டுக் கட்டிமுடித்த கனகமாளிகையில் பேயைக் குடியேற்று வதுபோல், அருந்தவம் கிடந்துபெற்ற ஆண்குழந்தையைக் கேவலம் செருப்புத்தோலுக்காக வேண்டிக்கொல்வது போல் சூதில் பணயப்பொருளாக தேவி திரௌபதியை வைக்கத் துணிந்துவிட்டானே" என்று புலம்புகிறார். அத்தனை மதியிழந்த செயல்தான் பாடல் ஏடுகளைக் குப்பை வண்டியில் கொட்டியதும் என்று அன்பர்கள் மதிப்பார்கள். எத்தனை மாணிக்கங்கள் குப்பையில் மறைந்தனவோ தெரியாது. எத்தனை தீர்க்கமுடியாப் பிரசினைகளுக்குத் தீர்ப்பு இருந்ததோ அதுவும் தெரியாது. சர் ஐசக் நியூட்டன் பலநாளாக முயன்று முயன்று எழுதிவைத்த சில சுவடிகளை அவருடைய பூனை ஒன்றுமில்லாமல் ஆக்கிவிட்டதாம். அதனால் விஞ்ஞான உலகிற்கு ஏற்பட்ட நஷ்டம் எவ்வளவோ? கணக்கிடமுடியாது. எத்தனை ஞானமடைகள் இன்றுவரை அடைபட்டுக் கிடக்கின்றனவோ? தெரியாது. இப்பொழுது நடந்த கோரயுத்தத்தினால் எத்தனை கலைக்

குவியல்கள், பல நூறு வருஷங்களாகச் சேகரித்துவந்த எத்தனை எத்தனை கலைப் பொக்கிஷங்களெல்லாம் பாழாகி யிருக்கும்? கலைக்கு இப்படியெல்லாம் ஆபத்து வருவதுண்டு. அநியாயமாக ஸ்ரீ சிவம் எழுதிய அநேகம் பக்திப்பாடல்கள், பாடல் ரூபங்களிலுள்ள வேதாந்த விரிவுரைகள் ஸ்தாணு நாதஐயருடைய கோபாக்கினிக்கு இரையாயின. ஏதோ உத்தம பக்தர்களை ஆண்டவன் சோதிப்பார் என்பது ஐதீகம். ஒருவேளை ஸ்ரீமான் ஸ்தாணுநாத ஐயர் மூலம் அந்த ஐதீகம் வெளியாகிறது போலும்.

மறுநாள் பாடல் எழுதுவதற்கு வசதியாக வேறு ஒரு இடத்தை பக்தர் தேர்ந்துகொண்டார். அங்கும் மாமனார் விட்டாரில்லை. இத்தனை இம்சைக்கும் பக்தர் மனம் திரும்பு கிறதா என்றால், அவதார புருஷருக்கு ஏன் திரும்பப் போகிறது? அவதார லக்ஷியம் சித்தியாகவேண்டுமல்லவா? உண்டு உடுத்து உறங்குவதற்காகவா அவர் அவதரித்திருக் கின்றார்? இல்லையே. சிவத்துவேஷம் செய்கின்றவர்களை வேரோடு கல்லி எறிந்து சைவவிருதைக் காட்டுவதற் கல்லவா அவதரித்திருக்கின்றார்? அவர் இருந்த வீட்டின் பக்கம் பெரியகாடு. அதனுள்ளே ஒரு சாஸ்தா கோயில். பக்தர் அங்கு சென்று ஒளிந்துகொண்டு பாசுரங்கள் தொடுக்க ஆரம்பித்துவிட்டார்.

தொல்லையைக் கொடுத்த மாமனார்தொல்லையை அனுப விக்கவேண்டாமா? எங்கெல்லாமோ மாப்பிள்ளையைத் தேடி அலைந்தார். ஆகக் கடைசியில் சாஸ்தான்கோயிலில் இருப்பது தெரியவந்தது. அங்கே சென்றார். மாப்பிள்ளை யைக் கண்டும்விட்டார். எத்தனை பாடுபடுத்தியிருப்பார்

என்பதைச் சொல்லவா வேண்டும்? வீட்டுக்கு அப்படியே கரகரவென்று இழுத்துக்கொண்டுவந்து வேண்டுமட்டும் திட்டினார். "இந்தப் பயலுக்கு நல்ல தயிரும் சோறும் போட்டுப் போட்டு பயல் கொழுத்துவிட்டான். இந்தா, படவா, மாடுகளைக்கொண்டு தோப்பிலே இட்டு மேய்த்துக்கொண்டிரு. வேலை இல்லாமல் கூத்தாடவா செய்கிறாய்" என்று ஆக்ஞாபித்தார். பதில் ஒன்றும் பேசவில்லை. ஆனைய நாயனார்போன்று மாடுகளை இட்டுக்கொண்டு தோப்பை நாடிச் சென்றார். ஆனால் வீடு திரும்பவே இல்லை. திருவனந்தபுரத்திலிருந்து கால்நடையாகவே நாற்பது மைல் தூரத்திலுள்ள தமது தாய்வீடு வந்து சேர்ந்துவிட்டார். பார்த்தார் ஸ்தாணுநாதஐயர். "எக்கேடும் கெடட்டும். நமக்கென்ன பணமில்லையா? நம்பெண் நம் வீட்டிலேயே இருக்கட்டும்" என்று தீர்மானித்துவிட்டார். ஒருமட்டிலும் மாமனார் படையெடுப்பு ஓய்ந்தது. ஸ்ரீசிவம் அவர்களின் பக்தி அழுத்தத்தை எடுத்துக்காட்ட அவர் செய்த சேவை பெரிது. எவ்வளவோ பாராட்டுதலுக்குரியது.

VI. புலி புல்லைத் தின்னுமா?

சிறையிலிருந்து விடுபட்டவருக்கு எத்தனை மகிழ்ச்சி யிருக்குமோ அத்தனை மகிழ்ச்சியோடு, மாமனார் மெய்க் காப்பிலிருந்து விடுபட்டு, பத்மநாபபுரத்தில் காலங் கழித்து வந்தார் அத்தனை இளவயதிலுங்கூட சம்சார பந்தத்தினின்றும் விடுதலைபெறுவதில் அவருக்கு அவ்வளவு மகிழ்ச்சி என்றால், அப்படி மகிழ்ச்சி கொள்ளும் மனப் பான்மையானது அவதார விசேஷத்தினால் வாய்க்கப் பெற்றதேதவிர ஏதோ எளிதாக வாய்த்துவிட்டது என்று கொள்ளுதல் பொருந்தாது.

தாஸரின் தகப்பனார் அணுவளவும் இவருடைய காரியங்களில் தலையிடுவது கிடையாது. அவருக்கும் பூர்வஜென்ம அருள் ஏதோ கொஞ்சம் ஒட்டியிருந்ததனாலே, அந்த அருள் வழியே தமது பிள்ளையின் போக்கை உணர்ந்து சும்மா இருந்துவிட்டார். ஆனால் தாயாருக்குமட்டிலும் அந்த மனோநிலை வரவில்லை. தகப்பனாருடைய சாந்தி ஒரு பக்கம் ஆதரவளிக்க, தாயாருடைய பரபரப்பும் லௌகிக நாட்டமும் பக்தருடைய பக்தி வீச்சை ஓரளவு தடைப்படுத்தின. எனவே மன அசைவு. இந்த மன அசைவை இன்னும் மிகைப்படுத்தும் அளவில் தாயாருடைய ஆர்வம் நிறைந்த மொழிகள் வெளிவருகின்றன. பக்தருடைய மனத்தையும் தைக்கின்றன. "இத்தனை புத்தியும் சமர்த்துமான பிள்ளை ஏதாவது உத்யோகம் பார்த்தால் எவ்வளவு நல்லது" என்று சொல்லிச்சொல்லி ஏங்கினாள். தற்செயலாக திருவாங்கூர் சமஸ்தானத்தில் ஒரு சில போலீஸ் உத்யோகங்களை முன்

னிட்டு ஒரு போட்டி ஒன்று நடைபெற்றது. ஸ்ரீ நீலகண்ட சிவம் அந்தப் போட்டியில் கலந்துகொண்டார். சிவபக்தருக்கு ஏன் இந்த உத்யோகமெல்லாம் என்று நினைக்கலாம். ஆனால் உத்யோகம் பார்ப்பது அடியார் பரம்பரைக்கு விரோதமான காரியம் ஆகாது.

மகான் மாணிக்கவாசகர் மந்திரி உத்யோகம் பார்க்கவில்லையா? சிறுத்தொண்டர் தண்டத் தலைவராக விளங்கவில்லையா? சேக்கிழார் மந்திரத் தலைமை பூணவில்லையா? ஆகவே ஸ்ரீ நீலகண்ட சிவமும் உத்யோகம் தரித்ததில் எவ்விதமான புதுமையும் இல்லை. உத்யோகம் பார்த்தும் உள்ளச் சிதைவு ஏற்படாதிருந்ததுதான் ஆச்சர்யம். ஸ்ரீ சிவம் அவர்கள் போட்டியில் முதல்தரமாகத் தேர்ச்சி பெற்று கழக்கூட்டம் என்னும் கிராமத்தில் ஒரு குமாஸ்தாவாக அமர்ந்தார். புலி புல்லைத் தின்ன ஆரம்பித்து விட்டதோ என்று எண்ணலாம். இல்லை. இல்லவே இல்லை. என்ன இருந்தாலும் புலி புலிதான். வேறு எப்படி மாற முடியும்? சுமார் இரண்டு வருஷம் அந்த உத்யோகம். அதன்பின்னர் கிராம மாஜிஸ்திரேட் உத்யோகம். பன்னிரண்டு வருஷம் வெகுதிறமையுடன் வகித்துவந்தார். வருஷ எண்ணிக்கையில்கூட ஐதீகம் கலந்த மகிமை மிளிருகின்றது.

எத்தனை உத்யோகம் பார்த்தாலும் மனம் எல்லாம் ஈச்வரனிடந்தான். மந்திரத்தொழில் செய்யவந்த மாணிக்கவாசகர் பாண்டியனுக்காகவேண்டி குதிரைகள் வாங்கச் சென்ற இடத்தில், குதிரைகள் வாங்காது பொருளை ஈச்வர கைங்கர்யத்தில் செலவிட்டார். அதனுடைய

மர்மம் என்ன? தாம் இருக்கிறதெங்கே, தாம் யாருடைய ஆள், செய்யவேண்டியது என்ன என்பதை யெல்லாம் மறந்து, தம்மைச் சூழ்ந்து காண்பதெல்லாம் சர்வமும் கடவுள் மயம், குதிரை வாங்குவதும் ஒன்றுதான், குருந்த மரத்தடியில் அமர்ந்து உபதேசம் பெறுவதும் ஒன்றுதான் என்று எண்ணும்படியான பாவனை முதிர்ச்சி கனிந்து விட்டது. அவ்வளவுதான். உலக ஒப்பனைக்கு அவர் ஏதோ மந்திரத்தொழிலே உதாசீனம் செய்தார் என்று தோன்றும். உண்மை அதுவா என்றால் இல்லை. அவருடைய மனோநிலை, அவருடைய பக்திக்கனிவு, அவருடைய பாவனை முதிர்ச்சி யெல்லாம் உத்யோகம் கட்டுகின்ற வேலியையுந்தாண்டி அப்பாலுக் கப்பாலாய்ப் போய் விட்டன. அவருடைய உத்யோக நிலையானது, மகத்தான அவருடைய பக்திப்பரப்பில், உள்ளடங்கி உருத்தெரியாது மறைந்து விட்டது. ஆனால் ஸ்ரீ நீலகண்டதாஸருடைய அநுபவத்தில் ஒரு சிறு மாற்றத்தைக் காண்கிறோம். தனித்தனியான அநுபவங்களாகவே உருவெடுக்கின்றன. பக்திநிலைக்கு உத்யோக நிலையானது முரண்பாடானது, இடையூறும் செய்யக்கூடியது என்பதை உள்ளூற உணர்ந்து அதனை ராஜிநாமாச் செய்துவிடுகின்றார். ஆண்டவ தரிசனமே. அது அன்றி வேறொன்றும் வேண்டாம்.

"உற்றாரை யான் வேண்டேன்; ஊர் வேண்டேன்;
பேர்வேண்டேன்;
கற்றாரை யான் வேண்டேன்; கற்பனவும் இனி அமையும்;
குற்றாலத் தமர்ந் துறையும் கூத்தா, நின் குரைகழற்கே
கற்றாவின் மனம் போலக் கசிந்துருக வேண்டுவனே."

என்று அழுது அழுது ஏங்கவில்லையா மகான் மாணிக்க வாசகர்? அந்த ஏக்கந்தான் பக்தருக்கும். இந்த ஏக்கத்தில் உத்யோக பந்தம் வலுப்பெற முடியுமா? திருவனந்தபுரம் திவான், பக்தருடைய மனோ நிலையை உணராது, "ஏன் ராஜிநாமாச் செய்தீர்" என்று கேட்டார். "என்னவிதம் பிழைப்போம்" என்று பாடத் தொடங்கி விட்டார். கேட்டவரும் ஏன்தான் கேட்டோம் என்று எண்ணும்படி பாடிய பாட்டின் சிலஅடிகளைப் பார்ப்போம்.

இராகம் முகாரி. தாளம் ஏகம்.

"என்ன விதம் பிழைப்போம் எளியோரே நாம்
எப்படித் தேறுவோம் சொல்வீரே.

சரணம்

வேலி பயிரைக் காத்த நாள் போய்—பின்பு
வேலி பயிரைத் தின்னும் நாளாய்—இப்போ
வேலி பூமியைத் தின்னலாச்சே—இனி
மேலும் எப்படியாமோ, காலம் பிசகிப் போச்சே"

இவ்வாறு பாடினால் மேற்கொண்டு கேட்க இடம் ஏது?

VII. பாசவலை.

இந்தப் பன்னிரண்டு வருஷ உத்யோகத்திற்கிடையில் அவருக்கு 4 குழந்தைகள் பிறந்தன. முதல் மூன்று குழந்தைகளும் ஆண்குழந்தைகள். நான்காவது பெண். ராஜிநாமாச் செய்து நான்கு வருஷங்களுக்குப் பின் இன்னும் ஒரு ஆண் குழந்தை. பிள்ளைகளின் பெயர்கள் பின் வருமாறு.

முதல் மகன் பெயர் குடும்பப்பெயரான — சுப்பிரமணியன்
இரண்டாவது புத்திரன் பெயர் — ஸ்தாணுநாதன்
மூன்றாவது புத்திரன் பெயர் — நீலகண்டன்
புத்திரியின் பெயர் — பார்வதி (அம்மாள்).
ஐந்தாவது பையன் பெயர் — சுந்தரம்

தற்போது மகானுடைய பெயரை ஞாபகமூட்டும் சின்னமாக இருப்பவர் அன்னாருடைய திருப்புதல்வி பார்வதி அம்மாள் அவர்களே. வயது எழுபதுக்கு மேலிருக்கும். இன்னும் குழந்தைதான். ஆனால் தத்துவ விஷயத்திலோ மிகச் சிறந்த பண்டிதை சரளமான நடையில், எத்தனையோ நூல்களை, எத்தனையோ தினங்கள் படித்து, எத்தனையோ அளவில் சிந்தித்துத் தெளிந்த தெளிவோடு பேசி விடுவார்கள். குல வித்தை கல்லாமல் பாகம் படும் என்பதற்கு மிக நன்றாகச் சுட்டிக்காட்டும் ஓர் உதாரணம். ஸ்ரீசிவம் அவர்களின் வாயினின்றும் உதிர்ந்த அத்தனை பாடல்களும் அவர்களுக்கு மனப்பாடம். கீர்த்தனங்களை அடிகள் பாடிய பாணியிலேயே இன்றைக்கும்

பாடி வருகின்றார்கள். எப்பொழுதும் பக்திப்பாடல்களைப் பாடுவதும் பக்திமயமானவைகளைப் பேசுவதும் ஆண்டவன் திருநாம அர்ச்சனையுந்தான் அவர்களுடைய நித்யநியமங்கள்.

பக்தருக்கு ஐந்து குழந்தைகள் பிறந்து குடும்பபாரம் பெருகித்தான் விட்டது. ஆனாலும் அவருடைய மனம் பரமனைச் சுற்றியே பல்லாண்டு பாடி வருகின்றது. மனைவி மக்களை யெல்லாம் வேட்டகம் கொண்டு விட்டுவிட்டார்.

இடையில் ஏதோ திடீரென்று வீடுகட்ட வேண்டுமென்று தோன்றிவிட்டது. என்ன கருணை எண்ணம் தூண்டிற்றோ தெரியவில்லை. திருவனந்தபுரத்திலுள்ள கிருஷ்ணன்கோயில் தெருவில் ஒரு மனை வாங்கி வீடுகட்ட ஆரம்பித்தார். அஸ்திவாரந்தான் அமைத்தார். அதற்குள் என்ன தோன்றிவிட்டதோ தெரியவில்லை. இடையிலேயே விட்டுவிட்டார். கடவுள் விராஹகம் உந்தி, உள்ளம் கறங்காகச் சுழலும்போது, வீடு கட்டவும் மாடி சமைக்கவுந்தான் மனம் ஒருப்படும்போலும்? அரியொடு பழகிவிட்டு அங்கணத்து அழுக்குத் தின்னும் நரியொடு பழகுவதா? தம்மாலே தாங்கமுடியவில்லை. நிற்கவோ நிலைக்கவோ பொறுமையில்லை. கூழில்லை என்றாலுங்கூட வறுமை நிலைக்கு அழுத்தம் கிடையாது. ஆனால் கூழுக்கு இட உப்பில்லை என்னும்போதுதான் அழுத்தம் கிடைக்கிறது. அதேபோன்று வீடு கட்டாது விட்டுவிட்டால் அவருடைய துறவு உள்ளத்தின் மேம்பாடு தெரியாது. ஆரம்பித்து இடையில் விடும்போதுதான் துறவு உள்ளத்தின் சீலம் துலங்குகின்றது. புத்தபகவான் மறைந்த மாதிரி ஊரை விட்டு ஒருவருக்குந் தெரியாமல் மாயமாய் மறைந்துவிட்டார். மூர்த்திதலமும் தீர்த்தகுலமுமாகத் தேடித்திரிந்

தார்கள் சுற்றத்தார். அரனைத்தேடி அவர் திரிய அவரைத் தேடி இவர்கள் திரிய, இடையிலே காலமும் மூன்று வருஷங்களாக விரிந்து படர்ந்தது.

அக்காலத்தில் திருநெல்வேலி வட்டாரத்தில் கோடக நல்லூர் சுந்தரசுவாமிகள் என்றால், பக்தர்களிடையே பரமனைக்கண்ட மாதிரிதான். புரைதீர்ந்த பக்திப் புனிதர். ஞானக்களஞ்சியம் கிருபாசமுத்திரம். மாணிக்கவாசக ருக்கு நல்லாசிரியன் வாய்த்தமாதிரி, குமரகுருபாருக்கு நல்லாசிரியன் வாய்த்தமாதிரி ஸ்ரீசிவம் அவர்களுக்கும் அவர்கள் நல்லாசிரியனாக வாய்த்தார்கள். மாறுவேடம் தாங்கியவராய் ஸ்ரீசுவாமிகளிடம் ஞானோபதேசம் பெற்று வருகின்றார் பக்தர்.

ரகஸியம் எப்படியோ வெளியாகிவிடுகிறது. ஸ்ரீசிவம் அவர்களின் மைத்துனரும் ஆத்தூர் பண்ணையாருமான ஸ்ரீமான் ராமசுவாமி ஐயர் அநுமன் பிராட்டியைக்கண்ட மாதிரி அவரைக் கண்டுவிடுகின்றார். கண்டுவிட்டால் என்ன? அதனால் இலக்ஷியத்தை விட்டுக்கொடுத்துவிடப் போகிறாரா? அது எப்படி முடியும்? ஸ்வாமி அவர்களை விட்டுப் பிரியவே இல்லை. கண்ணப்பர் போன்று விடாப்பிடி தொடாப்பிடியாக அவரைவிட்டு அங்கே இங்கே அகல மறுத்துவிட்டார். பின்னர் சுவாமிகளுக்கு விவரம் தெரிந் தது. திருவனந்தபுரத்திற்கு ஒரு சிஷ்யனை அனுப்பி பக்த ருடைய முதல் இரண்டு புத்திரர்களையும் வரவழைத்தார். அப்புறம் கேட்பானேன்? அடிகள் வீடு திரும்பினர்.

ஸ்ரீசிவம் வீடு திரும்புவதற்குமுன் அவ் திவார நிலையி லிருந்த வீடு முழுவடிவம் பெற்றுவிட்டது. அதை முற்றுப் பெறச் செய்தவர் அவருடைய மனைவியார் ஸ்ரீமதி லக்ஷ்மி

அம்மாள்தான். வீட்டைப் பார்த்தால், குழந்தைகுட்டிக ளோடு இல்லறம் நடத்துவதற்கு ஏற்ற இடம் என்றல்லவா மதிக்கவேண்டும்? பக்தர் மனம் அவ்வாறு மதிக்கத் துணிய வில்லை. அதனை ஒரு பஜனைமடமாகவே பாவித்தார். உண்மைதானே. ஆலயத்தைச் சென்று பார்வையிட்டால், ஒருவன் சிற்ப உள்ளத்தோடு மதிப்பிடுவான். ஒருவன் வயிறுகொண்டே மதிப்பிடுவான். அதெல்லாம் அவனவன் பாவனையையும் மனப்பக்குவத்தையும் பொறுத்தது. ஆகவே பக்தருக்கு வீடு வீடாகவே தோன்றவில்லை. பஜனை மடமாகவே தோன்றிற்று. சுவர்களில்எல்லாம் தெய்வ வடிவங்களைத் தாமாகவே வரைந்தார். ஒரு சுவரில் அவர் வரைந்துள்ள கைலாச பர்வதத்தைப் பார்வையிட்ட வர்கள் அப்படியே மூக்கில் விரல்வைத்தவர்களாக நின்று விட்டார்கள். சோமவாரந்தோறும் தமது பிள்ளைகளோடு கூடி பஜனை செய்வார்.

இக்காலத்தில்தான் இவர் நாயன்மார்களுடைய சரித் திரத்தையெல்லாம் கீர்த்தனை வடிவங்களில் எழுத ஆரம் பித்தார். எழுத ஆரம்பித்ததன் நோக்கம், விஷயத்தை எல்லோரும் ஆர்வமுடன் தெரிந்துகொள்ளவும், தெரிந்து மனத்தில் இருத்திப் புனிதமடையவுந்தான். முதலாவது பாடியது கண்ணப்பர் சரித்திரம். கண்ணப்பர் வாழ்க் கையை முதலாவதாகத் தேர்ந்தெடுத்ததில் நல்லபொருள் இருக்கின்றது. கோடகநல்லூர் சுந்தரசுவாமிகளை அண்டி, பிடிவாதமான ஞானவேட்கையைக் காட்டும்போதெல்லாம், கண்ணப்பருடைய பிடிவாத குணமே அவருடைய மனத் தைத் தூண்டியிருக்கவேண்டும். ஆகவேதான் அவருடைய சரிதத்தை முதலாவதாகப் பாடினார் போலும்.

VIII. ஞானியர் கற்பகம்.

மகரிஷிகள் எவ்வாறு கைலாச மலையினையும் திருப்பாற்கடலையும் சத்தியலோகத்தையும் தங்கள் தாரகமாக மதித்தார்களோ அப்படித்தான் பக்தருடைய சிஷ்யர்களும் அவருடைய இல்லத்தை மதித்து வந்தனர். அந்தக் கண்கொண்டே அவர்கள் பார்த்துவந்தார்கள். கடவுள் அவதாரமே ஸ்ரீசிவம், தாங்களெல்லோரும் சிவகணங்களே என்பது அவர்களுடைய அசையாத நம்பிக்கை. இப்படி நம்பிக்கை கொள்ளும் அளவில் அத்தனை பக்தி வீரியத்தை மகான்சிவம் காட்டி வந்திருக்கின்றார். பக்த கோடிகள் அதிசயிக்கும்படி மகோன்னதமான ஞான நெடுங்குன்றில் அநாயாசமாக ஏறுவார். ஏறி ஆனந்த நர்த்தனம் செய்வார். கடல்மடை திறந்தாற்போன்று ஞானம் பழுத்த பழச்சுவை வெள்ளத்தைப் பெருக்கிவிடுவார். சிஷ்யர்களெல்லாம் சிவனருளைச் சிந்திக்கும் திருநிறைந்த சிந்தையராகவே திகழ்வர். அவருடைவ சிஷ்யர்களுள் மிகவும் குறிப்பாகச் சுட்டிக்காட்டும் பெருமை பெற்றோர் பின் வருவோராவர்.

திருவனந்தபுர சமஸ்தானம் 'அருமனை' கேசவன் தம்பி, ஹஜூர் காரியதரிசி ஸ்ரீமான் ஹரிஹர ஐயர், சுங்க இலாகா கமிஷனரான ஸ்ரீமான் பொன்னம்பலம்பிள்ளை, இன்னும் இவர்களைப்போன்ற பல பெரியோர்கள் ஆவர். மற்றும் பிரபல சங்கீத வித்வான்களும் சாஸ்திர அறிஞர்களும் கனபாடிகளும் பலதரப்பட்ட சந்நியாசிகளும் பக்தருடைய சிஷ்யர்களாக விளங்கினார்கள். அவருடைய வீட்டில் எப்பொழுதும் பஜனைகளும் வேதபுராண தத்துவ

ஆராய்ச்சிகளும் நடந்தவண்ணமாகவே இருக்கும். வீட்டுச் சுவரைத்தட்டினால் வேதமே முழங்கும்.

"கூசவேண்டாம் எவர்க்கும் பொதுச்சத்திரம்
கொண்டாடி வந்திடுமின்" என்பதே

அடிகள் கூறுவது. பொதுவாக சந்நியாசிகள் இல்லறத்தி லுள்ளவர்களைக் கண்டால் விழுந்து நமஸ்கரிப்பதில்லை. ஆனால் ஸ்ரீ சிவம் அவர்கள்முன் விழுந்து நமஸ்காரம்செய்தே மரியாதை செலுத்துவார்கள். தெரியாத விஷயங்களை யெல்லாம் தெரிந்துகொள்வார்கள். ஞானிகளுக்கு ஓர் கற்பகமாகவே விளங்கினார் பக்தர். இதுகாறும் பக்த ருடைய பக்திமேம்பாட்டைப் பார்த்தோம். இனி அவ ருடைய வாழ்க்கைத் துணையாகிய ஸ்ரீமதி லக்ஷ்மி அம்மாள் பக்தருடைய இலக்ஷிய சித்தியில் எவ்வளவுதூரம் பங்கெடுத்துக்கொண்டாள் என்பதைப் பார்ப்போம்.

IX. இகமும் பரமும்

இலக்ஷ்மி அம்மாள் என்றால் ஒரு சிலருக்கே தெரியும். சிவசிவா பாட்டி என்றால் ஊரெங்கும் தெரியும். ஒரு அபூர்வமான பாத்திரம். எப்பொழுதும் அவருடைய வாய் சிவநாமத்தையே உச்சரிக்கும். வார்த்தைகளை ஏதோ தகப்பனார் வீட்டுச்செல்வம் பறிபோகிறதாக எண்ணி அளந்தே கொட்டுவார், பேசவேண்டிய அளவுதான் பேசுவார். மற்ற நேரங்களில் சிவசிவா தான். சதாகாலமும் சிவநாமத்தை உச்சரித்து பக்தி செலுத்தினலொழிய பெருமையில்லை என்பதை நன்கு உணர்ந்து கொண்டார்போலும். தெளிந்த சங்கீத ஞானம் உண்டு. சாரீரமும் இனிமையான சாரீரம். பர்த்தா எழுதிய பாடல்களையெல்லாம் பாவம் கனியப் பாடி மகிழ்வார். ஸ்தானுநாத ஐயருக்குத்தான் செல்வக்குமரி என்றால் ஸ்ரீசிவம் அவர்களுக்கும் செல்வ மனைவிதான். வீட்டுக்காரியத்தில் துளிகூட அக்கறை கிடையாது. பக்தருடைய மனைவியாக அமர்ந்து அவருடைய பக்தி நிழலிலேயே படிந்துவந்தாலும், வியக்கும்படியான மனப்பக்குவம் வாய்க்கப்பெறுத குறையுடையவர்.

பொதுவாகப் பார்க்கப் போனல் பெரிய மகான்களுக்கு வாய்க்கப்பெற்ற மனைவியர் எல்லோரும் அவர்களோடு ஒத்துச்செல்லும் மனநிலை உடையவராக இருப்பது அரிதாகவே இருக்கின்றது. டால்ஸ்டாய் தினம் தினம் ஞானம் கனிந்த கனியாக மாறிக்கொண்டே வருகின்றார். மனைவியோ வயது முதிர்ந்தும் சிருங்காரச் சபலத்தினின்றும் விடுபடாதவளாக இருக்கின்றாள். கிளாட்ஸ்டனே

பிரதம மந்திரியாக அமர்ந்து, சூரியனே அஸ்தமிக்காத பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் கதியைக் கணித்துவருகிறார். அவர் மனைவியோ அபர்டீனும் அமெரிக்காவும் ஒன்றே என்று எண்ணும் வெள்ளை அறிவுடையவளாக இருக்கிறாள். ஏப்ரஹாம் லின்கன் ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதியாக ஆட்சிசெலுத்தி வருகிறார். மனைவியோ சுடுகின்ற காஃபியை முகத்திலே கொட்டும் கட்டைச் சிறுமதி படைத்த காரிகையாகக் காணப்படுகிறாள். அரிய பெரிய தரிசனங்கள் பல கண்டு உலக உத்தாரணத்திற்குப் பாடுபட்ட சாக்ரட்டீஸ் பெரியாருக்கு வாய்த்த மனைவியோ தாடகைதான். காந்திஜிக்கு ஒரு கஸ்தூரிபா வாய்த்தமாதிரி, வள்ளுவருக்கு வாசுகி வாய்த்தமாதிரி, சிறுத்தொண்டருக்கு வெண்காட்டு நங்கை வாய்த்தமாதிரி, ஸ்ரீமான் கியூரிக்கு ஸ்ரீமதி கியூரி வாய்த்தமாதிரி மனைவியர் வாய்ப்பது அவரவர்கள் செய்த புண்ணியம் என்று தான் சொல்லவேண்டும், சிலருக்குத் தங்கள் பார்த்தாக்களை ஆட்கொண்டு அமுல்செய்யும் இலக்ஷியங்களை விளங்கிக்கொள்ளவே முடியாது. சிலருக்கு விளங்கினாலும், அதுவும் ஏதோ ஓரளவுதான் என்றாலுங் கூட, அற்றம்வரை நீங்காத நிழல்போல உடன் சென்று உருவாக்கும் கைங்கர்யத்தில் ஈடுபடமுடியாது. சிலர்தாம் வெற்றிகரமாகத் துணைசெய்ய முடியும். மகான் நீலகண்ட சிவம் அவர்களுக்கு வாய்க்கப்பெற்ற மனைவி இரண்டாவது ரகத்தைச் சார்ந்தவர். பர்த்தா கொண்டுள்ள இலக்ஷியத்தின் மெய்ப்பொருளை ஓரளவு விளங்கிக்கொண்டார். அவருடைய இலக்ஷிய தரிசனத்தின் மொழிபெயர்ப்பாக வெளிவந்துள்ள பாடல்களை யெல்லாம் பாராட்டும் மனம் படைத்துள்ளார். அவருடைய இசை ஞானமும் இப்பற்றுதலை வளர்க்க நன்றாகத் துணைசெய்துவந்தது

ஆனாலும் பக்தர்போன்று பக்திச் சிறகு நறி விண்ணிட்டுப் பறக்கும் அளவுக்கு இவராலும் பறக்கமுடியாது என்று லும் உற்றதுணையாகவாவது விளங்கவேண்டுமல்லவா? அதுதான் முடியாத காரியம். மனமும் எட்டவேண்டும். மதியும் எட்டவேண்டும். எப்படி முடியும்? எவரொண்டு முடிக்கு ஏணி கட்டின கதைதான்.

என்றாலும் ஒரு சேவைக்காகவேண்டி எல்லோரும் அவரைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றார்கள். நாணய சாலையில் நாணயங்களை அடித்துக் குவிக்கிறமாதிரி ஸ்ரீ சிவம் நாளும்பொழுதும் நாழிகையும் பாராமல், மேதை பொங்கி வரும்போதெல்லாம், பாடல்களை எழுதிக் குவித்துக் கொண்டேயிருப்பார். ஏடுகளில் சிலவேளை எழுதுவார். கடுதாசியில் சிலவேளை எழுதுவார். மாக்கல்லை எடுத்துத் தரையிலே எழுதிவிடுவார். தாம்பூலம் தரிக்கும்போது வெற்றிலையைத் துடைத்து இருந்த இடத்திலேயே எழுதி விடுவார். கரியை எடுத்துக்கொண்டு சமயங்களில் சுவரிலும் எழுதிவிடுவார். சேகரிக்கிற பாடல்களை அம்மையார் சேகரித்துவிடுவார். படி எடுக்கிற பாடல்களுக்கும் படி எடுத்துவிடுவார். சிலவேளைகளில் மனப்பாடமும் பண்ணிக்கொள்வார். சுருக்கமாகச் சொல்லப்போனால் காசுகளைத்திரட்டி உண்டியல் கலசத்தில் கொட்டுவதுபோன்று அம்மையாரும் பக்தருடைய பாடல்களைத் திரட்டி கைப் பெட்டிக்குள் சேர்த்துவிடுவார். எப்படித்தான் இவருக்கு இப்பணியைச் செய்ய மனம் வந்ததோ தெரியவில்லை. அப்பா குப்பையைத் தொட்டியில் எறிந்தார். புதல்வி கைப் பெட்டிக்குள் வைத்தாள். இதுதான் வித்தியாசம்.

பக்தருடைய இயல்பிற்கு இப்படி ஒரு பாத்திரம் கிடைத்தது விசேஷந்தான். ஏனென்றால் அவருடைய போக்கோ வெறிப்போக்கு. பூஜைக்கு மலரிடுவது போன்றும், நைவேத்தியங்கள் படைப்பது போன்றும் பாடல்களை அப்போதைக்கப்போது பாடி சமர்ப்பணம் செய்துகொண்டிருப்பார். பக்கத்தில் உள்ளவர்கள் எழுதினால் எழுதியது. அல்லாது போனால் போனது போனதுதான். எழுதாக்குறையால் இழந்துபோன பாடல்கள் அனந்தம். உதடும் நாவும் துடிக்க, சிருஷ்டி வெறி உள்ளத்தே கனன்று பொங்க, கைக்கு எட்டியதைப் பற்றிக்கொண்டு எழுதுவது அவருடைய மாறாத வழக்கம். சாவதானமாக நின்று, நிலைத்து, ஓலையை அளவு பார்த்து, வகுத்து, கிழித்து, வாரிவிட்டு, இன்னும் வகையுடனே எழுது கருவிகளையும் தேடித்திரட்டி, உள்ளத்தை ஒருப் படுத்திக்கொண்டு பாடல்களை எழுதுவதென்றால் வந்த பாடல் பறந்துவிடும். ஏடும் எழுத்தாணியும் ஏமாந்த மனமும் மிஞ்சும். வீடுகட்ட மூளை அடித்தமாதிரி, 'கார் பூத்த', 'ஏர்பூத்த' என்று எழுதிக்கொண்டு, உள்ளதைக் கொண்டும் கடன் வாங்கியும் செங்கலும் சுதையும் சேக ரிக்கிற ரீதியில் வார்த்தைகளை வேட்டையாடித் திரட்டி, கவி எழுதுகிறவர்களுக்கென்றால் காலம் நிற்கும், நேரம் நிற்கும், கற்பனையும் நிற்கும். பிள்ளையாரை எண்ணிக் குரங்கை எழுதுவார்கள். அப்படியா வரகவிகளுக்கு?

ஆற்றங்கரை யருகே—தனி
யானதோர் மண்டபம் மீதினிலே—தென்றல்
காற்றை நுகர்ந்திருந்தேன்—அங்கு
கன்னிக்கவிதை கொணர்ந்து தந்தாள்—அதை

ஏற்று மனமகிழ்ந்தே — அடி
என்னோ டிணங்கி மணம்புரிவாய் — என்று
போற்றிய போதினிலே — அவள்
புன்னகை பூத்து மறைந்துவிட்டாள் — (ஆற்றங்)

கவிதாதேவியின் அருளெல்லாம் இப்படித்தான். கவிதைகள் கொணர்ந்து தருவாள். தருகிற நேரமும் காலமும் அவளுடைய இஷ்டத்தைப் பொறுத்த விஷயங்கள். அவைகளை ஏற்றுக்கொண்டு "அடியே என்னோடு இணங்கி மணம்புரி" என்று போற்றும்போது "புன்னகை பூத்து" மறைந்திடுவாள். ஸ்ரீ சிவம் அவர்களுக்கும் இந்த அனுபவம் புறம்பானதில்லையாகையால் அவர்களுடைய பாடல்களைச் சேகரிக்கும் சேவையைச் செய்த சிவசிவா பாட்டியை நாம் நன்றாகப் பாராட்டவேண்டும்.

சிவசிவா பாட்டிக்கு சங்கீதத்தில்தான் ஞானமும் நாட்டமும் உண்டு என்பதில்லை. நடனத்திலும் அப்படியே. வயது 50 ஆனாலும் நடனத்திலுள்ள நாட்டம் தளரவே இல்லை. கலையில் மோஹம் என்றால் வயது ஏது, காலம் ஏது? தன் உணர்ச்சி அற்று கலையோடு மனம் ஐக்கியமடைந்துவிட்டால், நாமே கலையை அனுபவிக்கின்றோமா அல்லது கலைதான் நம்மூலம் வெளியாகின்றதா என்பதே தெரியாதல்லவா? சில சமயங்களில் சிவசிவா பாட்டி அபிநயத்திற்கேற்ற பாட்டுப் பாடும்படி ஸ்ரீ சிவம் அவர்களைக் கேட்பதுண்டு. அவரும் உடனே பாடிவிடுவார். அப்படிப் பாடிய பல பாடல்களில் ஒன்று கீழே தரப்பட்டுள்ள பாடல்.

ஓம்சக்தி ஓம் என்ற மெட்டு.

" ஆதி பராபரனே — உலகெலாம்
ஆளும் தயாகரனே;
ஜோதி சதாசிவனே — சுந்தரர்க்குத்
தூதுசென் றேற்றவனே;
பாதிமதி அணியும் — கங்காதரப்
பாண்டியனே குகனே,
ஆதரவில்லாமலே — எளியனும்
அக்ரமி ஆனேனே;
அக்ரமி ஆனாலும் — நேரில்லா
அவிச்வாஸி ஆனாலும்
திக்காரி ஆனாலும் — செய்யாத்தொழில்
செய்பவன் ஆனாலும்
அர்க்கோதயந் தேடி — பங்கஜங்கள்
ஆசைப் படுவது போல்
முக்கண்ணனே உனையான் — கதிபெற
முழுதும் நம்பினனே.
நம்பின பேருக் கருள் — செய் ஜக
நாயகனே பரனே,
அம்பிகையாள் உமையாள் — ஒருபாதி
அங்கம் உணர்ந்தவனே,
உன்பாதம் ஆசை கொண்டேன் — நயம் பயம்
ஒன்றும் அறியேனே;
அன்பு பெருத்தவனே — உலகம்
அனைத்தையும் பெற்றவனே."

என்று இவ்வாறாகப் போகிறது பாடல். ஐம்பது வயதுடைய பாட்டி இதற்கு அபிநயம் பிடித்து ஆடுவதென்றால், கலையில் இருக்கிற மோகத்தை என்ன சொல்வது! ஸ்ரீ சிவம் அவர்கள் காலஞ்சென்றபிறகும் பாட்டிக்குரிய அபிநயப்பித்து தளரவே இல்லை. பேத்திப்பெண்களுடைய பாவாடையை அணிந்துகொள்வார். இன்னும் அவர்கள் அணிந்துகொள்ளும் ஆபரணங்களையும் அணிந்துகொள்வார். பேத்திப்பெண்கள் பாட, பாட்டி அபிநயம் பிடிக்க ஆரம்பித்துவிடுவார். சமூக ஆசாரத்துக்கு இது பொருந்துமா என்றால், பொருந்தாது என்றுதான் யாரும் சொல்ல முற்படுவர். ஏனென்றால் கலையைப்பற்றி அத்தனை அக்கறை கிடையாது. ஆசாரபங்கம் நேரிட்டு விடக்கூடாது. அதுதான் பலருடைய கவலையும்.

இந்த இடத்தில் கலை பெரிதா அல்லது ஆசார - பங்கமின்மை பெரிதா என்ற பிரசினையே எழுந்துவிடுகிறது. கலை அருமை தெரியாதவர்களுக்கு ஆசார - பங்கமின்மைதான் பெரிதாகத் தோன்றும். ஏனென்றால் பழக்கவழக்கமென்ற தடத்திற்குள்ளே அவர்களுடைய வாழ்க்கைச் சகடம் பதிந்துவிட்டது. அப்பாலே இப்பாலே அவர்களால் விலகமுடியாது. கலைவெறி படைத்த உள்ளத்தின் போக்கே வேறு. கால எல்லை, வயதெல்லை, ஆசார எல்லை ஆகிய எல்லைத் தளைகளையெல்லாம் உடைத்தெறிந்து கொண்டு கலையில் திளைக்கும். அதுவே கலை உள்ளத்தின் சீலம். கலை உள்ளத்தின் மாண்பும் அதுதான்.

பாட்டியின் கலைஆர்வத்தைப் பாராட்டவேண்டும். இன்னும் சொல்லப்போனால் பொறுமைகொள்ளவேண்டும்.

குழந்தை உள்ளம் படைத்தவர்களுக்குத்தான் இம்மாதிரி யெல்லாம் ஈடுபட முடியும். பெரும்பாலும் பாட்டியி னுடைய செயல்களை அலசிப் பார்த்தால் வெறுப்பான பண்பைக் காண்பது அரிதாகத்தான் இருக்கும். குழந்தை உள்ளம்படிந்த ஒரு பாத்திரத்தின் செயல்களாகவே தோன்றும். ஒரு சில செயல்களைப் பார்த்தால் இந்த உண்மை வெளியாகும்.

ஸ்ரீ சிவம் அவர்கள் காலமானதும், செய்யவேண்டிய கிரியைகளை விதிமுறைப்படி செய்து அவருடைய திரு மேனியை மயானத்திற்கு எடுத்துச்சென்றார்கள். விமானத் தின் அடியே கூடி சிவசிவா பாட்டியும் நடந்து சென்றார். அப்படி நடந்து செல்லும்போது வாயைப் பொத்திக் கொண்டு பூமாதேவியைப் பார்த்தவண்ணமாகச் செல்லவு மில்லை. மார்பிலும் முகத்திலும் அடித்துப் புடைத்துக் கொண்டுபோகவும் இல்லை. ஸ்ரீ சிவம் அவர்கள் பாடிய பாடலைக் கரதாளமிட்டுப் பாடிக்கொண்டே சென்றார்.

"அப்பனே, எம்பெருமானே, ஆனந்த நடமாடுஞ்
சிற்பரனே, திங்கள் சூடுந்தேவ தேவனே, சிவனே,
முப்புரங்கள் எரிமூட்டிய முத்தனே,
ஒப்பிலாய், எனக்கருள் உனக்கடைக்கலம் ஆனேன்."

"அத்தனே, அமரர்கோனே, அண்டமெல்லாம் படைத்தோனே,
நித்தனே, நின்மலமேனி நீறணிந்த சுந்தரனே,
சித்தமலம் அகலச் செய்தருள் தேசிகனே,
உத்தமா, எனக்கருள் உனக்கடைக்கலமானேன்."

இவ்வாறாகப் பல பாடல்களைப் பாடிச் சென்றது ஒரு மாதிரியாகவே காணப்படும். இந்நிகழ்ச்சி ஒருபுறம் இருக்

கட்டும். இனி அடுத்துச்செய்த காரியம் ஒன்றிருக்கிறது. அதனையும் கவனிப்போம்.

காமனை ஆற்றில் நீராடிவிட்டு வீடு திரும்பும்போது, வரும் வழியில் ஆவுடையம்மன் கோயில் ஒன்றிருக்கிறது. பாட்டி அங்கே சென்று மாங்கல்யத்தைக் கழற்றி வாசற்படியில் வைத்தார். "அம்மையே, நீ மட்டினும் கட்டின தாலியைக் கழற்றாமல் இருக்கிறாய். ஆனால் எனக்குக் கொடுத்த தாலியை இன்று கழற்றும்படி செய்துவிட்டாய். நீ கொடுத்ததை நீயே எடுத்துக்கொள்" என்று சொல்லி, அப்பாலே போத்தியைக் கூப்பிட்டு, "ஓய், ஜலம் தெளித்து இதை அங்கே எடுத்துப் போடும்" என்று வேண்டிக் கொண்டு வீடு திரும்பினார்.

உலக சம்பிரதாயம், சமூக ஆசாரம் ஆகிய இவைகளை அடிப்படையாகக் கொண்டு இச் செயல்களின் இயல்பை மதிப்பிடுவதை விட, பாட்டியின் மனஇயல்பை அடிப்படையாகக் கொண்டு மதிப்பிடுவதே பொருத்தமுடையதாக இருக்கும். இவ்வாறு செய்வதெல்லாம் குழந்தை உள்ளத்தின் இயல்பு என்று கொள்வதனால் தோஷம் ஒன்றும் இல்லை. ஆனாலும் ஒன்றைக் கவனிக்கவேண்டியதிருக்கிறது

தன்னளவுக்கு இத்தகைய உள்ளத்தினால் ஒரு குறையும் இல்லை என்றாலும், இலக்ஷியவெறிபடைத்த ஒரு உள்ளத்தோடு மருவ நேரும்போது, இடர் விளைக்கும் கருவியாகவே அது தோன்றும். உண்மையும் அப்படித்தான். ஒரு சில சம்பவங்களைப்பார்த்தால் அது தெளிவாக விளங்கும்.

ஸ்ரீ சிவமோ பெரிய மகான். அத்தகைய மகானுக்கு மனைவியாக வாய்க்கப்பெறும் புண்ணியத்தைப் பெற்றோ மில்லை என்று எத்தனையோபேர் ஏங்கும்படியாக அத்தனை பெருமை உடையவர். அவரைத்தனது அருங் கணவராகப் பெற்றும், அவருடைய அருமையை உணராதவராய் எத்தனையோ முறை அடிகளுடைய மனம் இடிந்துபோகும்படியாகவெல்லாம் நடந்துகொண்டார் ஸ்ரீமதி இலக்ஷ்மி அம்மாள்.

ஒருநாள், இரவுநேரம். ஸ்ரீ சிவம் தமது சிஷ்யர்களுடன் சத் விஷயமாகப் பேசிக்கொண்டிருந்தார். நெடுநேரம் ஆகிவிட்டது. வரவர விளக்கிலுள்ள எண்ணெய் தீர்ந்துபோக, உடனே அடிகள் தமது மனைவியை நோக்கி எண்ணெய் வார்க்கும்படி கேட்டுக்கொண்டார். "எண்ணெயுமாச்சு தண்ணியுமாச்சு. மணி பன்னிரண்டாச்சே, இன்னும் பேச்சா? அதெல்லாம் முடியாது" என்று மறுத்துவிட்டார். பரத்தோடு கலந்து நிற்கும் மனநிலையிலுள்ள பக்தருக்கு இம்மாதிரியான மறுப்புரையெல்லாம் வெறும் கொசுக்கடி. தமது பக்கத்தில் கிண்டி இருந்தது. எடுத்து நீர் வார்க்கவே தகதக என்று சுடர்விட்டு ஒளி பெருக்கியது குத்துவிளக்கு. என்ன அதிசயம் இது! பக்தியினால் எதுதான் முடியாது? அடிகளுடைய பக்திப் பெருமைக்குப் பல்லாண்டு பாடும் நிகழ்ச்சிகள் பலவற்றுள் இதுவும் ஒன்று.

இன்னொரு சமயம் பக்தர் ஆழ்ந்த சிந்தனையில் அமர்ந்துவிட்டார். நெடுநேரம் ஆகிவிட்டது. பரத்தோடு உறவு கொண்டாடிய நிலையில் என்னென்ன அனுபவங்களைப் பெற்றுக்கொண்டிருந்தாரோ தெரியவில்லை. பக்தர் இருக்கும் நிலையைப் பார்த்து "ஏது ஏது இன்றைக்கே சமாதி

நிலை அடைந்துவிடுவாரோ நமது பர்த்தா" என்று பயந்தவராக, உலகப்பற்று தன்னை விரைந்து உந்த, அடிகள் பக்கம் சென்று அவருடைய இரு தோள்களையும் இறுகப் பற்றிக்கொண்டு, ஸ்ரீமதி இலக்ஷ்மி அம்மாள் ஒரே குலுக்காகக் குலுக்கிக் குலுக்கி அவருடைய நிஷ்டையைக் கலைத்து விட்டார். "கெடுத்துவிட்டாயே" என்ற வருத்தச் சொல்லுடன் கண்விழித்தார் ஸ்ரீ சிவம்.

நிஷ்டையில் அவர் பெற்ற அனுபவம் யாது, கலைத்த பின்னர் எவ்வாறு ஏங்கினார் என்னும் நிலைகளை உணர்த்தும் பாடல்களைப் பார்ப்போம்.

"குன்றேறிக் குருஅருளால் கோல்பிடித்துக்
குகைமேவி, கொடிய இருள் அகிழ்கள் தாண்டிச்
சென்றேறி, இரவி திங்கள் ஒதுங்கு ஜோதித்
திருநகரங் கண்டு, தெரு வலம் புரிந்து,

நன்றேறி இலங்குமணிக் கோயில்புக்கு,
நந்திபதந் தரிசித்து, நாதம் ஓங்கும்
மன்றேறி, படியேறி, மௌனம் ஏறி,
வந்து நடமாடும் உனை வணங்கப் பெற்றேன்.

"பெற்றேன்வந் துனைக்கண்டு பேரானந்தம்;
பேதைசெய்த தவக்குறையோ தவறிமண்மேல்
*உற்றேன்; ஊழ்வினை கரையாக் கல்லதாகி
ஓஹோ நான் பாவிஉனைக் கலந்திடாதே."

சூரிய சந்திரர்கள் ஒதுங்கும் ஜோதிநகரில் சென்று, நாதன் இருக்கும் கோயில் புகுந்து, நந்தியை வணங்கி, நாதம்

* "கலந்திடாதே மண்மேல் உற்றேன்" என்று முடித்துக் கொள்ளவும்.

ஓங்கும் மன்றேறி, படியேறி, மௌனமும் ஏறி வந்து நடமாடும் மகாதேவனை வணங்கிக்கொண்டிருக்கும் அத்தகைய நிஷ்டைநிலையை மனைவியார் கலைத்துவிட்டால், ஏன் ஏக்கம் வராது? எல்லாம் கரையாத கல்லாக விளங்கும் ஊழ்வினையின் பயன் என்றே அடிகள் சமாதானம் செய்து கொள்கின்றனர்.

இன்னும் ஒருநாள் பக்தருடைய வீட்டில் சுமார் முப்பத்தைந்துபேர் சந்நியாசிகளும் சிஷ்யர்களுமாகக் கூடியிருக்கின்றார்கள். அன்று நடக்கப்போகும் வைபவம் சிறந்த வைபவம். பக்தர் கையிலிருந்து அக்ஷயபாத்திரம் வாங்கவேண்டும், வாங்கி உஞ்சவிர்த்தியை மேற்கொண்டு உய்யவேண்டும் என்ற பேராவலோடு ஒரு சாது வந்து நிற்கிறார். துறவு என்றால் சாமனியமான காரியமா? பல பக்தர்கள் இவ்வாறு அடிகள் கையிலிருந்து அக்ஷயபாத்திரம் வாங்கியதுண்டு. ஏனென்றால் யாராவது ஒரு மகான் கையிலிருந்து வாங்கவேண்டுமென்பது ஐதீகம். சாது நிற்கின்றார். ஏனைய சிஷ்யர்களும் சந்நியாசிகளும் நிற்கின்றார்கள். அத்தனை பேருக்கும் போஜன ஏற்பாடாகின்றது. இந்தத் தருணங்கெட்ட தருணத்தில், உலகப் பற்றோடு பின்னிக்கிடக்கின்ற இலக்ஷ்மி அம்மாள், பக்தருடைய மனம் புண்ணாகும்படி நடந்துகொண்டார். "குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி கணமேனுங் காத்தல்" அரிதல்லவா? அடக்கமுடியாத கோபம் பொங்கி எழுந்தது அடிகளுக்கு. துர்வாச முனிவரும் பின்னடைய வேண்டும். 'இல்லறமே இனிது' என்று சுசீந்திர ஆலயத்தில் வைத்துக் கேட்ட அசரீரியை மறந்தார். பூணூலை அறுத்தெறிந்தார். கௌபீணதாரியாக ஒரே பாய்ச்சலில் பாய்ந்து, கோயிலுக்குள் சென்று, அழுத்தமான யோகத்

தில் ஆழ்ந்துவிட்டார். பலமணி நேரங்கள் கடந்துவிட்டன. தடுப்பார் யார்? தாங்குவாரும் யாவர்? பக்கத்தில் போக ஒரே பயம். சாப்பிட்டவர் சிலர் சாப்பிடாதவர் பலருமாக நின்று கையைக் கையைப் பிசைகின்றார்கள். இன்றே வீட்டை விட்டுப் புறப்பட்டுவிட்டார் என்று அநேகர் எண்ணினர். சிலர் உண்மையிலேயே ஏங்கினார்கள். எப்படிக் கலைப்பதென்பது பெரிய யோசனையாகப் போய் விட்டது. ஒருவேளை குழந்தைகளை அனுப்பினால் கலைத்து விடமுடியாதோ என்ற யோசனை தென்பட்டது. ஒரு மட்டிலும் துணிந்து பக்தருடைய கடைசிக் குழந்தைகள் இருவரையும் அனுப்பிவைத்தனர். குழந்தைகள் ஓடிச் சென்று "அண்ணா, அண்ணா, ஆத்துக்கு வரணும்" என்று கத்தி அவருடைய நிஷ்டையைக் கலைத்துவிடவே, குழந்தைகளை நடமாடும் தெய்வமாக மதிக்கும் அடிகளும், அலர் விழிதிறந்து அருளோடு நோக்கினர். பக்கத்திலுள்ள சிஷ்யர்கள் தக்க தருணம் வாய்த்தது என்று எண்ணி, பக்தரை அணுகி, 'இல்லறமே இனிது' என்ற அசரீரியை ஞாபகமூட்டி, இன்னும் கொஞ்சகாலமாவது இல்லறத்தில் அமர்ந்து அதற்கு வேண்டிய அம்சங்களை நிறைவேற்ற வேண்டும் என்று பெரிதும் வேண்டிக்கொண்டனர். பக்தரும் பழைய அசரீரியை எண்ணி, சர்வமும் ஆண்டவன் சித்தம் என்ற சாந்தியுடன், வீடு திரும்பினார்.

இப்படியெல்லாம் நிகழ்வதற்குக் காரணமாயிருந்த ஸ்ரீமதி இலக்ஷ்மி அம்மாளை, நாம் தீமைபோல் நன்மையே செய்துவிட்டார் என்றுதான் எண்ணவேண்டும். பரத்தில் முனைந்து, கறங்குபோல் சுழன்றுகொண்டிருக்கும் பக்தர் மனத்தை, எப்பொழுதெல்லாம் இகத்தில் திருப்பலாமோ அப்பொழுதெல்லாம், இவ்வாறு இடர்ப்படுத்தி அவரைத்

திருப்ப முயலவும், ஒவ்வொரு முயற்சியும் பக்தருடைய பக்திக்கு அதிகப்படியான அழுத்தத்தைக் கொடுத்து, உலகோர் புகழும்படி உதவிசெய்ததேதவிர நிலைபிறழச் செய்யவில்லை. ஒருவேளை இலக்ஷ்மி அம்மாளும் பக்தருடைய போக்கிலேயே ஆதியிலிருந்து போகத் துணிந்து விட்டால், ஸ்ரீசிவம் தம்பதிகள் காடுமலை சென்று, கடுந்தவம் புரிந்து முக்தி அடைந்திருப்பார்கள். இல்லற நிலையில் இருந்தாலும், இல்லற பந்தங்கள் எத்தனை தூரம் பிணித்துப்பிணித்து இறுக்கினாலும், முக்திக்கு வழி உண்டு என்பதைத உலகம் உணர்வதற்காக வேண்டித்தான் 'இல்லறமே இனிது' என்ற அசரீரியை எழுப்பி, அடிகளை, ஆண்டவன் இல்லறத்தினுள்ளே புகுத்தார்போலும்? அடிகளும் இந்த உண்மைக்கு ஆதாரவு தரும்படியான பல பாடல்களைப் பாடியிருக்கின்றார்.

உதாரணமாக ஒன்றைமட்டிலும் பார்ப்போம்.

நொண்டிச் சிந்து.

(ஐயா ஒரு செய்தி கேளும் என்ற மெட்டு.)

இல்லறத்தோரே கூடி — மக்கள் சுற்றம்
[1] என்றவர்களோடுலக உறவாடி
இல்லாமை கொண்டு வாடித் — துன்பவினை
எது வந்தாலும் அதுவுங் கொண்டாடிக்
[2] கல்லுங் கடலுந் தேடிப் — போய் இரந்து
கையேற்றுப் [3] பொய்க்காயத்[து) உறவாடிப்
பொல்லார்போல் இருந்தாலும் — சிவபக்தி
புரிவோர்கள் பாரினில் பெரியோர்காண்."

இதுவே அடிகள் கருத்து.

---

1. மக்கள் சுற்றம் என்றெல்லாம் உறவாடி. 2. நிலத்தையும் நீரையுங் கடந்து போய். 3. அழியும் உடம்பு.

X ஸ்தல யாத்திரை.

பெரியவர்களுடைய வாழ்க்கையில் நிகழும் நிகழ்ச்சிகளில் சில பகுதிகள், கேவலம், வரலாற்றுப் பகுதிகளே என்று தோன்றும். என்றாலும் அந்த நிகழ்ச்சிகளிலும் அவர்களுடைய பெருமைக்கு ஏற்றந்தரக்கூடிய பல மகிமைகள் பின்னித்தான் கிடக்கின்றன. இப்படிப் பின்னிக் கிடப்பதெல்லாம் பெருமைக்குரிய இயல்பான தன்மைகள். உண்மையும் அப்படித்தான்.

ஆதியிலே அடிகள் வீடுகட்ட முனைந்த காலத்தில், அவருக்கு ஏற்பட்ட அழுத்தமான கடவுள் விரஹத்தால், இடையிலேயே விட்டுவிட்டு மாறுவேஷதாரியாக வெளியே புறப்பட்டார் என்றும், திருநெல்வேலி வட்டாரத்தில் பிரசித்தி பெற்று விளங்கிய கோடகநல்லூர் சுந்தரசுவாமிகளை அணுகி பஞ்சாக்ஷர உபதேசம் பெற்றார் என்றும் நாம் பார்த்தோம். இல்வாழ்க்கையில் இருக்கும் போதுதான் அவருக்கு இந்த நாட்டம் ஏற்பட்டது என்பதில்லை. அதிபால்யப் பருவத்திலுங்கூட அவருக்கு இந்த நாட்டம் உண்டு என்பது நாம் அறிந்ததே. சிவராத்திரி அன்று கிட்டத்தட்ட இருபத்தேழு மைல் அளவு தூரமுள்ள பன்னிரண்டு ஸ்வயம்புலிங்க க்ஷேத்திரங்களையும் கால்நடையாகவே சென்று தரிசிக்கும் பழக்கம் உண்டு. ஆகவே அவ்வாறெல்லாம் ஸ்தலங்களைத் தரிசிப்பது என்ற ஆர்வம் உடலோடும் உள்ளத்தோடும் ஒட்டிய ஒரு பேரார்வமாகவும் மகத்தான பக்தி அனுபவத்தின் ஒரு விசேஷ அங்கமாகவும் காணப்படுகிறது என்றே கொள்ளவேண்டும்.

அடிகளுடைய பிரதம சிஷ்யர்களுள் ஒருவர் திருவாங் கூர் மதுஇலாகா கமிஷனராக இருந்த யாழ்ப்பாணம் பொன்னம்பலம் பிள்ளை என்பவர். ஸ்ரீ சிவம் அவர்களை எப்படியாவது சிலோனுக்கு அழைத்துச் செல்லவேண்டும் என்று மிகவும் ஆசை கொண்டார். ஏனென்றால் அங்குள்ள கதிர்காமத்தில் கண்கண்ட தெய்வமாக விளங்கும் முருகனைத் தரிசிக்கச் செய்ய வேண்டும். அடிக் கடி அடிகளிடத்தில் எடுத்துச் சொல்லி ஒரு மட்டிலும் புறப்படச் செய்துவிட்டார். இந்தப் புறப்பாட்டு நிகழ்ச் சியானது அடிகளுடைய பக்திப் பெருமைக்கு ஏற்றதரும் மங்களகரமான ஒரு சந்தர்ப்பத்தைக் கூட்டிவைக்கப் போகிறது என்று அடிகளும் எண்ணவில்லை, ஸ்ரீ பொன் னம்பலம் பிள்ளையும் எண்ணவில்லை. என்ன நிகழ்ந்தது? இதோ பார்ப்போம். தூத்துக்குடிக் கடற்கரை. இருவரும் இன்னும் கூடவந்தவர்களும் கப்பல் ஏறும் தருணத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். அடிகளுக்குள்ள இயல்பான பக்தி முதிர்ச்சியினாலும், கதிர்வேலனைக் காண வேண்டுமென்ற காதல் கரைகரையின்றிப் பெருக்கெடுத்த புண்ணியத்தாலும், கடற்கரையிலேயே தரிசனம் பெற்று விட்டார்.

> “கண்ணாரக் கண்டேனே — கதிர்வேலனைக்
> கண்ணாரக் கண்டேனே” என்பது

அவருடைய தரிசன அனுபவத்தைக் குறிக்கும் பாடலின் முதல் அடி. இனிமேல் கதிர்காமம் செல்லவேண்டிய அவசியமில்லை என்று திரும்பிவிட்டார்.

அடிகள் சென்று தரிசித்த ஸ்தலங்கள் பல. செல்லும் இடங்களில் சிற்சில சந்தர்ப்பங்களில் இரண்டு மூன்று

மாதங்கள்வரை தொடர்ச்சியாகவும் தங்கிவிடுவார். அங் கங்கே உள்ள ஸ்தல மூர்த்திகளின்மீது அத்தனை காதல் ஏற்பட்டுவிடும். தரிசிப்பதோடு உள்ளங்கனிந்து பல பாமாலைகளையும் சூடுவார். மற்றும் பக்திப் பெருமையால் அநேக அதிசயச் செயல்களையும் செய்வார்.

புதுக்கோட்டை சமஸ்தானத்திலுள்ள காளையார் கோவில் என்ற புண்ணிய ஸ்தலத்தை தரிசித்துவிட்டு அங்கேயே கொஞ்சகாலம் தங்கினார். அப்போது அவ ரோடு உடன்தங்கிய பெரியார்கள், ஃபிடில் சுப்பையர், வித்வான் பூச்சி ஐயங்கார் முதலியோர் ஆவர். திரு. பூச்சி ஐயங்கார் அடிகளுடைய கீர்த்தனங்களில் அநேகவற்றை அடிகளே படித்துக்காட்ட, அவைகளை ஆர்வமுடன் கற்றுக் கொண்டு, அப்பாலே தம்முடைய சிஷ்யரும் தற்போது பிரபல சங்கீத வித்வானுமான ஸ்ரீமான், அரியக்குடி ராமா னுஜ ஐயங்கார் அவர்களுக்குக் கற்றுக்கொடுத்தார். இதை எனக்குச் சொன்னவர் அடிகளின் புத்திரியாகிய பார்வதி அம்மாள் அவர்கள். மீண்டும் ஒருதடவை புதுக்கோட்டை சென்று கிட்டத்தட்ட ஒரு வருஷகாலம் தங்கிவிட்டார். அப்போதுதான் அடிகளினுடைய கடைசிப் புத்திரன் அங்கு சென்றார். போன இடத்தில் அவருக்கு வைசூரி கண்டது. சூலை நோயை நீக்குமானால், கூனை நிமிர்க்கு மானால், அதே விபூதி வைசூரியையும் போக்காதோ? வெண்ணீற்று மகிமையால் வியாதியைப் போக்கினார்.

இராமநாதபுரம் ஜமீன்தார் ஸ்ரீ பாஸ்கரசேதுபதி அவர்களுக்கு மகான் நீலகண்டசிவம் ஊனுக்கு ஊன்

உயிருக்கு உயிர். நவராத்திரி தோறும் அழைத்துவிடுவார். அடிகளுக்கு அநேக கௌரவச் சடங்குகளெல்லாம் நடத்தி ஏராளமான சம்மானங்களும் வழங்கியிருக்கின்றார். ஸ்ரீசிவம் அவர்களும் சேது சமஸ்தானத்திற்கு அநேக முறை சென்றிருக்கின்றார். ஒருமுறை அவர் போகும் போது ஒரு அபூர்வ சம்பவம் நிகழ்ந்தது. தெய்வ கடாட்சம் பரிபூரணமாக இருக்குமானால் அதிசயங்கள் நிகழ்வதில் ஆச்சர்யமே கிடையாது. சேது சமஸ்தானத் திற்கு மதுரையைக் கடந்து செல்கின்றார். அன்று வெள் ளிக்கிழமை. மதுரை மீனாக்ஷியைக் கண்குளிரக் கண்டு தரிசனம் செய்யவேண்டும் என்ற ஆசை பக்தரைப் பிடித்து உந்தியது. அதை ஒருவிதத்திலும் தவிர்க்க முடியவில்லை. ஆனால் தங்கிப்போவதற்குரிய சௌகரியமும் வாய்க்க வில்லை. கூடவந்தவர்களும் வேண்டாமென்றே தடுக்கின் றார்கள். மனமில்லாமல் போகின்றார். பக்தர்கள் அவ்வாறு வருந்தும்போது தெய்வம் பொறுக்குமா? இராமநாதபுரம் செல்லும்போதே, பாதையில்தானே, ஸ்ரீ மீனாக்ஷி அவ ருக்குத் தரிசனம் வழங்கிவிடுகின்றாள். அப்படியே பரவசராகிப்பாட ஆரம்பித்துவிட்டார்.

பண் — பரசு

"மதுமாரி பெய்யுந் திருமதுரை மாநகர்தனில்,
[1]பதமாறி ஆடிநிற்கும் பரனைப், பாண்டிமாதொடும்
நிதிமாரி பெய்யும் நல்லநிலம் அரசாளும் சேது
பதிசீரின் மிகவளம் பதிவிலுநாம் கண்டோமே".

1. மாறியாடும் பெருமான்.

"அந்தமில் சென்னரியெல்லாம் பரிகளாய்ச் செல்லவைத்த
சுந்தரனை, சுடர்மணியை, சுருதிப்பொருள் சொன்னவனை,
அந்திமதி சூடுவானை அன்புசெய்(து) அமலன் பாதம்
வந்தனைசெய் சேதுமன்னர் வாழ்தலத்து நாம்கண்டோமே"

இவ்வாறாக ஒரு பதிகமே பாடியிருக்கின்றார்.

பக்தர் காலத்தில் சிறந்த கும்பாபிஷேக மகோத்ஸவம் ஒன்று சிதம்பரத்தில் நடைபெற்றது. அந்த வைபவத்தை மிகவும் சிறப்பாக நடத்த முற்பட்ட பெரியவர்களுள் ராஜா, சர், அண்ணாமலை செட்டியார் அவர்களுடைய சிறிய தகப்பனாராகிய ஸ்ரீமான் சிதம்பரம் செட்டியார் அவர்களும் ஒருவர். அவருடைய அழைப்பிற்கிணங்க பக்தரும் அந்த விழாவில் கலந்துகொண்டு, "இகபரம் தரும் பெருமை" என்று தொடங்கும் *கீதத்தை என்புருகப் பாடி ஈசன் பதத்தில் சமர்ப்பித்தார்.

* கீதத்திலுள்ள சில அடிகள் :—

இராகம்-கமாசு] [தாளம்-ரூபகம்.

பல்லவி.

இகபரம் தரும் பெருமை சிவதர்மம்
இதுவே நாம் செய்யும் கடமை.

அநுபல்லவி.

புகழும் பொருள்கள் பெற்றும் — இந்தப்
பூமிக்குச் சுமையாகாமல்
திகழுந் திரு நீலகண்டன்
திருவடித் தொண்டுக் காளாகுதல் — இகபரம்

சரணங்கள்.

பொங்குகடல் சூழுலகில் பொருள்தேடிப்
புதைத்து வைத்தும்,
மங்கையர்க்கும் மக்களுக்கும் மணிபணிகள்
பூணவைத்தும்,
கண்குளிரக் காண்ப எல்லாங் கனவாய்ப்
பிணமாகும் போதில்,
அங்கிதனால் என்னபயன் ஆர்துணையாம்
அறஞ்செய்யாகில்?
அரர்க்கன்பு செய்குவதே
நரர்க்கு முறை யாகுவதே
திருப்பணிகள் புரிகுவதே
பெருத்த புண்ணியமிதே —இகபரம்

கற்கட்டு வீடுகள் சமைத்துக் கல்லறையும் உள்ளமைத்துப்
பொற்கட்டி வைத்திருந்தாலும் பூமியாளப் பெற்றாலும்
பற்கட்டி வாயடைத்துயிர் போம் பருவத்திலோர்
காணிப் பொன்னும் கைக்கெட்டுமோ?
கருதி வைத்தால் காண்பதென்னே?
காய்ந்து மன்னுங்
காலன்புரி போகாமே
காலாந்தகனை விடாமே
சீலம் பெறுவது தாமே
வேலை நமக்கிது வாமே.

இதுவே அடிகள் பாடி அருளிய கீர்த்தனம்.

[பொற்கட்டி—பொன்னைச்சேகரித்து. காலன்புரி-எமன் வாழும் இடம். காலாந்தகன்—சிவன்]

கவிவாணரும் கலைவாணரும் பிறந்து பெருமைப் படுத்திய எட்டயபுரம் சமஸ்தானத்திற்கு ஒருமுறை பக்தர் விஜயம் செய்ய, அங்கே தக்க மரியாதைகளுடன் வரவேற் கப்பட்டார்.

இன்றுவரையும் நம் நாட்டிலே ஒரு குறை இருந்து வருகிறது. அது என்னவென்றால் உள்ளோர் மகிமையைக் காலந்தாழ்த்தியே மதிக்க முற்படுதல். இந்தக்குறை வட வேங்கடம் தென்குமரி எல்லைக்குள் ஒரு வியாதிபோன்றே உலவி வருகிறது என்று சொன்னாலுங் குற்றமில்லை. முற்றத்து முல்லைக்கு மணம் இல்லை தானே? எட்டப்போய் உதாரணம் தேடவேண்டாம். வ. உ. சிதம்பரம்பிள்ளை அவர்கள், அமரகவி பாரதியார் ஆகிய இவர்களை ஞாபகப் படுத்திக்கொண்டால் போதுமானது. தமிழ்நாட்டா ருடைய ஞாபக சக்தியும் சரித்திர உணர்ச்சியும் அப்படியா தளர்ந்துவிட்டன?

மகான் நீலகண்டசிவம் இவ்வாறு ஊரெல்லாம் பெருமை பெற்றுவருகின்றார். எத்தனையோ பெரியோர் களும் குறுநில மன்னர்களும் வரிசைசெய்து பாராட்டு கின்றனர். ஒருமட்டிலும் திருவிதாங்கூர் சமஸ்தானாதிபதி விழித்துக்கொள்கின்றார். அப்புறம் செய்கின்றார் எத்தனை யோ வரிசைகள். சாகும்வரை அந்த வரிசைகளில் ஒரு குறைபாடும் ஏற்படவில்லை. நாளும் நாளும் வரிசை செய்யும் ஆர்வம் வளர்ந்துகொண்டே வந்தது என்றுதான் சொல்லவேண்டும்.

இன்னும் பக்தருடைய ஸ்தல யாத்திரையில் அநேக ருசிகரமான சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. ஒருசமயம்

பக்தர் மதராஸுக்குப் போக நேரிட்டது. மதராஸில் பிரபல வக்கீலாகவும் உதார சிரோன்மணியாகவும் விளங்கிய எல். ஏ. கோவிந்தராகவ ஐயருடைய குலகுருவாக விளங்கினார் ஸ்ரீ சிவம்.

சென்னையிலுள்ள சைவசித்தாந்த சபையின் ஆதரவில் மூன்று தினங்களாகப் பிரசங்கங்கள் நடைபெற்றன. அங்குள்ளவர்கள் அப்போது ஸ்ரீ நீலகண்டசிவம் அவர்களின் பெருமையைத் தெரிந்துகொள்ளவில்லை. ஆகவே சொற்பொழிவைக் கேட்க வந்தவர்களுள் பலர் பின்வருமாறு பேசிக்கொண்டனர். "ஏதோ ஒரு மலையாள ஆசாமியாம். தமிழில் பாடுவாராம். என்ன பாடப் போகிறார்! எல்லாம் மூக்கை அடைத்துக்கொண்டு முனகுவார். போய்வேடிக்கை பார்க்கலாம்" என்று இவ்வாறாகப் பேசிக்கொண்டார்கள். பொன்னின் மாற்றை உரைத்துப் பார்த்தாலல்லவா தெரியும். பார்வை அளவில் திட்டவட்டமாக நிதானித்து விடமுடியுமா?

ஸ்ரீ சிவம் அவர்களும் பேசிக்கொண்டே செல்கின்றார். சந்தேகப் பேர்வழிகளும் கேட்டுக்கொண்டே வருகின்றனர். வளைந்த உடம்புகளெல்லாம் நிமிர்ந்தன. அகல இருந்தவரெல்லாம் அணுகினார். நெருங்கினர். மூக்கில் விரல்வைத்துவிட்டனர். ஒரு வெள்ளைக்காரன் சொன்னான். ஏனென்றால் அவன் பரமரஸிகன். "ஹிலெயர் பெல்லாக்கோடு கவிதையைப்பற்றிப் பேசுவது கடவுளோடு வேதாந்த விசாரணை செய்வதற்கு நிகர்" என்பது அவனுடைய கூற்று. அதை இங்கே ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டியதுதான். கேட்டவர்களுக்கெல்லாம்

அத்தனை ஞானத்தெளிவு. ஏனென்றால் "உள்ளத்தில் வெறி உண்டானால் வாக்கினில் வெறி உண்டாகும்." பக்தருடைய உள்ளத்தில் அதீதமான உண்மையை உணர்ந்த ஞானவெறி நன்றாக உண்டு. ஆகவே வாக்கினிலும் வெறி பிறந்துவிட்டது. கேட்டவர்களும் மயங்கிவிட்டார்கள். சிலர்மட்டிலும் மயங்காமல் எப்படியோ தப்பித்துக் கொண்டனர். அவர்களுக்குக் கட்டாயம் வந்தனம் செலுத்தவேண்டும். ஏனென்றால் அவர்கள் மூலம் பக்தருடைய பெருமைக்கு மிக அதிகமான ஏற்றம் கிடைத்துவிட்டது

என்ன எண்ணினார்களோ தெரியவில்லை. பக்தரிடம் கேள்வி கேட்கவேண்டுமென்று துணிந்துவிட்டனர். ஒரு வேளை வேடிக்கைக்காகத்தான் கேட்டார்களோ அல்லது சமய குரவர்கள் நால்வரும் பிறந்த நாட்டிலே இவரும் அவர்களுடைய திருக்கூட்டத்தைச் சேர்ந்தவராகவே பாவனை பண்ணிக்கொண்டு நீற்றைப் பூசுவதும் பாட்டைப் பாடுவதுமாக ஏமாற்றுகின்றாரா, அல்லது உண்மையான மெய்யன்பின் காரணமாகத்தான் இப்படியெல்லாம் பேச முடிகிறதா அல்லது அப்படித்தான் பேசினாலும் 'உண்பது நாழி உடுப்பது நான்கு முழம்' என்ற விதிக்குக் கட்டுப் பட்ட தங்களைப்போன்ற ஒருவர்தானே, அவரிடத்தில் அப்படியெல்லாம் ஒரு அசாதாரணமான மனப்பான்மை படிந்துவிடவாபோகிறது என்ற சந்தேகத்தினலா, எதனால் கேள்வி கேட்கத் துணிந்தார்கள் என்பது தெரியவில்லை. ஒருவேளை பொறாமை காரணமாக இருந்தாலும் இருக்கலாம், மகான் இராமலிங்கருடைய அருட்பாக்களை மருட்பா என்று வாதாடவில்லையா? "மருட்பாவும்

அருட்பா ஆயிடுமே" என்று ஒரு புலவர் மறைமுகமாகப் பாடவில்லையா? அப்படியும் இருக்கலாம். எப்படியிருந்தால் தான் என்ன? பக்தருக்குக் கிடைத்தது பெருமைதான்.

இக்கேள்விநிகழ்ச்சியானது ஒரு உண்மையை உணர்த்துகிறது. உலகம் எளிமையையும் பாராட்டுகின்றது, அருமையையும் பாராட்டுகின்றது. ஆனால் எளிமையும் அருமையும் ஒருசேர ஒரே பொருளில் இருக்கக் கண்டு விட்டால் தயங்க ஆரம்பித்துவிடுகிறது. தயக்கத்தினால் அவநம்பிக்கை அவநம்பிக்கையின் காரணமாக ஏளனம், சந்தேகம். இவ்வாறாக வேண்டாதன எல்லாம் கிளம்பி விடுகின்றன. வெடிமருந்து எத்தனை இலேசாக இருக்கின்றது. ஆனால் வெடித்தவுடன் எப்படியிருக்கிறது? எளிமைக்குள்ளேதான் அருமை புதைந்திருக்கிறது. அதை உலகம் மறந்துவிடுகிறது. பேதை உலகம் பெருமையை அளவிடும் முறையைத்தான் என்ன சொல்வது! இல்லாததை இருக்கிறதாகப் படைத்துக்காட்டும். இருக்கிறதை இல்லாததாக மறைத்துக் காட்டும். உள்ளதை உள்ளபடி காட்டாது. அப்படி எங்கேனும் காட்டப்பட்டு விட்டால் பழகாத அனுபவமாகவே காணப்படும். அதன் காரணமாகத்தான் அவநம்பிக்கையும், பொறாமையும், ஏளனமும்.

ஸ்ரீமான் நீலகண்டசிவம் எளிமையின் திருஉருவமாகவே காணப்படுகிறார். அதனாலேதான் அருமையின் உறைவிடமாகவும் இருக்கின்றார். அவருடைய பேச்சைக் கேட்டுக்கொண்டிருக்கும்போது சிலர் எழுந்து "ஐயா, தாங்கள் உண்மையான சைவர்தானா அல்லது விஷ்ணு

பக்தியும் உண்டா? தாங்கள் திரிகரண சுத்தியாக வழிபடுகின்ற மூர்த்தி யார்'' என்று கேட்டார்கள். ஒரு கேள்வியே போதாதோ? இரண்டு வேண்டுமா? அவதார விசேஷத்தோடு தோன்றிய பக்தர் இதற்கெல்லாம் விடையளிக்கத் தயங்குவாரா? கொசுவைக் கொல்ல கோதண்டமா வேண்டும்? அந்த க்ஷணத்திலேயே, நின்ற இடத்திலேயே நின்றுகொண்டு, கங்கைப் பிரவாகம்போன்று தத்துவம் பெருக்கெடுத்து ஓட, ஐந்து பாடல்களை இயற்றி அவைகளையே பதிலாக வழங்கினார்.

1. அரிபெரிதானாலும் அரன் பெரிதானாலும்
அலதிருவோருஞ் சரிதான் என ஆனாலும்
சுருதிமுடிவோதும் உண்மைப் பொருளிடத்தில்
தோன்றவில்லை தாரதம்யம் சொலவுமில்லை;
கருதிடின் 'நாம் அத்வைத நிலைமை பெற்றோம்;
கரிய திருமாலினிடந் துவேஷமில்லோம்
எரியனைய பாவமெனக் கொடியதாகி
*இசத்வேஷம் புரிவார்க்(கு) இவ்வாறுற்றோம்.

2. மறைசொலுவ தரியென்றும் அரனென்றார்;
வாதமிடும் இகனாலே பயனொன்றில்லை;
நிறைவுறு மெய்ப்பொருளாய(து) ஒன்றென்றோதி
நிச்சயமாய்ச் சுருதிமுடி வூர்ச்சிதம் பெற்(று)
அறையும் இடத்(து) இரண்டென்னும் சங்கை இல்லை;
அன்னிலைமையோர் நமக்(கு) அபேதமன்றோ?
கறையனைய பாவமுற்றார் சிவனுக்காகார்
கழறுகின்ற மொழிதடுக்க இவ்வாறுற்றோம்.

[*ஈச என்பது இசஎன முதல்குறுகி நிற்கிறது.]

3. குணமிலியைத் தாமதனென் றிகழ்ந்துரைத்தும்
   குற்றங்கள் ஓதிசிவத் துவேஷம் உற்றும்
துணையிழந்து பூதிமணி மணமிழந்தும்
   துர்யுக்தி வாதமிட்டுத் துணிந்தும் வேதத்(து)
அணைமறிந்த நெறிபுகுந்து சைவச்சாலி
   அழிப்பவரைத் தடுப்பதற்காய் விழித்துநோக்கி
இணையிலியெம் பெருமான் சீர் அருள்பெற்றிங்கண்
   எதிர்ந்தவர்பின் எதிர்ந்தவர்யாம் இவ்வாறுற்றோம்.

4. சத்தியமாய் மறைநெறியுற் றனந்தகோடித்
   தவங்கள்புரிந்(து) அவங்களகன்(று) அன்புற்றின்பச்
சித்திநிலை பெற்ற சிவயோகராகிச்
   சீர்மறையின் சுருதிமுடி எல்லை கண்டோர்
சித்தமது சினந்தறைந்த சாபந்தீண்டிச்
   சிவஞானம் இல்லாமல் பவந்தீராமல்
இத்தரையில் வந்துவந்து சிவத்வேஷஞ்செய்
   திடும் அந்தத் தொழில் தகைதற் கிவ்வாறுற்றோம்.

5. பாலின் அமு துண்ணற்காய் அமரரெல்லாம்
   பற்றிநின்று ஆழிதனைக் கடைந்தபோதில்
கோலவிடம் எழுந்திடவுந் தடுப்பாரின்றிக்
   கொதித்தபொழு(து) எதிர்ந்ததனைத் தடுத்தாட்
                                        கொண்டோன்
நீலமணி கண்டனெனத் தெரிந்தும் அந்த
   நிமலனிடத்(து) அன்பிலராய்ப் பாவமோகச்
சீலமுறுஞ் சிவத்வேஷச் சிந்தையுள்ளார்
   செய்வினையைக் கொய்வதற்கா யிவ்வாறுற்றோம்.

இவ்வாறு பதில் வழங்கினால் யார் என்ன சொல்ல முடியும்? தம்முடைய அவதார மர்மத்தை உணர்ந்தல்லவா பதில் வழங்குகின்றார்? சத்துருவேஷம் புரிந்தவரை எதிர்த்துத் திருத்தவும், 'கறையணைய பாவமுற்றார் சிவனுக் காகார் கழறுகின்ற மொழிதடுக்கவும்', எதிர்ந்தவரை எதிர்க்கவும், சிவத்துவேஷத் தொழிலைத் தகையவும், அத் தொழிலால் வரும் செய்வினையைக் கொய்யவும் அவதரித் துள்ள மர்மம் அல்லவா வெளியாகின்றது?

கேட்டவர்கள் வாய்மூடி மௌனிகளாகிவிட்டனர். குன்றுமுட்டிய குருவிகள்!

திருநெல்வேலியிலும் கிட்டத்தட்ட இம்மாதிரியான சம்பவம் ஒன்று நிகழ்ந்தது. திருநெல்வேலி நெல்லையப்பர் கோயிலில் நடைபெறும் பெரிய திருவிழாவில் பிரசங்கத் திற்காக வேண்டியும் பஜனைக்காகவும் வருஷா வருஷம் ஸ்ரீ சிவம் அவர்களுக்கு எழுநூறு ரூபாய் கொடுப்பதுண்டு. பக்தர் பஜனை நடத்துவார். பிரசங்கங்களும் செய்வார்.

எட்டாந்திருநாள் அன்று சுவாமி ஆண்டிவேடதாரி யாக வீதியில் வருகின்றார். பக்தரும் பஜனைசெய்து கொண்டேவருகின்றார். மகான் என்றால் இப்படியெல்லாம் தெருவிலே வந்து பஜனைசெய்யக்கூடாது. பதினாயிரம் அடி உயரத்திலுள்ள கட்டிடத்தின் உச்சியிலே வீற்றிருக்க வேண்டும். வாய் பேசா மௌனியாக இருக்கவேண்டும். எளியவர்களைக் கண்டால் கண்ணை மூடிக்கொள்ளவேண்டும். ராஜாக்களிடமும் பிரபுக்களிடமுந்தான் பேசவேண்டும். அப்படியெல்லாம் நடந்து கொள்வது மகானுக்குரிய இலக்கணம்,

"நாய்போல் அலைந்து, நரிபோல் உழன்று, நன் மங்கையரைத்
தாய் போல் கருதி, தமர் போல் அனைவர்க்குந் தாழ்ச்சி சொல்லி,
சேய் போல் திரிபவர் கண்டீர் உண்மை ஞானம் தெளிந்தவரே"

என்று ஞானிக்கு இலக்கணம் வகுத்த ஞானி ஒரு கோட்டிக்காரன், அப்படித்தானே? எந்தஞானியும் இப்படிப் பாடினால் புத்தி மாறாட்டத்தைத்தான் அவனுக்குக் கற்பிக்கவேண்டும். ஐயோ பாவமே!

ஸ்ரீ சிவம் வீதிவழியே மெய்மறந்து பாடி வருகின்றார். அவருடைய எளிமையான தோற்றத்தைக் கண்டு ஏளன உள்ளம் கொண்டவராய், அப்போதைய டெப்டி கலெக்டராக இருந்த ஸ்ரீமான் அனந்தநாராயண ஐயர் "ஐயா விஷ்ணுவைப் பற்றி ஏதாவது பாடவேண்டும். முழுவதும் சிவனைப்பற்றியே பாடிக்கொண்டு போகிறீரே" என்று உத்தரவிட்டார். ஏதோ ஒரு ஏழைப்பரதேசி என்பது அவருடைய எண்ணம். நெருப்பைத் தூக்கிக்கொண்டு போவது வெடிமருந்தின் பக்கம் என்பதை அவர் உணரவில்லை. ஏனென்றால் பக்தருடைய எளிய தோற்றந்தான் அப்படியான அலட்சிய மனப்பான்மைக்கு இடங்கொடுத்து விட்டது. பக்தர் இப்பொழுது பதில் கூறுகிறார். "உங்களுக்கோ அதிகாரம் இருக்கிறது. இப்பொழுது தெருவில் வருகிற மூர்த்தி பிக்ஷாடன மூர்த்தி. சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமாகவே நான் பாடுவேன். நீங்கள் வேண்டு

மானால் இவரைக் கோயிலுக்குள் கொண்டு விட்டு விட்டு விக்ரஹனை எழப்பண்ணிக்கொண்டு வாருங்கள். நான் அவரைப்பற்றிப் பாடுகிறேன்" என்பதுதான் அவருடைய பதில். பதிலைச் சொல்லிவிட்டு சும்மா இருந்தாரா? இல்லை. உடனே

"பிச்சைக்கு வாராரடி எம்பெருமான்
பிச்சைக்கு வாராரடி"

என்று பாட்டைத் தொடர்ந்து பாடவும் ஆரம்பித்து விட்டார்.

தன்னை நடமாடும் தெய்வமாகவே மதித்து வந்த உத்தியோகஸ்தருக்கு இப்படித் தட்டிப்பேசியது பொறுக்க முடியாததாய்ப் போய்விட்டது. "பார்த்தால் ஒரு பரதேசிப் பாடகன்! இவன் நம்மை அவமதிக்கவா" என்று எண்ணி, உடனே பஜனையை நிறுத்தும்படி கட்டளையிட்டார். இன்னும் விட்டாரில்லை. பஜனைக் கூட்டத்திற்காக உள்ள விளக்குகளையும் கொண்டுபோய்விடும்படி அதிகாரம் செய்தார். ஆனால் பக்தரைக் கேட்டுக் கொண்டிருந்த அபிமானிகள் விட்டுக் கொடுத்தார்களா? ஒட்டிக்கு இரட்டி விளக்குகளை வருவித்துவிட்டார்கள். இப்படியெல்லாம் எளிமைக்கு ஆபத்து வருவது இயற்கைதான். இது விஷயத்தை இன்னும் சற்று ஊன்றிப் பார்ப்போம்.

எளிமை துடியாக விளங்குவதை யாரிடம் காணலாம்? இலக்ஷியவாதிகளிடம் தான் காணலாம். அவர்களுக்கு இலக்ஷியந்தான் பெரிது. இலக்ஷியப் பித்து ஏற ஏற அவர்களுடைய உடை, அணி, பேச்சு, செயல் எல்லாம் அந்த

இலக்ஷியத்தைச் சுட்டிக்காட்டும் சின்னங்களாகவே தோன்றும். பக்திமான் ஒருவனை எடுத்துக்கொண்டால், அவனுடைய உடை பக்தியைக் காட்டும்; அணி பக்தியைக் காட்டும்; இன்னும் பேச்சு, செயல் எல்லாமும் பக்தியையே காட்டும். ஏனென்றால் அவனே பக்தி. பக்தியே அவன். அப்படியான அத்வைத நிலை.

லௌகிகத்தில் மூழ்கியிருப்பவன் நடிகன். மேலும் நடிகனாகவும் இருந்து தீரவேண்டும் ஊரளவுக்கு. அவனிடம் பணம் இருக்காது. ஆனாலும் இருக்கிற பாவனையில் ஏதோ சில அணிகளை அணிந்துகொள்வான் கல்வி இருக்காது. ஆனாலும் இருக்கிற பாவனையில் நடித்துக் கொள்வான். பக்தி இருக்காது. ஆனாலும் இருக்கிற பாவனையில் நடிப்புத்தான். ஸ்டுடியோ சென்று கொஞ்ச நேரம் அங்கு படம் பிடிக்க வருகின்றவர்களைப் பார்த்துக் கொண்டிருந்தால் போதுமானது. எல்லாம் தெளிவாகி விடும். அதிகாரம் இருக்காது. ஆனாலும் இருக்கிற பாவனையில் உறுமிக்கொள்வான். அத்தனையும் பகட்டு. அத்தனையும் நடிப்பு. இப்படி உள்ளதை மறைத்தும் இல்லாததைப் படைத்தும் வாழ்கின்ற நடிகனுக்கு உள்ளதை உள்ளபடி காணும்போது விபரீதமாகத்தான் தோன்றும்.

ஒரு நடிக பக்தன் அன்று பஜனை செய்திருப்பானாகில் டெப்டி கலெக்டர் சொன்ன உடனேயே சிவனைத் தெருவில் விட்டு விட்டு விஷ்ணுவைப்பற்றிப் பாடியிருப்பான். இலக்ஷியம் உண்டா? கர்ம வீரந்தான் உண்டா? தனது நடிப்பு வெற்றிபெற வேண்டும். சகோதர நடிகர்களிடையே

நல்லபெயர் எடுக்கவேண்டும். அம்மட்டோடு சரி. ஆனால் இலக்ஷியவாதி அப்படிச் செய்வானா? மறுக்கத்தான் செய்வான். மறுப்பால் கோபம் எழும். அக் கோபமே உண்மைக்குத் திரையிடும். அலட்சிய புத்தியைத் தூண்டி விடும். முடிவில் வேண்டாத இன்னலுக்கெல்லாம் நடிகனை இரையாக்கிவிடும்.

ஸ்ரீ நீலகண்டசிவம் அவர்களுக்கும் டெப்டி கலெக்டருக்கும் இடையே நடந்த தகராறு உண்மைக்கும் நடிப்பிற்கும் இடையே நடந்த தகராறுதான். உண்மையின் எளிமையே அதன் குறை. ஆனால் அதுவே அதன் வலி. நடிப்பின் பகட்டே அதன் வலி. ஆனால் அதுவே அதன் குறை. நிற்க. இனி பஜனை முடிவையும் அதைத்தொடர்ந்து நிகழ்ந்த மற்றும் பல சம்பவங்களையும் பார்ப்போம்.

அப்பழுக்கற்ற சிவத் திருப்பணிக்கு ஏன் இவ்வாறான இடையூறு வரவேண்டும் என்று மனம் வருந்தி,

"அன்பில்லாதவர்களோடு வாழாவண்ணம்"

என்று தொடங்கும் பதிகம் ஒன்றைப்பாடி ஸ்ரீசிவம் தமது ஆற்றாமையைத் தீர்த்துக் கொண்டார். ஆற்றாமையைத் தீர்த்துக்கொள்வதற்காகப் பாடியது மற்றொரு இடையூறையும் தோற்றுவித்து விட்டது. டெப்டி கலெக்டருடைய தயவைச் சம்பாதிக்கும் நோக்கமுடைய சில சுயநலமிகளால் வந்த வினை அது. ஸ்ரீ சிவம் ஸ்ரீமான் அனந்தநாராயண ஐயரை நிந்தித்துப் பாடியதாக அவரிடம் சென்று கோள் மூட்டிவிட்டார்கள். தீப்பிடிக்கிற வீட்டுக்கு மேல் காற்று வீசினதுபோல் ஆகிவிட்டது. ஏற்

கனவே கனன்று கொண்டிருந்த அவருடைய மனம் இப்போது அபரிமிதமான கோபத்தின் கொள்கலமாகத் திரண்டது. "வரட்டும். இந்தப் பரதேசியின் பஜனையை எப்படியாவது தொலைத்துவிட வேண்டும். அவனுக்கென்று ஒதுக்கிய படித்தரத்தையும் ஒழித்துவிட வேண்டும்" என்று கங்கணம் கட்டிவிட்டார்.

இது சமயம் திருவனந்தபுரசமஸ்தான பேஷ்கார் ஸ்ரீமான் ரத்னசுவாமி என்பவரிடமிருந்து அவருக்கு ஒரு கடிதம் வருகிறது. ஸ்ரீமான் ரத்னசுவாமி அடிகளின் பெருமை வாய்ந்த சிஷ்யர்களுள் ஒருவர். ஸ்ரீசிவம் அவர்களின் பெருமையையெல்லாம் எடுத்தெழுதி அவரைத் தக்க மரியாதையுடன் வரவேற்று உபசரிக்கவேண்டும் என்பதே கடிதத்தின் சாரம். போதாக்குறைக்கு பக்தரிடம் கோபித்துக்கொண்டு வந்த அன்று இரவு ஒருசில துர்நிமித்தங்களும் தோன்றின. எல்லாமுமாகச் சேர்ந்து ஸ்ரீமான் அனந்தநாராயண ஐயருடைய மனத்தையே கலக்கிவிட்டன. தான் செய்தது அபசாரம், அதுவும் பெரிய அபசாரம், என்பதை உள்ளூற உணர்ந்துவிட்டார். உடனே தானும் தனது மனைவியுமாகச் சேர்ந்து, வெற்றிலை, பாக்கு, பழம், கற்கண்டுடனே சென்று, அடிகளின் பாதகமலத்தில் சமர்ப்பித்து மன்னிப்புக் கேட்டுக்கொண்டார். அதுவுமல்லாமல் அடிகளிடமிருந்து பஞ்சாக்ஷர உபதேசத்தையும் பெறும் படியான அத்தனை பக்தியுள்ள சிஷ்யர்களாகவும் அத்தம்பதிகள் மாறிவிட்டனர். பல வருஷங்களாக அவர்களுக்குக் குழந்தைச் செல்வம் கிட்டவில்லை. அடிகளுடைய ஆசீர்வாதத்தால் அதுவும் கிட்டிற்று.

XI இனம் இனத்தோடே.

புலாப்பழத்திற்கு ஈயைப் பிடித்துவிட வேண்டிய தேவையே கிடையாது. அம்மாதிரித்தான் பெரியவர்கள் காரியத்திலும். பக்தர்களையும் அபிமானிகளையும் கூவிக்கா அமர்த்த வேண்டும்? அடிகளுடைய வீடு இடங்கொள்ளாதபடி அத்தனைபேர் கூடியிருப்பார்கள். எப்படித்தான் அத்தனைபேருக்கும் சாப்பாடும் மற்றும் வசதிகளும் நடைபெறுமோ தெரியாது. எத்தனையோ அபிமானிகள் எத்தனையோ காரியங்களை 'நீ முந்தி நான் முந்தி' என்று செய்ய முன்வந்துகொண்டிருப்பர். ஒரு குறையும் நேராது காரியம் நடந்துகொண்டே போகும்

பக்தரும் தமது காலத்தில் எத்தனையோ பெரியார்களைச் சந்தித்திருக்கின்றார். அவரையும் எத்தனையோ பெரியார்கள் சந்தித்திருக்கின்றார்கள். எழுதுகிறதென்றால் எல்லையில்லாமல் விரிந்துகொண்டே போகும். குறிப்பான ஒரு சிலரைமட்டிலும் பார்த்தால் போதுமானது.

சங்கீத உலகத்தில் இன்று பிரசித்திபெற்று விளங்கும் ஸ்ரீமான் இலட்சுமணபிள்ளை அவர்கள், பிரும்ம ஸ்ரீ பாபநாசம் சிவன் அவர்கள், இவர்களெல்லோரும் அடிகளின் ஆசீர்வாதத்தைப் பெற்றவர்கள். ஆகவே இன்று சங்கீத உலகத்தில் அவர்கள் பிரசித்தி பெற்று விளங்குகின்றார்கள்.

அடிகள் மகான் இராமலிங்கரை நேரில் சந்தித்துப் பேசியிருக்கின்றார். இன்னும் மகான் விவேகானந்தரை

யும் சந்தித்துப் பேசியிருக்கின்றார். பௌர்ணமி அன்று கிழக்கே முழு மதியும் மேற்கே சூரியனும் ஒரு சேரத் தோற்றம் அளிப்பதைக் குமரி முனையில் நின்று பார்க்கின்றவர்களுக்கு என்ன ஒரு வியப்பு உணர்ச்சி தோன்றுமோ அந்தமாதிரியான வியப்பு உணர்ச்சியே தோன்றியிருக்கும் மகான் சிவம் அவர்களையும் சுவாமி விவேகானந்தரையும் ஒரு சேர ஒரே இடத்தில் கண்டவர்களுக்கு. ஏனென்றால் இருவருமே ஒருசேர ஒரே இடத்தில் பேசும்படியான சந்தர்ப்பம் நிகழ்ந்துள்ளது.

திருவனந்தபுரம் சமஸ்தானத்திற்கு அநேக பெரிய வித்வான்கள் வந்துவந்து தங்களுடைய வித்வத்தையெல்லாம் காட்டி சன்மானம் பெற்றுச் செல்வது வழக்கம். வருகின்றவர்கள் எல்லோரும் ஸ்ரீ சிவம் அவர்களைப் பாராமலும் அவர்கள் இல்லத்தில் தங்காமலும் போவதே கிடையாது.

ஒரு நாள். தள்ளாடும் நடையோடு ஒரு பழுத்த கிழவர் அடிகளுடைய வீட்டைத் தேடி வருகின்றார். அலைந்து வருகிற களைப்பு ஒரு பக்கம். அடிகளைக் காண வேண்டும் என்ற ஆவல் ஒருபக்கம். சம்பந்தரை அப்பரும், அப்பரை சம்பந்தரும் காண ஆசைப்பட்ட மாதிரித்தான். அடிகளின் வீட்டின் பக்கமே வந்துவிட்டார். தற்செயலாக அடிகளும் ஏதோ ஓர் காரியத்தை முன்னிட்டு வீதி வழியே வருகின்றார். கிழவர் அடிகளைப் பார்த்து "சுவாமி கரமனை நீலகண்டசிவம் என்ற பெரியவா வீடு எது? அங்கே நான் போகவேண்டும்" என்றார். "அந்த நாய் இதுதான் ஸ்வாமி" என்று அடிகள் பதிலளித்தார். கிழவர் ஆனந்த பரவசராகி, சிவம் அவர்களை இறுகப்புல்லி, வாய்திரம்ப

இருந்த வெற்றிலைச்சாற்றை பக்தர்மீது அபிஷேகம் செய்து அன்பு செலுத்தினர். வந்த கிழவர் ஸ்ரீமான் கவிகுஞ்சர பாரதி. நெஞ்சை உருக்கும் தமிழ்ப் பதங்களையும் கீர்த்தனங்களையும் படைத்துக் குவித்து, தமிழின் இசைப் பெருமைக்கு அமரத்வம் கூட்டி வைத்த பெரியார்களுள் அவரும் ஒருவர்.

பக்தர் ஸ்ரீமான் கவிகுஞ்சர பாரதியைத் தமது இல்லத்திற்கு அழைத்துச் சென்று சில தினங்கள் தங்க வைத்தார். ஒருவருக்கொருவர் அளாவளாவிக்கொண்டதில் இருவரும் ஒரு படித்தாக ஒரே துறையில் வேலைசெய்து வருவதாகத் தெரிந்தது. ஸ்ரீமான் கவிகுஞ்சர பாரதி திருவிளையாடல் புராண வரலாறுகளையெல்லாம் கீர்த்தனை வடிவங்களில் எழுதி வருவதாகத் தெரிந்தார். தாமும் அதே துறையில் ஒரு சில வரலாறுகளைக் கீர்த்தனை வடிவில் ஏற்கனவே எழுதியுள்ளார். ஸ்ரீமான் கவிகுஞ்சர பாரதி அவர்கள் அந்தப் பணியைச் செய்து வருவதால், இனிமேல் அந்தத் துறையில் தாம் ஒன்றும் செய்ய வேண்டியதில்லை என்று முடிவு செய்து, மணிமேகலை ஆசிரியர் கூலவாணிகன் சாத்தனர் சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோவைப் பார்த்து, "அடிகள் நீரே அருளுக" என்று சிலப்பதிகார காவ்யத்தை எழுதும்படி கேட்டுக்கொண்டது போன்று ஸ்ரீ சிவம் அவர்களும் திருவிளையாடல் புராணக் கீர்த்தனங்கள் எழுதும் அருட் பணியை ஸ்ரீமான் பாரதி அவர்களையே செய்யும்படி வேண்டிக் கொண்டார். இதனால் பக்தருக்கு இன்னும் ஒரு வாய்ப்பும் கிடைத்தது. நாயன்மார்களுடைய சரிதங்களையெல்லாம் கீர்த்தனை வடிவில் எழுதிவிட்டால் பாமரர்களும் பாடி மகிழவும்

உண்மை தெரியவும் வழிஉண்டு என்று கருதி அத் திருப் பணியைச் செய்ய முற்பட்டுவிட்டார். முதல் முதல் எழுதி யது கண்ணப்பர் சரித்திரமே என்பதை முன்னரே பார்த்துவிட்டோம். சரித்திர கீதங்களோடு மத ஐதீகங் கள்பற்றியும் பல கீர்த்தனங்களும் கீர்த்தனத் தொகுதி களும் எழுதியுள்ளார். சுந்தரமூர்த்தி நாயனார் சரித்தி ரத்தை எழுதிமுடித்ததும் அவருக்கு ஓர் ஆண்குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்கு சுந்தரர் என்றே பெயரிட் டார்.

XII உதிரி நிகழ்ச்சிகள்

ஒரு சில உதிரி நிகழ்ச்சிகளை இங்கே குறிப்பிட விரும்புகின்றேன். அவைகள் உதிரி நிகழ்ச்சிகளாயினும் அடிகளினுடைய பிரதாப முத்திரையை ஒவ்வொன்றிலும் வெகு துலக்கமாகக் காணலாம். சில அவர்களுடைய கொடை இயல்பைக் காட்டும். சில அவர்களுடைய குண இயல்பைக் காட்டும். சில அவர்களது பக்தி மேம்பாட்டை.

ஸ்தல யாத்திரை செல்லும்போது ஓர் முறை பேரூர் என்ற ஸ்தலத்தில் தங்கும்படி நேரிட்டது. அங்கு ஒரு ருசிகரமான சம்பவம் நிகழ்ந்தது. அதைத் தெரிந்து கொள்ளுமுன் மற்றொரு சம்பவத்தை ஞாபகப்படுத்திக் கொள்வோம்.

ஞான சமுத்திரமாகவும் பெருங்கொடை வள்ளலாகவும் வாழ்ந்துவந்த வங்க மகனீய ஸ்ரீமான் ஈச்வர சந்திரவித்யாசாகர் ஓர் முறை வீதி வழியே வந்து கொண்டிருந்தார். யாரோ ஓர் வயோதிகர் "ஐயோ தெய்வமே, இன்று எனக்கு இரண்டாயிரம் வேண்டுமே. கிடைக்காதுபோனால் என் வாழ்க்கையும் தொலைந்து என் குடும்பமும் நிலைகுலைந்து நிர்மூலமாகிவிடுமே. என்ன செய்வது" என்ற ஏக்கத்தை அகத்திலும் முகத்திலும் தேக்கிக்கொண்டு ஓர் மரத்தடியில் உட்கார்ந்திருந்தார். கடவுள் அருள் ஈச்வரசந்திரரின் கண்வழியாக வெளிப் பட்டது. பெரியார் அவரைக் கண்டு விஷயம் என்ன என்பதைக் கேட்டார். ஒருவரை யொருவர் முன்பின் தெரியாது. ஆனாலும் கடமையைச் செய்கிறதற்கு உறவு

வேண்டுமா, அறிமுகந்தான் வேண்டுமா? கிழவர் தமது விருத்தாந்தத்தை எடுத்துச் சொல்லிவிட்டு, 'நீர் என்ன செய்யமுடியும்? நான் தான் என்ன செய்ய முடியும்? எல்லாம் ஆண்டவனுடைய லீலை" என்று சொல்லியவராய் அப்படியே உள்ளம் சாம்பி உட்கார்ந்துவிட்டார். பேச்சி னிடையே கிழவர் எங்குள்ளவர் என்பது தெரிந்துவிட்டது. என்ன காரியத்திற்காக வெளியே புறப்பட்டாரோ அதையும் விட்டுவிட்டு உடனடியாக வீடுசென்று, இரண் டாயிரம்ரூபாயை எடுத்து ஒரு ஆள்மூலம் கொடுத்தனுப்பி விட்டார். ரூபாயைக் கொண்டுவந்து கிழவர்கையில் கொடுத்துவிட்டு, ஊர் பெயர் ஒன்றும் சொல்லாமல், வந்தவன் ஓடியே போய்விட்டான். பெரியவர்களுடைய பெருங்கொடை இயல்பெல்லாம் இப்படித்தான். இனி அடிகளிடம் திரும்புவோம்.

ஒருவர் அடிகளிடத்தில் யாசகம் கேட்க வந்தார். அப்போது தற்செயலாக அடிகள் முன்னிலையில் ஒரு தாம்பலம் இருந்தது. அது நிறையப் பணமும் இருந்தது. ஒரு நாளும் அடிகள் பணத்தைக் கையால் தொடுவதே கிடையாது. பொதுவாக எண்ணிக் கொடுப்பார்கள். அபூர்வமாகத்தான் அள்ளிக் கொடுப்பார்கள். ஆனால் அத்தனையையும் கொடுப்பார்கள் உண்டோ? உண்டு. மனிதக் கூட்டத்திற்குள்ளே அப்பேர்ப்பட்டவர்களும் இருக்கத்தான் செய்கின்றார்கள். கேட்ட யாசகர் மனம் திடுக்கிடும்படி தாம்பலத்தை அவர் பக்கம் தள்ளிவிட்டார்.

இன்னும் அடிகளுடைய ஸ்தல யாத்திரையைத் தொடர்ந்து போவோம். ஒரு முறை காளகஸ்தி வந்து

சேர்ந்தார். அவருக்கு மிகவும் பிரியமான ஸ்தலம். ஆறு தினங்களிலும் முக்தி அடைய வழி உண்டு என்பதை உலகோர்க்குச் சுட்டிக்காட்டிய ஸ்தலமல்லவா அது? அங்கும் ஒரு சம்பவம் நிகழ்ந்தது.

ஒரு ஏழை பிராமணன் "மகளுக்கு விவாஹம் நடத்த வேண்டும். மகனுக்குப் பூணூல் இடவேண்டும். அடிகள் ஏதேனும் கொடுத்து உதவினால் நலம்" என்று வேண்டினார்.

ஒரு யோசனையும் செய்யவில்லை பக்தர் "பொண்ணு, உள்ளே இருக்கிற பணப்பையை எடுத்து வா" என்று தமது மூத்த மகளைக் கட்டளையிட்டார். திருவனந்தபுரத்தில் மோருக்கும் பாலுக்கும் கொடுக்க வேண்டிய வகைக்கு ரூ. 700 வேண்டுமென்று எண்ணி, அந்த ரூபாயை ஸ்ரீமான் தாணு (பக்தரின் இரண்டாவது குமாரர்) ஒதுக்கி வைத்திருந்தார். அதை இப்பொழுது கேட்டதும் ஸ்ரீமான் தாணு கொஞ்சம் தயங்கியவராய் 'அண்ணா ஊருக்கு அனுப்பியாச்சே' என்றார். "ஓஹோ, ஊருக்கு அனுப்பியாச்சோ? அப்படி அவசரம் வந்துவிட்டதா? எல்லாம் எனக்குத் தெரியும். கொண்டு வா அதை" என்று உரக்கக் கத்தினார். ஸ்ரீமான் தாணு கொண்டு போவதாக இல்லை. இன்னும் தயக்கந்தான். நெஞ்சாரப் பொய் சொல்லி வஞ்சித்ததை ஸ்ரீ சிவம் அவர்களால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. உலகப் பற்றுள்ள சூழ்விடையே வாழ்ந்தால் இந்த மாதிரியான நிகழ்ச்சிகளுக்கெல்லாம் உள்ளாக வேண்டியதுதான். சாகும் வரை ஒரு தர்மமும் செய்யாது பொருளைச் சம்பாதித்து

மனைவி கையில் கொடுத்துவிட்டு, "ஐயோ பாவமே, தருமம் செய்யாமல் சாகப்போகிறோமே, இப்போதாவது செய்வோம்" என்று எண்ணி, மனைவியிடம் ஒரு ஏழையைக் காட்டி 'இதோ இந்த ஏழைக்கு இத்தனை அளவு பொன் கொடு' என்று கையைக் காட்டினால், "ஐயா, விளாம்பழமா கேட்கின்றீர்கள்? இப்போது உங்களுக்கு அது ஆகாதே" என்று சொல்லி, அவன் கைக் குறிப்பை அறிந்தும் அறியாதவள்போல் மனைவி நடித்து விடுவாள். சீவகசிந்தாமணியில் இக்கருத்தைக் கொண்ட பாடல் ஒன்றை ஆசிரியர் எழுதியுள்ளார். உலக இயற்கையை மிக நன்கு உணர்ந்தே அவர் எழுதியிருக்கின்றார். வாஸ்தவம். பெரும்பாலும் உலக இயற்கை அப்படித்தான் தோன்றுகிறது. முற்றும் துறந்த முனிவர்களால் இதை எப்படிப் பொறுத்துக்கொள்ள முடியும்?

இன்றோடாவது இந்தப் பந்தங்கள் தொலையட்டும் என்ற எண்ணத்தோடு ஒருவரும் அறியாவண்ணம் காளகஸ்திக் காட்டுக்குள் மறைந்து நிஷ்டையில் அமர்ந்து விட்டார். பக்தருடைய குமாரர்களும் சிஷ்யர்களும் மூன்று தினங்களாக எங்கெல்லாமோ தேடி அலைந்தார்கள். பக்தரைக்காணவில்லை.

கடைசியில் மலைக்குறவன் ஒருவன் "யாரோ ஒருவர் காட்டுக்குள்ளே நிஷ்டையில் இருக்கின்றார், பார்க்கவே பயமாக இருக்கிறது" என்ற தகவலைத் தெரிவித்தான். உடனே எல்லோரும் காட்டுக்குள்ளே அடித்து விழுந்து ஓடி, சொல்லமுடியாத துயரத்தோடு ஒருமட்டிலும் அவர் இருக்கும் இடத்தை அடைந்து விட்டனர். அவருடைய நிஷ்

டைக் கோலத்தைக்கண்டால் பக்கத்தில் போகவே நடுக்கம். நாள் முழுவதும் ஒருவரும் போகத் துணியவே இல்லை. ஒரு மட்டிலும் எல்லோரும் ஒரு முகமாக ஸ்ரீமான் பொன்னுதான் போய்க்கூப்பிடவேண்டும் என்று தீர்மானம் செய்தார்கள். அவருக்கும்போக நடுக்கந்தான். ஆனாலும் ஒருமட்டிலும் துணிந்து சுமார் 15 அடி தூரத்திற்கு இப்பாலே நின்றுகொண்டு ஒரு சில ஸ்லோகங்களைச் சொல்லி, தங்களையெல்லாம் மன்னிக்கும்படி வேண்டினார். நெடு நேரங்கழித்து பக்தர் கண்விழித்தார். அப்பாலே எல்லோரும் தரையில் வீழ்ந்து நமஸ்கரித்து அடிகளை மன்னிக்கும்படி வேண்டினார்கள். வணங்கினவர்களுடைய இதய சீலத்தை மதித்து அவர்களை மன்னித்து, அவர்களுடன் இருந்த இடத்திற்கு வந்து சேர்ந்தார்.

வந்து சேர்ந்தாலும் இன்னும் காரியத்தைக் கைவிடவில்லை. தம்மிடம் வந்து யாசகம் கேட்டவருடைய விருப்பத்தை நிறைவேற்றுவதில் கருத்துக்கொண்டு, பையனையும் பெண்ணையும் அங்கேயே அழைத்து வரும்படி சொன்னார். அடிகளுடைய ஆசீர்வாத பலத்தால் பூணூல் வைபவமும் கல்யாணவைபவமும் நடைபெற வேண்டும் என்றிருக்கும் போது, யார் குறுக்கிட்டால்தான் தடைபடும்? இரண்டு காரியங்களும் அடிகள் இருந்த வீட்டிலேயே ஆனந்தமாக நடைபெற்றன. பெரியோரைக் கொள்ளத் தூண்டுவதும் கஷ்டம். கொடைத்தடை செய்வதும் கஷ்டம்.

ஏழை எளியார்களிடத்தில் இத்தனை கருணை காட்டுகிறார். தடைஏதும் ஏற்பட்டால் உள்ளம்கனன்று பொங்குகிறது. அத்தனை கருணை. ஆனாலும் போலித் துறவிகளைக்

கண்டால் இத்தனை கருணைகாட்டும் அடிகளா இப்படியெல்லாம் நடந்துகொள்கிறார் என்று தோன்றும். அவர்களைக் காணப்பொறுக்காது. துறவு வேடம் எத்தனையோ புனிதமான வேடம். ஆயிரம் வேள்விகளைக்கூட மனம் சலியாது செய்துவிடலாம். ஆனால் துறக்கிறது என்பது அசாதாரணமானகாரியம். துறக்கப் பழகினால் தெரியும் துறப்பது அத்தனை எளிய காரியம் இல்லை என்பது. உலகத்திலுள்ள உண்மைத் துறவிகளை விரல்கொண்டு எண்ணி விடலாம். உள்ளத்தால் துறவாது வேஷ அளவில் துறவிகளாக நடித்துக்கொண்டு ஊரார் தேடி வைத்த உப்புக்கும் அரிசிக்கும் எமனாகத் திரிகின்றவர்களை அவமானப்படுத்தினால் ஒரு குற்றமும் ஆகாது. அவர்களைக் கண்டால் பக்தர் விடமாட்டார். நாலுபேர் அறிய அவர்களை அவமானப்படுத்தி, அவர்களுடைய காவி வஸ்திரத்தையெல்லாம் பறித்துக் கிழித்து, வெள்ளுடை அணியச் செய்து வீதியிலே விரட்டி விடுவார். சிலவேளை அடிகளுக்கு மனந்தாங்காது. இப்படி இந்த வேஷதாரிகள் அபசாரம் செய்கின்றார்களே என்று மனம் புழுங்கிப் புலம்புவார். இதோ வருகின்றது அவருடைய புலப்பம்.

"உலகத்துக்காகக்கொண்ட கபட வேஷங்களெல்லாம்
உள்ளத்துக் குதவாதே. பழக்கமான கள்ளக் கருத் தறாதே;
கலவைப் பொடிகள் மேலே நலமாய்ப் பூசினதாலே
காயத்தின் நாற்றம் போமோ? சாயப்புரட்டு வேலை"
"பக்தர் போல் கோலம் பூட்டிப் பத்து விரலும் ஓட்டிப்
பாத்திரம் தோளில் மாட்டி, சூத்திரங் கையில் ஆட்டி,
உத்தமர் கவி பாடி, சுத்தர்போல் நடமாடி,
ஊனுடம்பைச் சீராட்டிச் சாண் வயிற்றைக் கொண்டாடி"
என்று ஒரு பக்கம் புலம்புகிறார்.

இன்னொரு பக்கம்

"பட்டு வஸ்திரங்கள் வேண்டும்,
பாவையர் இஷ்டம் வேண்டும்,
மெட்டொடு மிரட்டும் வேண்டும்.
வீணரைப் புகழ்தல் வேண்டும்,
கொட்டொடு முழக்கம் வேண்டும்,
குடையும் கால் குறடும் வேண்டும்,
பட்ட வர்த்தனங்கள் வேண்டும்
பலிக்கு வாய்க்கரிசி வேண்டின்"

[குறடு—செருப்பு; பட்டவர்த்தனம்—நாமம் முதலியசின்னங்கள்]
பலிக்கு—யாசகத்திற்கு

தாக்கினாலும் இப்படியா தாக்குவது என்று தோன்றும். ஆனால் இதுவும் காணாது. ஏனென்றால் துறவு என்பது அத்தனை புனிதமானது. அதைக் கொடும்பாவி கட்டி இழுக்கின்றவர்களுக்கு இதுவும் வேண்டும், இன்னும் இதற்கு மேலும் வேண்டும்.

XIII இசைத் திருப்பணி.

நாளும் இன்னிசையால் தமிழைப் பரப்பி மக்களைத் தட்டி எழுப்பிய சேவையை இனி ஆராய்வோம்.

தமிழிசைப் பாடல்கள் என்று சொல்ல வாயெடுத்தால், குறவஞ்சி ஆசிரியராகிய திரிகூடராஜப்பக் கவிராயர், அருணாசலக் கவிராயர், கோபாலகிருஷ்ணபாரதி, முத்துத் தாண்டவர், கவிகுஞ்சரபாரதி, வேதநாயகம்பிள்ளைபோன்ற பெரியார் நாமங்களை மறந்து எதுவும் சொல்லமுடியாது. அவர்களை எவ்வாறு பாராட்டுகின்றோமோ அவ்வாறு பாராட்டும்படியான சிறப்பினை உடையவர் ஸ்ரீ நீலகண்ட சிவம் அவர்களும்.

இசைக்கலை அவருடைய குடும்ப சம்பத்து. தகப்பனாரும் பெரிய மேதாவி. பாட்டனாரும் பெரிய மேதாவி. கேள்வியினாலும், கடவுள் கிருபையால் முளைத்த அவதார விசேஷத்தாலும் இசைஞானம் பொங்கிற்று என்றுதான் சொல்லவேண்டும்.

பக்திரஸபாட்டிற்கு இசை எத்தனை உகந்த கருவி என்பதைச் சொல்லவேண்டாம். தானும் உருகலாம். கேட்போரையும் உருகவைக்கலாம். கடவுளோ இசைக்கு ஆடும்பெருமான். இன்னும் வேறு என்ன வேண்டும் இசையின் பெருமையை எடுத்துக்காட்ட?

இசைத் துறையில் ஸ்ரீ சிவம் செய்த சேவை மகத்தான சேவை கீர்த்தனங்கள், பண் அமைந்த பதிகங்கள், கண்ணிகள், பஜனைப் பாடல்கள், சிந்துவகைகள், பத்யம்,

ஊஞ்சல், கலங்கு, கும்மி ஆகிய பல்வேறு ரகங்கள், அபூர்வமான ராகமாலிகைகள், இப்படியாக அடுக்கிச்சொல் லும்படியான இனங்களில் எல்லாம், எத்தனை எத்தனையோ எழுதிக் குவித்திருக்கின்றார். எழுதிக்குவித்தது மட்டிலும் இல்லை. இன்னும் அநேக புதுச் சிறப்புக்களை யெல்லாம் புகுத்திருக்கின்றார். இந்த இடத்தில் அவருடைய வாழ்க் கையில் நிகழ்ந்த சம்பவத்தை ஞாபகப்படுத்திக்கொண்டு அப்பாலே அன்னாருடைய இசைத்துறைக் கைங்கர்யத்தின் சிறப்பு இயல்புகளை ஆராய்வோம்.

தேவாரப் பாடல்களில் அநேகத்தை அடிகள் புதிய மெட்டில் அமைத்துப் பாடிவந்தார். திருநெல்வேலியி லுள்ள நெல்லையப்பர் கோவிலில் விழாக்கள் நடைபெறும் போது அவர்கள் வந்து பஜனை செய்வது வழக்கம். ஒரு முறை பஜனை செய்யும்போது தாம் புதிய மெட்டில் அமைத்த அநேக தேவாரப் பாடல்களை மிக உருக்கமாகப் பாடிவந்தார். சில வைதீக சைவர்களுக்கு அடங்காத கோபம் வந்துவிட்டது.

"கறையணைய பாவம் உற்றார் சிவனுக்காகார்
கழறுகின்ற மொழிதடுக்க" அவதரித்த அவர் மீது மரபு விரோதமான குற்றத்தைச் சாட்டி திருநெல் வேலி ஜில்லா நீதி ஸ்தலத்தில் வழக்கும் தொடுத்துவிட் டனர். முடிவு என்ன என்பதைக் கேட்கவா வேண்டும். அடிகள் பக்கமே ஜெயம். எதிரிகள் விட்டார்களில்லை. சென்னை ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்தார்கள். அங்கும் அப்படியே. பக்தர் புதுமையைப் புகுத்த முயன்றார், அதிலே வெற்றியும் பெற்றார் என்பதைக் காட்ட இது ஒன்றே போதும்.

இனி அவருடைய சேவையின் தனிப்பட்ட சிறப்பினை ஆராய்வோம்.

கீர்த்தனங்கள் பாடிய தோடல்லாமல், எத்தனையோ அபூர்வ இராகங்களிலெல்லாம் பாடியிருக்கின்றார். த்விஜவந்தி, நாகநந்தினி, மங்களகைசிகி போன்றவைகள் மேலே குறிப்பிட்ட அபூர்வ இராகங்கள். இராகமாலிகையில் ஐந்து கீர்த்தனங்கள் பாடியிருக்கின்றார். அவற்றுள் ஒன்று பதினெட்டு இராகங்களைக் கொண்டது. அதுவே அபூர்வ காரியம். அதிலும் இன்னொரு அபூர்வம் என்னவென்றால், பாடிய பாட்டானது எந்த ஒரு கருத்தைத் தாங்கிச் செல்கின்றதோ அந்தக் கருத்தின் இயல்பை ஒருவிதத்திலும் சிதைக்காதபடி, ஒவ்வொரு இராகத்தையும் அதன் அதன் பெயராலேயே தோற்றுவித்து அதிசயமாக எழுதி முடித்திருக்கின்றார். கூர்ந்து பார்த்தால் இவர் குறிப்பிட்ட கதிக்கு இவரே இசைகொண்டு பாதை சமைக்கவில்லை, ஆனால் இசைதான் இவரைக்கொண்டு பாதை சமைத்து விட்டது என்று தோன்றும் ஆண்டவனுடைய அருட்செல்வம் பரிபூரணமாக இருக்கும்போது, எதுதான் முடியாது? நாட்டை இராகத்தில் தொடங்கி மத்யமாவதியில் முடிகின்றது. முடிகின்றதும் எப்படி முடிகின்றது? தாஜ்மகால் போன்ற சிற்பலாவண்யம் வாய்ந்த கானமாளிகையாகவே முடிகின்றது. இன்னொரு இராகமாலிகை புலப்பத்தை உட்பொருளாகக் கொண்டது. ஆகவே சோகத்திற்கு உகந்ததான வராளி, ஆகிரி, முகாரி, கானடா போன்ற இராகங்களைக் கையாண்டிருக்கின்றார். பாவ நீர்மைக்கேற்ற இராகங்களைக் கொடுப்பதுதான் விசேஷம். இராகமாலிகையைப் பாடும்போது, வெறும் இசைப் பொருத்தத்தை

மட்டிலும் கவனியாது, பாடப்படும் பாடலில் என்ன ஒரு பாவம் தேக்கப்பட்டிருக்கிறதோ அந்த பாவத்தின் சீர்மையை நன்ருக உணர்ந்து, அதனைத் தட்டி எழுப்பக்கூடிய இராகங்களைத் தொடுத்துப் பாடினல், பாடுகின்றவர்களைக் கையெடுத்துக் கும்பிடலாம். அப்படி எத்தனைபேர் செய்கின்றார்கள்?

அடிகள் பாடிய கீர்த்தனங்களைப் பெரும் பிரிவாகப் பிரிக்கிறதானல் இருவகையில் பிரிக்கலாம். (1) விடுதிக் கீர்த்தனங்கள் (2) சரித்திரக் கீர்த்தனங்கள்.

விடுதிக் கீர்க்தனங்களையும் இருவகையாகப்பிரிக்கலாம். (1) உபதேசக் கீர்த்கனங்கள். (2) பக்திக் கீர்த்தனங்கள் இவைகளெல்லாம் கிலையாக இருந்து எழுகப்பட்டவைகளே அல்ல. ஸ்தல யாத்திரை போகும்போதும், சந்தர்ப்ப நிகழ்ச்சிகளால் உணர்ச்சி பீறிட்டுப் பொங்கும்போதும், அப்பப்போ பாடியவைகள். பக்கத்தில் உள்ளவர்கள் எழுதினல் உண்டு. அல்லாதபடி போனது போனதுதான். அப்படிப் போனவைகளும் அநேகம்.

சரித்திரக் கீர்க்கனங்களெல்லாம், எழுதவேண்டும் என்ற அந்தரங்க விருப்பத்தோடு, எழுதப்பெற்றவை.

இனி அடுத்துக் கவனிக்கவேண்டியவை பண் அமைந்த பதிகங்கள். அத்தனையும் குறிப்பிட்ட எண்ணத் தொகுதியுள்ள பதிகங்கள். எல்லாம் பல்வேறு விதமான சிவானுபவங்களையும் ஆத்ம அனுபவங்களையும் குறிப்பன. அநேகமான உண்மைகளை நாடிச்செல்லும் சுபாவத்தினுள்ளே

நாம் ஒரு பண்பைக் காணலாம். ஆழமான அனுபவத்தில் புகும்போது ஒருவன் தனது உள்ளத்துள்ளே உறைந்திருப்பதைக் காண முயல்கின்றானே யொழிய புறம்பாக இருப்பதை அன்று. மகான் சிவம் அவர்களும் அப்படித்தான். அடிகளுடைய பதிகங்களே அதற்குரிய சான்று. 'திருநீலகண்ட போதம்' என்ற தலைப்பில் அவைகள் வெளியிடப்பட்டுள்ளன.

இன்னும் கண்ணிகளில் எல்லாம் ரஸநீர்மைக்கேற்ற புதுமைகளைப் புகுத்திருக்கின்றார்.

இனி அவருடைய பாடலின் தனிப்பட்ட பண்பைக் கவனிப்போம்.

எப்பொழுதெல்லாம் பக்தியினால் இதயம் நெக்கு விட்டு உருகுகின்றதோ அப்பொழுதெல்லாம் பாடுவார். பாடிய ஒவ்வொரு பாடலிலும் அடிகளுடைய இதயச் சாயலையும் பக்த முத்திரையையும் செவ்விதாகக் காணலாம்.

பாட்டு என்பது சொல்லால் ஆக்கப்பட்ட ஒரு சிருஷ்டி. இப்பொழுது இராகம் பிரதானமா அல்லது சொல்லே பிரதானமா என்ற கேள்வி எழுகின்றது. சில பாடல்கள் பாடகனுடைய மனோதர்மத்தைத் தூண்டு கின்றன. உல்லாசமான இராக விஸ்தாரத்திற்கு இடங் கொடுக்கின்றன. சில பாடல்கள் மிகுதியான பதச்செறிவு உடையனவாக இருக்கின்றன. அப்படியான பாடல்களில் வார்த்தைகளின் ஆதிக்கம் பெருத்துவிடுமேயொழிய இசையின் ஆதிக்கம் மேலோங்காது. பாடல்களில் எப்போதும் வார்த்தைகள் செட்டாகவே காணப்படவேண்டும். இசையி

னுடைய ஆதிக்கம் பெருகிநிற்க இடமிருக்க வேண்டும். வார்த்தைகள் தெரிவிக்கமுடியாதபடி தவிக்கும் குறையை இசையே நிறைசெய்கின்றது. வார்த்தைகளின் ஆதிக்கம் ஒடுங்கும் நிலைதான் இசையின் உயர்வு தொடங்கும் நிலை. இராக பாவத்தை எவ்வளவுக் கெவ்வளவு விஸ்தரிக்க இடம் ஏற்படுகிறதோ அவ்வளவுக்கவ்வளவுதான் வாய்ப்பாட்டே சிறக்கும். * கணவனைச் சார்ந்தவள் என்பதை உணர்ந்தே அவனை வசப்படுத்தும் மனைவிபோன்று பதங்களின் துணையைப்பெற்றே அவைகளைத் தன்வசப்படுத்தும் இயல்பு இசையினிடம் அமையவேண்டும். அப்படியானால்தான் சுகம் உண்டு. பதங்களின் கூட்டுப் பரப்பிலேமட்டுந்தான் இசையின் ஆதிக்கம் பரவுகிறது என்பதில்லை. பதங்கடந்த அதீத நிலையிலும் அதன் ஆதிக்கம் பரவுகின்றது. என்னவெல்லாமோ வாய்விட்டுச் சொல்லமுடியாத மர்மங்களை உணர்த்தப் போவதுபோன்று தோன்றும். நீலக்கடலிலா, நெடுங்குன்ற முடியிலா, வானவெளியிலா, மாதேவன் அடியிலா, எங்கு மறைந்திருக்கின்றன இந்த மர்மங்கள் என்று தேடும் உள்ளத்தையும் இசையானது தூண்டிவிடும்.

இவ்வாறான சிறப்பு இயல்புகளெல்லாம் இசையினிடம் அமைந்து கிடப்பதனாலே, பாடல்களில் இசையின் ஸ்தானமே மேலோங்கி நிற்கவேண்டும்.

---

* But as in our country the wife rules her husband through acknowledging her dependence, so our music, though professedly in attendance only, ends by dominating the song" Tagore.

அடிகள் பாடிய கீர்த்தனங்களில் பதச்செறிவுஎன்னும் அம்சத்தையும் பார்க்கலாம். பாடல் சொகுசு என்னும் பெருமையையும் பார்க்கலாம். இளமைக் காலத்தில் பாடிய கீர்த்தனங்களில் பதச்செறிவையும் சரணப் பெருக்கத்தையும் காண்கின்றோம். வயது ஆகஆகவும் பக்தி அனுபவம் முதிர முதிரவும், பக்தர் பாடிய கீர்த்தனங்களெல்லாம், மேன்மையும் சொகுசும் வாய்ந்த வித்தக விசித்திரங்களாகவே விளங்குவதைக் காணலாம்.

இனி பக்தர் பாடிய நூலின் இனங்களை வெறும் பெயரளவில் மட்டிலும் பார்த்துவிடுவோம். உள்நுழைந்து எழுதுவதென்றால் விரிந்துவிடும்.

1. திருநீலகண்ட போதம்
2. விடுதிக் கீர்த்தனங்கள்
3. லளிதா மகான்மியக் கீர்த்தனங்கள்
4. சிவராத்திரி மகான்மியம்
5. சோமவார மகான்மியம்
6. பிரதோஷ மகான்மியம்
7. விபூதி மகான்மியம்
8. ருத்திராக்ஷ மகான்மியம்
9. ஸ்ரீருத்ர மகிமை
10. கண்ணப்பநாயனார் சரித்திரம் (கீர்த்தனை வடிவில்)
11. அப்பர் ,, ,,
12. சம்பந்தர் ,, ,,
13. சுந்தரர் ,, ,,
14. மாணிக்கவாசகர் ,, ,,
15. சண்டேச்வரர் ,, ,,
16. கலிக்காயர் ,, ,,

17\. அமர்நீதி ,, ,,
18\. சிறுத்தொண்டர் ,, ,,
19\. கழுக்காணி முட்டத்தம்மையார ,,
20\. சேரமன்னவர் ,, ,,
21\. சோமயாஜி ,, ,,
22\. இயற்பகை ,, ,,
23\. மூர்த்தி ,, ,,
24\. திருநீலகண்டர் ,, ,,
25\. குங்குலிக்கலயர் ,, ,,
26\. காரைக்காலம்மையார் ,, ,,
27\. பத்ராயுஸ் ,, ,,
28\. பிட்டுக்கு மண்சுமந்தது ,,
29 மாமனாக வந்து வழக்குரைத்தது ,,
30\. விருத்தகுமாரர் பாலரான லீலை ,,
31\. நரியைப் பரியாக்கியது ,,
32\. சித்தர் சரித்திரம் ,,
33\. விறகு விற்ற படலம் ,,
34\. திருமுகம் கொடுத்த லீலை ,,
35\. தக்ஷயாகம் ,,
36\. சம்பவ காண்டம் ,,
37\. தாருகாவன பிக்ஷாடனம் ,,

இன்னும் தொலைந்துபோனவைகள் அநேகம். நூல் எழுதுகின்றவர்களுக்குத் தெரியும், நல்ல வடிவில் ஒரு நூல் எழுதுவதென்றால், எத்தனை கஷ்டம் என்பது. இத்தனையும் எழுதவேண்டுமென்றால் எத்தனை அளவு பக்தியும் இன்னும் எத்தனை அளவு கர்மவீரமும் இருந்திருக்க வேண்டும் என்பதை நம்மால் அளந்து கட்டவே முடியாது. எல்லாம் அவதார விசேஷம். இலக்ஷிய வெறியின் இயல்பு

XIV. 'மகாதேவஜய, மகாதேவஜய'

அவதரித்து அறுபது வருஷங்கள் உருண்டுவிட்டன. ஐந்து வயதுமுதல் தொடுத்த வாழ்க்கைக்கீதம், ஐம்பத்தேழு ஆண்டுகளாக இடைவிடாது உருவாகி உருவாகி, பிணியும் மூப்பும் மரணமும் அற்ற பேரின்ப உலகத்திற்குக் கொண்டுசெல்லும் நூலேணியாக மிளிர்ந்தது. பிறத்தலும், வெறுமனே உண்டு, உடுத்து, உறங்கி, மகிழ்ந்து வாழ்க்கையை நடத்தலும் இறத்தலும் ஆகிய மூன்று அத்யாயங்களிலே வாழ்க்கையை ஒடுக்கும் இனத்தார் மலிந்த இந்த உலகத்தில் வாழ்க்கை அத்யாயங்களைப் பெருக்கக் கூடிய மதிவளமும் மனநலமும் கர்ம வீரமும் வாய்க்கப் பெற்றவர்கள் எத்தனைபேர்? சிலர் என்றுதான் சொல்ல வேண்டும். ஸ்ரீமான் நீலகண்டசிவம் அந்த 'சிலர்' என்ற திருக்கூட்டத்திலுள்ள மகான். பக்தியின் பயனாகவே அவதரித்தார். பக்திப் பயிரையே வளர்த்தார். பக்தியின் பயனையே பெற்றார். பிறந்து வளர்வது உலக இயற்கை. ஆனால் வளர்ந்தே பிறப்பது அபூர்வந்தானே? ஸ்ரீசிவம் வளர்ந்தே பிறந்த மகான். அவருடைய மதி கனியும் முன்னரே மனம் கனிந்துவிட்டது; வாசகம் பெருகும் முன்பே பாவனை வளர்ந்துவிட்டது. கால்நடை சித்திக்கு முன்னம் கதிநிலை தோன்றிவிட்டது. எல்லாம் அவதார விசேஷம்.

பத்தொன்பதாம் நூற்றாண்டு சிறந்த பக்த நூற்றாண்டு. இமயம் முதல் குமரி வரை எத்தனையோ அரியபெரிய மகான்களைத் தோற்றுவித்த புண்ணியம் அந்த நூற்றாண்

டுக்கு உண்டு. மகான்களான இராமகிருஷ்ண பரமஹம்சர், சுவாமி விவேகானந்தர், தயானந்தசரஸ்வதி, இராமலிங்க சுவாமிகள், நீலகண்டதாஸர் போன்ற எத்தனையோ பக்த மணிகளைத் தோற்றுவித்த பெருமையுடன் விளங்கும் நூற்றாண்டு. அதே நூற்றாண்டில் தோன்றிய தத்துவத்தைப் பின்னணியாக வைத்துக்கொண்டு இந்த மகான்களுடைய அவதார விசேஷத்தை மதிப்பிடவேண்டும். ஆத்ம அறிவை அறவே தொலைத்து, வெறும் பௌதிக அறிவையே வளர்த்து வளர்த்து, மக்களெனும் பான்மையை மறந்து, விலங்குகளாய், இயந்திரங்களாய் மாறுவதே முடிவாக முடிந்ததில்லை என்னும் தத்துவத்தைத் தோற்றுவித்த அதே காலம் இப்படியான தெய்வ அவதாரங்களையும் தோற்றுவித்தது வியப்புத்தான். இல்லையா?

மண்திணிந்த ஞாலமெல்லாம் என் பொன்னடிக்குக் காணிக்கை என்ற மமதையோடு திரிந்த நெப்போலியன் அதோ தலைகுப்புற வீழ்கின்றான். "ஐயோ என் வாள்வலியாலும் தோள்வலியாலும் ஸ்தாபித்த வெற்றியெல்லாம் நெட்டை நெடுங் கனவாய்ப் போச்சே! அன்பினால் கண்ட கிறிஸ்துவின் இராஜ்ஜியம் இன்னும் துலங்கலாச்சே" என்று அவன் புலம்புவது ஒருபக்கம் கேட்கின்றது. இன்னொருபக்கம் "போர், போர், போர். போரையன்றிப் புகலொன்றில்லை, போர், போர், போர்." என்ற மிருகமந்திர முழக்கம் கேட்கின்றது. இன்னொருபக்கம் "இயந்திரங் கண்டோம். மண்ணெல்லை தாண்டும் வழி கண்டோம். நீரெல்லை தாண்டும் நெறிகண்டோம். உன்பொருள் என் பொருள். என்பொருளும் என்பொருள். காடுவேட்டையே கனி நாகரிகம்" என்ற தத்துவ முழக்கம் கேட்கின்றது.

இந்த முழக்கங்களுக்கிடையில் "அன்புநெறி கண்டோம், அரன் அடிக்கு வழிகண்டோம்" என்னும் முழக்கத்தையும் உலகம் கேட்கும்படி செய்வதென்றால், சாமான்யமான காரியமா?

இந்த அமானுஷ்யமான காரியத்தைச் சாதித்ததிலே மகான் நீலகண்டதாஸருக்கும் ஓர் பெரும் பங்கு உண்டு. வேதப்பயிர் தழைக்கவும் மிகு சைவத்துறை விளங்கவும் அவதரித்தார் ஞானசம்பந்தர். அருகி அழியும் கலிநீக்கி அறங்கொள் சைவத் திறந் தழைக்க அவதரித்தார் சேரமான் பெருமாள் நாயனார். அம்மாதிரியே

"ஊனுடம்பை இச்சித்து உண்மைதடுமாறும்
மானுடரைக் காக்க" அவதரித்தார் மகான் சிவம்.

சந்தமும் பொருளும் தகவுடனே மிளிரும் பாடல்களாலும், இன்னுரைகளாலும், அரிய பல அதிசயச் செயல்களாலும் கடவுள் உண்மையை வற்புறுத்தினார். என்றும் அழியா மெய்ப்பொருளைக் காட்டி மனிதர்களை மனித நிலைக்கும், அப்புறமே அமர நிலைக்கும் கொண்டு செல்ல அரும்பாடு பட்டார். அவரும் அமரநிலை அடைந்தார்.

1900ம் வருஷம். ஆடிமாதம். சுக்கிரவாரம். 'யானை வரும் பின்னே மணிஓசைவரும் முன்னே'. ஸ்ரீமதி சிவசிவா பாட்டி கனவு காண்கிறார். ஸ்ரீசிவம் பூஜை செய்கின்ற பூஜைக்கோவிலின் முன்பு ரிஷபம் வந்து நிற்கிறது. இதுவே அவருக்குத் தென்பட்ட கனவு. அதை நாயகனிடம் தெரிவித்தும் விடுகின்றார். இந்த இடத்தில் மகான்

முத்துசுவாமி தீக்ஷிதருடைய வாழ்க்கையில் நிகழ்ந்த சம்ப வத்தையும் ஞாபகப்படுத்திக்கொள்ள வேண்டும்.

தீபாவளி தினத்தன்று எட்டயபுர சமஸ்தானத்தி லுள்ள பட்டத்துயானை மயானத்தை நாடி ஓடுகிறது. ஊரார் எல்லோரும் நடுங்கிவிட்டனர். அரசரும் நடுங்கி விட்டார். இவ்வாறு ஓடிப்போனதின் உட்பொருள் யாது என்பதை ஸ்ரீ தீக்ஷிதரிடம் அரசர் கேட்டுவிடுகின்றார். தீக்ஷிதர் 'உனக்கு ஒன்றும் இல்லை' என்று சொல்லிவிட்டார். ஆனால் அன்றுதான் அவர் முக்தி அடைகின்றார் மீண்டும் 'யானைவரும் பின்னே மணி ஓசைவரும் முன்னே' என்ற பழமொழியை ஞாபகப்படுத்திக் கொள்வோம். பெரியோர் வாழ்க்கையில் இவ்வாறு நிகழ்வதெல்லாம் சர்வசாதாரணம். ஆடி மாதம் வெள்ளிக்கிழமை காலை $4\frac{1}{2}$ மணிக்கு ஆண்டவ னுடைய கட்டளை பிறக்கிறது. உடனே ஸ்ரீ சிவம் தமது குழந்தைகளைப் பக்கத்தில் அழைத்து, சோமவாரம் (திங்கட் கிழமை) மாலை $4\frac{1}{2}$ மணிக்கு நாம் கைலாசயாத்திரை. இன்று முதல் மூன்று தினங்களுக்கு இடைவிடாத சிவநாம பஜனை இங்கே நடக்கட்டும்" என்று உத்தரவிட்டார்.

வெள்ளிக்கிழமை காலை $4\frac{1}{2}$ மணிக்கு உட்கார்ந்தவர் திங்கட்கிழமை மாலை $4\frac{1}{2}$மணி வரைக்கும் இருந்த இடத்தை விட்டு அசையவே இல்லை. முடியுமா யாராலும்? மனித னால் செய்யக்கூடிய காரியமா? ஆனால் ஒரு மனிதன் செய் தான். அவன் அமரன். பக்தியால் எதுதான் முடியாது?

யாத்திரதாரியாக அமர்ந்தநேரம் காலைநேரம். ஆகவே திருப்பள்ளிஎழுச்சி பாட இதயம் முனைகின்றது 'போற்றி

என் வாழ்முதல் ஆகிய பொருளே'' என்ற திருவாசக அடியை மூத்தமகனுக்கு ஞாபகப்படுத்துகின்றார். கல்லும் கரையும்படி அவர் பாடுகின்றார்.

இராகம்: பூபாளம்

''போற்றியென் வாழ்முதல் ஆகிய பொருளே
புலர்ந்தது; பூங்கழற் (கு) இணைதுணைமலர் கொண்(டு)
ஏற்றிநின் திருமுகத் (து) எமக்கருள் மலரும்
எழில்நகை கொண்டு நின் திருவடி தொழுதோம்
சேற்றிதழ்க் கமலங்கள் மலருந் தண்வயல்சூழ்
திருப்பெருந் துறைஉறை சிவபெரு மானே
ஏற்றுயர் கொடியுடையாய், எனை உடையாய்,
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே''

மாணிக்கவாசக அடிகள் அரசனுடைய சிறையினின்றும் விடுதலைபெற எண்ணியது போல் தாமும் உடலென்னும் சிறையினின்றும் விடுதலைபெற எண்ணியே அப் பாடலைப் பாடச்சொன்னார் போலும். ஒரு பாட்டோடு நின்றுவிடவில்லை. பாடப்பாட அடி எடுத்துக் கொடுத்துக் கொண்டே வருகின்றார். அத்தனையும் திருவாசகமே. பக்தி வெள்ளத்தில் அடிகளுடைய மனம் அபரிமிதமாக ஆழ்ந்து கிடந்தது என்பதையே அப் பாடல்கள் குறிப்பிடு கின்றன.

''ஆடுகின்றிலை,கூத்துடையான்கழற்கு அன்பிலை,என்புருகிப்
பாடுகின்றிலை, பதைப்பதுஞ் செய்கிலை, பாதமலர்
சூடுகின்றிலை, சூட்டுகின்றதும் இலை, துணையிலி பிணநெஞ்சே,
தேடுகின்றிலை, தெருவுதோறும் அலறிலை, செய்வதொன்று
அறியேனே''

[துணையிலி — ஒப்பற்ற, பிணநெஞ்சே — பேய்மனமே]

என்ற பாசுரத்தைக் கேட்டபோது பக்தருடைய அங்கமே துடிக்க ஆரம்பித்துவிட்டது.

"மெய்தான் அரும்பி, விதிர் விதிர்த்(து), உன்
விரையார்கழற் (கு) என்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி, வெதும்பி,
உள்ளம்
பொய்தான் தவிர்ந்து, உனைப் போற்றி ஜயஜய
போற்றி என்னும்
* கைதான் நெகிழவிடேன் உடையாய் எனைக்
கண்டுகொள்ளே"

என்ற திருப்பாடலை ஓதும்போது அடிகள் இருந்த நிலையை அப்பர் இருந்த நிலைக்குத்தான் ஒப்பிடவேண்டும்.

"தூயவெண்ணீறு துதைந்த பொன்மேனியும் தாழ்வடமும்
நாயகன் சேவடி தைவரு சிந்தையும் நைந்துருகிப்
பாய்வதுபோல் அன்புநீர் பொழி கண்ணும் பதிகச்
செய்ய செவ்வாயும் உடையார்"........... [செஞ்சொல்

(இதுவே அப்பர் தில்லைக்குச் செல்லும்போது தமது திருமேனி மீது தோற்றுவித்த நிலை) இந்நிலையில் அடிகள் காட்சிகொடுத்துக்கொண்டிருக்கிறார். இனி அடுத்து நிகழும் சம்பவங்களைப் பார்ப்போம்.

வீடுதோறும், வீதிகள்தோறும், திருவனந்தபுர வரில் எங்கணும் 'சிவம் கைலாச யாத்திரையாம்', 'சிவம் கைலாச யாத்திரையாம்' என்ற ஒரே முழக்கம் நிரம்பி

* கை = ஒழுக்கம்.

விட்டது. நம்பினபேர்களும் எண்ணிறந்தோர். வேடிக்கை பார்க்க வந்தவர்களும் எண்ணிறந்தோர். ஸ்ரீ சிவம் அவர்களுடைய வீட்டினுள்ளே சிவநாமபஜனை நடைபெறுகின்றது. வீட்டிற்கு வெளியே திருநாள்-கூட்டம் திரள்கின்றது. இது நிற்க.

மேருமலையைச் சார்ந்த காகமும் பொன்னிறம் அடையும் என்ற பழமொழியை உலகம் வழங்கி வருகிறது. அதனை வெறும் பழமொழிதான் என்று சாதித்துவிடலாம். சாட்சியம் இருக்கும்போது சாதிக்க ஏன் தயங்கவேண்டும்? அவதார புருஷருக்கு வாழ்க்கைப்பட்டும், அவருடைய அருள் நிழலிலே நாற்பத்துநான்கு வருஷங்கள் வரை இடைவிடாது நின்றும், பக்திப் பெருக்கால் செயற்கரிய காரியங்களையெல்லாம் நாயகன் செய்து வருவதைப் பார்த்திருந்தும், இன்னும் அவருடைய மனைவியாருக்கு மனப்பக்குவம் வாய்க்கவில்லை என்றால், அந்த நிலையை என்ன சொல்வது? தனது கணவர் கைலாசயாத்திரைக்குச் சித்தமாகிவிட்டார் என்றால், அதை அந்த அம்மையார் நம்பவே இல்லை. நிஷ்டையில் இருக்கிறவரை முன் ஒருதடவை குலுக்கிக் கலைத்தமாதிரி கலைத்துவிட்டால், நிஷ்டை கலைந்துவிடத்தானே வேண்டும் என்ற குருட்டு நம்பிக்கையுடன் கலைக்க ஆரம்பித்துவிட்டார். நல்லவேளையாகப் பக்கத்தில் உள்ளவர்கள் தடை செய்து விட்டனர்.

பக்தருடைய நோக்கமென்ன! மனைவியாரின் நோக்கமென்ன! மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசந்தான். நாமோபாசனையால் முக்தி அடையவேண்டும் என்பது பக்தருடைய நோக்கம். மூன்று தினங்களாக இடைவிடாது

இறைவனுடைய திருநாமங்களை முழங்கிக்கொண்டிருப்போருக்கு "இசைக்கு ஆடும் பெருமானின்" அருள் கிடைக்கும் என்பது ஆகமங்கள் கண்ட உண்மை. இந்த முறையானது ஸத்ராயாகம் என்று வழங்கப்படும். நாதஸ்வரூபியான ஆண்டவனை அடைதற்குரிய பல சாதனங்களுள் இதுவும் ஒன்று. இதன்மூலம் முக்தி பெறவேண்டுமென்றே பக்தர் இத்தனை ஏற்பாடும் செய்கிறார். இவ்வாறு பரத்தில் திளைத்திருப்பவரை இகத்தில்திருப்ப மனைவி முயல்கின்றாள். பலிக்குமா? பஜனை இடைவிடாது நடந்துகொண்டிருக்கிறது. வந்து வந்து வணங்குகின்றவர்களுக்கெல்லாம் விபூதிப் பிரசாதம் வழங்கிக்கொண்டேயிருக்கின்றார்.

ஒரு ருசிகரமான சம்பவம். அதைக் கூறுவதற்கு முன்னதாக ஹைக்கோர்ட் நீதிபதி, ஸர். டி. முத்துசுவாமி ஐயர் வாழ்க்கையில் நிகழ்ந்த ஒரு வரலாற்றை ஞாபகப் படுத்திக்கொள்வோம்.

ஒருநாள் ஸ்ரீமான் முத்துசுவாமிஐயர் தம்முடைய குடும்பத்தோடு காரில் பிரயாணம் செய்துகொண்டிருக்கிறார். வழியிலே ஒருகிழவி அவரைப் பார்த்துவிட்டாள். ஐயர் அவர்கள் அவளைக் கவனிக்கவில்லை. ஆனால் அவள் கவனித்துவிட்டாள். வளர்த்த உரிமையைப் பாராட்டி 'அடே முத்துசாமி' என்று உரக்கக் கத்தினாள். "யாரடா இது, நம்மை ஒருமையிலே பெயர்சொல்லி அழைப்பது" என்று திகைத்தவராக, உடனே காரை நிறுத்தி, யார் என்று பார்த்தார். தன்னை வளர்த்தவள். உடனே 'அம்மா நீதான் என்னைப் பெயர்சொல்லி அழைக்க இப்போது இருக்கின்றாய். உனக்கு நமஸ்காரம்' என்று சொல்லி

சாஷ்டாங்கமாக வீழ்ந்து நமஸ்காரம் செய்தாராம். வாஸ்தவந்தான். "டில்லிக்கு ராஜாவானாலும் தல்லிக்கி பிட்டா" தானே? அம்மாதிரியான ஓர் சம்பவம் ஸ்ரீ சிவம் அவர்களின் கைலாச யாத்திரையின் போது நிகழ்கின்றது.

சுமார் எண்பத்தைந்து வயதிருக்கும். ஒரு கிழவி. ஔவையாரம்மாள் என்ற பட்டப்பெயரைப் பெற்றவள். ஸ்ரீ சிவம் கைலாச யாத்திரதாரியாக இருக்கும் கோலத்தைப் பார்த்தாள். "அப்பா, அடே சாமி, நான் எடுத்து வளர்த்தவன் தானேடா. நான் போகுமுன்னே நீ கைலாச யாத்திரையா" என்று அழ ஆரம்பித்துவிட்டாள். ஸ்ரீ சிவம் கையமர்த்தினார்.

இன்னொரு விபரீதமான சம்பவம். எல்லாம் ஸ்ரீமதி சிவசிவா பாட்டியால்தான் பர்த்தா இருக்கின்ற காட்சியை அவரால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. கணவன் பிரிகிறதானாலும் ஏகாதசி அன்று பிரிந்துவிட்டால் நலம். ஏனென்றால் ஏகாதசியில் பிரிந்து துவாதசியில் தகனம் ஆனால் புண்ணியம் என்ற நம்பிக்கை. ஆகவே ஸ்ரீ சிவம் அவர்களைப் பார்த்து, "இன்னிக்கு ஏகாதசி. போகிறதானா இன்னிக்கே போயிடுங்கோ" என்று, பர்த்தா புண்ணியம் அடையவேண்டும் என்ற பரிவோடு வேண்டிக்கொள்கின்றார். ஏதோ மோட்சத்திற்குப் போகிறதென்றால் மதராசுக்குப் போகிறமாதிரி போலும்! இம்மாதிரியான பிறவிக் குணத்திற்கு யார்தான் மட்டை வைத்துக் கட்ட முடியும்? பக்கத்தில் உள்ளவர்களெல்லோரும் கண்டிக்கத் தொடங்கினார்கள்.

மற்றும் ஒரு வேண்டாத சம்பவம். திருவாங்கூர் சமஸ்தானத்திலிருந்து அடிகளுக்குச் சில வரிசைகள் மாமூலாக வழங்கப்பட்டு வந்தன. அவைகளை என்றும் வாரிசுதாரராகப் பெறவேண்டுமென்ற பெருநோக்கத்தோடு உயில் ஒன்றை எழுதி, அதில் கையெழுத்திட்டுத் தரும்படி கேட்கிறார் பக்தருடைய இரண்டாவது புதல்வர்.

இந்த இடத்தில ஒரு சம்பவம் ஒன்று ஞாபகத்திற்கு வருகிறது. பாலக்காட்டிலே சில வருஷங்களுக்குமுன் ஒரு பெண்மணி இறந்துவிட்டாள். அவளுடைய உடம்பைச் சுடலையில் இட்டு உற்றாரும் உறவினரும் எரித்துக்கொண்டிருக்கிறார்கள். அப்போது ஒருவன், சுருட்டுப்பற்றவைக்க நெருப்பில்லாது ஈமத்தீயிலிருந்து ஒருகொள்ளியை எடுத்துப் பற்றவைத்தானாம்*. சுருட்டுப் பற்றவைத்தவன் செயலை நிகர்த்ததே இரண்டாவது புதல்வருடைய செயலும்.

உயிலை பக்தர் கண்டார். "ஓஹோ, கைலாசத்திற்குச் சீட்டோ இது? தம்பூர்க்கட்டை உண்டு. புஸ்தகம் உண்டு. வேணுமானால் பிழையுங்கள்" என்று சொல்லி உயிலைக் கிழித்து எறிந்துவிட்டார்.

ஆண்டவனுடைய கட்டளை பிறந்தும் கைலாச யாத்திரைக்குச் சித்தமாக அமர்ந்தும், இன்னும் உலகபந்தத்தின் படையெடுப்பு ஓய்ந்தபாடில்லை அல்லவா? மனைவியோ

*இதைச் சொன்னவர், இறந்துபோன பெண்மணியின் புதல்வரும் எனது சகோதர ஆசிரியருமான, ஸ்ரீமான் [A. K. G. Nair. M. A., Lecturer in English, The M. D. T. Hindu College]

தோளைப்பிடித்துக் குலுக்கவருகின்றார். போதாக்குறைக்கு 'இன்றைக்கே போய்விடுங்கள்' என்கிறார். கிழவியோ மார் தட்டி அழுதுகொண்டிருக்கிறாள். மகனோ வேண்டாத தைச் செய்கிறார். வேண்டாததைச் சொல்கின்றார். ஆனாலுந்தான் என்ன? நெருப்பைப் புழு அரித்துவிடுமா?

இன்னும் சில்லறை நச்சு ஓயவில்லை. வெள்ளி கடந்தது. சனி கடந்தது. ஞாயிறும் கடந்தது. திங்களும் வந்து விட்டது. மணி நாலும் ஆகிவிட்டது. இன்னும் பக்தர் இருந்த நிலையிலேயே இருக்கின்றார். முதியோர்களுக்கு விபூதியை அள்ளி வழங்குகின்றார். இளையோர்களுக்கு விபூதியும் காசும் அள்ளி வழங்குகின்றார். யாத்திரைக் குரிய ஒரு அறிகுறியையும் காணவில்லை. வானத்திலிருந்து பூ மழை பொழியவில்லை. வலவன் ஏவா வானஊர்தி வர வில்லை. எமனைக் காணவில்லை. பாசக்கயிற்றையும் காண வில்லை. மணிதன் சொன்னபடி கைலாசம் போவதென்றால் கைலாசமென்ன அத்தனை கிள்ளுக் கீரையா? இளைய மகனால் பொறுக்கமுடியவில்லை. "அண்ணே, மணி நாலு ஆச்சு. உங்களுக்கென்ன நாலேணி கட்டி இறக்கப்போகிறாரா கடவுள்" என்று கேட்டுவிட்டார். அத்தனை அவநம்பிக்கை. மேலும் பொய்த்துப்போய்விட்டால் ஊர் சிரிக்குமே என் னும் வியாகூலம். "இன்னமும் தெரியலையே உங்களுக்கு! உண்மை விளங்கலையே! விளங்காது. எல்லாம் புஸ்தகத்தைப் பார்த்து அழுவீர்கள்" என்று மட்டிலும் பதில்சொல்லி நிறுத்தினார்.

மணி நான்கின் எல்லையைத் தாண்ட ஆரம்பித்துவிட் டது. இருக்கிறவர்களிடையே ஒரே பரபரப்பு. பள்ளிக்

கூடங்களெல்லாம் விடுமுறை. ஏன்? சிவம் கைலாசயாத்திரை போகிறார். சர்க்கார் காரியாலயத்திலும் விடுமுறை. ஏன்? சிவம் கைலாசயாத்திரை போகிறார். கூட்டமோ எள்ளைப்போட்டால் எள்ளெடுக்க முடியாது.

ஆபத் சந்நியாசம் வழங்கவேண்டுமென்ற ஆசையைத் தெரிவித்து *மன்னர் ஆள் அனுப்புகின்றார். 'நியாசம் ஆச்சு' என்று பக்தர் பதில் எழுதி அனுப்புகிறார். நேரம் ஆகஆக வண்டி வண்டியாக வந்து குவிகின்றன பிச்சிப்பூக்கள். கண்ணி தொடுப்பாரும் மாலை கட்டுவாரும் மளமளவென்று வேலைபார்த்து வருகின்றனர். புஷ்பப் பல்லக்கு தயாராகின்றது. கன்னியரும் மங்கையரும் சூழ்ந்துவிட்டனர். எண்ணிறந்த வெறுங்குடங்கள் தெருவெங்கணும் குவிந்துவிட்டன. மாலைவேளையும் வந்துவிட்டது. பெண்கள் எல்லோரும் திரண்டு கரமனை ஆற்றையே வற்றவைக்கின்றனர். நீர் தெளிப்பார் ஒரு சாரார். நிறைகுடம் வைப்பார் ஒரு சாரார். கோலங்கள் இடுவர் ஒரு சாரார். குத்துவிளக்கேற்றுவர் ஒரு சாரார். எங்கும் தீபம். எங்கும் நிறைகுடம். எங்கும் மலர்மாலை. பார்ப்பவர்களுக்கு மண்ணுலகா பொன்னுலகா என்ற மயக்கம். வேதமுழக்கம் ஒருபக்கம். தேவார திருவாசக முழக்கம் மற்றொரு பக்கம். சிவநாம பஜனை இன்னொருபக்கம். வந்தவர் போனவர் வாயிலிருந்து எழுந்த துதிமுழக்கம் ஒரு பக்கம். கடல் ஒலியும் பின்னிடும்படி எழுகின்றது எல்லோர் செய்த முழக்கமும்.

எல்லோரும் பக்தர் பக்கம் திரும்புகின்றனர். மணியும் நாலரையாகப்போகின்றது. பிரதோஷகாலம். சிவன் நடனமிடும் வேளையல்லவா! பக்தர் மலர் வாய்திறக்கின்றார்.

* திருவாங்கூர் மன்னர்.

"இன்னந்தான் இரக்கமில்லாததேனோ? எளியேனுக்கு
உன்னதருள்தான் ஒளித்துக்கொண்டதோ?
அன்னை உமா நாயகனே, அன்பர்அருள் பூரகனே,
மின்னுமதி சேகரனே, வேதாந்தத் துட்பொருளே"

என்று தவிக்கின்றார். இதோ $4\frac{1}{2}$ ஆகிவிட்டது.

"*பொன்னு, சிரசைப் பார்த்துக்கோ"
'மகாதேவஜய, மகாதேவஜய, மகாதேவ'

கோடானுகோடிப் பாடல்களைப் பாடி அமுது உகுத்த அழகியவாய் அடங்கிவிட்டது. சிரசிலே ஒரு அங்குலக் கோடு தோன்றுகிறது. கைலாசயாத்திரை சென்றுவிட்டார். முக்தியை அடைந்துவிட்டார். திருநீலகண்ட அகண்டநாமம் வாழி.

* அடிகளின் மூத்த மகன்.

வாழ்த்து.

1 தொல்லைப் பிறவித் துயர்களைந்து தூயசிவச்
செல்வந் தலைக்கொண்ட தேசிகனை வாழ்த்துவமே.

2. பாடல் பலபாடிப் பாரோர் மனங்கவர்ந்த
தேடற்(கு) அரிய சிவனருளை வாழ்த்துவமே.

3 சைவப் பயிர்ஈண்டு தட்டாதே ஓங்கமழை
பெய்விக்க வந்த பெருமானை வாழ்த்துவமே.

4. ஊனுடம்பை இச்சித்து உண்மை தடுமாறும்
மானுடரைக் காக்கவந்த மாமணியை வாழ்த்துவமே.

5. நில்லாப் புகழை நிலைத்த புகழாக்கிச்
சொல்லால் உலகளந்த சுந்தரனை வாழ்த்துவமே.

ஆசிரியன்.

MARAIMALAI ADIGAL

குறிப்பு

இந்நூலை இந்தவடிவில் எழுதுவதற்கு வேண்டிய விஷயதானம் செய்தவர் மகான் நீலகண்டசிவம் அவர்களின் அருமைப் புதல்வியாராகிய பார்வதி அம்மாள் அவர்களும் அவர்களுடைய குடும்பத்தாரும் ஆவர். அவர்கள் அனைவருக்கும் எனது நன்றி அறிதலான வணக்கத்தை உரிமையாக்குகின்றேன்.

நாகபுரி (Nagpur) சர்வகலாசாலையிலும், திருநெல்வேலி ம. தி. தா. இந்துகலாசாலையிலும் பொருளாதாரப் பேராசிரியையாக அமர்ந்து சேவைசெய்தவர்களும், தற்போது இலங்கையில் சென்று கல்விப்பணியாற்றி வருபவர்களும் ஆகிய ஸ்ரீமதி சாரதாம்பாள் M. A., (அடிகளுடைய மகள்வழிப்பேத்தி) அவர்கள் நான் அவ்வப்போது எழுதி முடித்த பகுதிகளைப் பரிசீலனைசெய்து, வேண்டும் இடங்களில் திருத்தமும் விளக்கமும் தந்து உதவி செய்துள்ளார்கள். அவர்களுக்கும் எனது நன்றியை உரிமையாக்குகின்றேன்.

ஆசிரியன்.